

KALKI. 18.3.84
ரூ.1.20
கல்கி



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**
  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.
- **நிவாரணம்**
  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது. இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.
- **செயல்**
  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கெரடோலிடிக் செயல் உள்ளது: அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாசு மருவற்றதாக்குகிறது.





Johnson & Johnson

OBM-2515 TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.

பஞ்சாப்

அகாலிகள்

சீக்கிய மதப் பீடாதிபதிகளும், அவர்களுடைய சிஷ்ய கோடிகளும், அமிர்தசரஸ் பொற்கோவிலில் தலைமைப் பீடம் வைத்துக் கொண்டு குருத்துவாராக்களையும் மதம் மற்றும் அரசியல் விவகாரங்களையும் நடத்தி வருகின்றனர்.

அகாலிதளம்

அகாலிகளின் அரசியல் கட்சி. 1977–80–ல் பிரகாஷ்சிங் பாதல் தலைமையில் பஞ்சாபில் ஆட்சி அமைத்தது. இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்ததும் டிஸ்மிஸ் செய்து தேர்தல் நடத்தினார். காங்கிரஸ் கட்சி வென்று ஆட்சி அமைத்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பு அகாலி கிளர்ச்சியைச் சமாளிக்கத் திராணியில்லை என்று தன் கட்சி அரசையே கலைத்து விட்டு ஜனாதிபதி ஆட்சிப் பிரகடனம் செய்தார் பிரதமர் இந்திராகாந்தி.

அகாலி போராட்டம்

1947–ம் ஆண்டிலிருந்தே ஒன்றில்லாவிட்டால் இன்னொரு கோரிக்கையை வைத்து அகாலிகள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். 1966–ல் பிரதமர் இந்திரா பதவியேற்ற பிறகு இவர்கள் போராட்டத்திற்கு இணங்கி ஒவ்வொன்றாக நிறைவேற்றி வந்தும் புதிய புதிய கோரிக்கைகள் முன்வைத்து அவற்றின் மீது போராட்டங்கள் நடந்து வருகின்றன. பஞ்சாபி மொழிக்கென்று 'பஞ்சாபி சுபா' ஏற்பட்டு ஹரியானா மாநிலத்தைப் பிரித்தபின் அதையொட்டிய கோரிக்கைகள், போராட்டங்கள்முளைத்திருக்கின்றன. முக்கியமானது தலைநகர் சண்டிகார் பிரச்னை. இருமாநிலங்களுக்கும் பொதுத் தலைநகராக யூனியன் டெரிடரி (மத்திய அரசு நிர்வாகப் பிரதேசம்) என்ற அந்தஸ்துடன் இருக்கும் இந்த நவீன நகரம், பஞ்சாபுக்கே சொந்தமாக வேண்டும் என்று அகாலிகள் போராடி வருகின்றனர். 1970–ல் ஒரு மாபெரும் போராட்டத்திற்குப் பிறகு இந்திராகாந்தி சண்டிகார் பஞ்சாபுக்கே போகட்டும், அதற்கீடாக பாஸில்கா, அபோர் ஆகிய பஞ்சாபைச் சேர்ந்த ஹிந்தி பெரும்பான்மைப் பிரதேசங்கள் ஹரியானாவுக்குத் தரப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார். அதனை அமுலாக்க ஒரு எல்லைக் கமிஷனையும் நியமிப்பதாக வாக்களித்தார். ஆனால் ஹரியானா மற்றும் பஞ்சாப் காங்கிரஸ் கட்சிகள் முட்டுக்கட்டை போட்டதினால் சண்டிகார் பற்றிய முடிவு இதுவரை அறிவிக்கப்படவே இல்லை.

இரண்டாவது பிரச்னை, பஞ்சாபில் ஓடும் ராவி–பியாஸ் நதி நீர் பங்கீடு பற்றியது. இதில் கணிசமான அளவுக்கு ஹரியானா சொந்தம் கொண்டாடுகிறது. இந்நதி நீர் மீது முன்னுரிமை பஞ்சாபுக்கே என்று அகாலிகள் வாதிடுகின்றனர். மற்றும் சீக்கிய பக்தி இசை (குர்பாணி) ஒலிபரப்பவென்று தனியாக ரேடியோ நிலையம், அமிர்தசரஸ் கோயிலைச் சுற்றி சிகரெட் முதலான லாகிரி வஸ்துக்கள் விற்பனைக்குத் தடை, இவை தவிர, இருபது அகாலி கோரிக்கைகள் இருக்கின்றன. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்திராகாந்தி ஒரு முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். ஆனால் பிப்ரவரி 14–ந் தேதி நடந்த வன்முறை கலகத்தினால் பேச்சு வார்த்தைகள் முறிந்துவிட்டன.

அரசியல் சட்டம்

கோரிக்கைகளில் இப்போது புதிதாக அதிகம் பேசப்படுவது இந்திய அரசியல் சட்டத்தின் 25–வது பிரிவு, ஹிந்துக்கள், என்னும் போது சீக்கியர், ஜைனர், பௌத்தர் ஆகிய மதத்தினரையும் குறிக்கும் என்று இந்தப்பிரிவில் எழுதி இருக்கிறது.

○ ஹரியானா பந்த் சமயத்தில் விஷமிகளைப் போலீஸார் சுற்றி வளைத்துக் கைதுசெய்து அழைத்துப் போதல்



கல்கி


ஏப்ரல் 15௳

சித்திரைச் சிறப்பிதழ்

நா.பார்த்தசாரதி

எழுதும்

தொடர் கதை



இல்லறம் எனும் நல்லறம்

இலவச இணைப்பு

தெய்வ தரிசனம் - ஆனந்தி

எழுதும் தொடர் கட்டுரைகள்

முழுநீள நாவல், மற்றும் பல புதிய பகுதிகள்



பஞ்சாப் பந்த் தினத்தில் தங்கக் கோவில் நுழைவாயிலும் தெருவும் வெறிச்சோடிக் கிடக்கும் காட்சி.



பிரகாஷ் சிங் பாதல் டெல்லி போலீஸாரால் கைது செய்து அழைத்துப் போகப்படுகிறார்.

அகராதி

சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் சம்பந்தமில்லை. இந்த அரசியல் சட்டப் பிரிவைத் திருத்துவதோடு, முஸ்லிம்களுக்கு இருப்பது போலச் சீக்கியர்களுக்கும் தனி சட்டம் (Personal Law) வேண்டும் என்பது அகாலிகளின் கோரிக்கை. 25–வது பிரிவைக் கண்டிக்கும் வகையில் அகாலிக் கட்சித் தலைவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தினார்கள்.

அகாலி தலைவர்கள்

லோங்கோவால் என்பவர் மிதவாதி. தேர்ந்தெடுக்கப்பட்ட அகாலி தலைவர் இவர்.

பிந்தரன்வாலே என்பவர் தீவிரவாதி. தல் கால்ஸா என்ற அமைப்புக்குத் தலைவராக இருக்கிறார். அமிர்தசரஸ் கோவிலுக்குள்இருந்து கொண்டு பிரிவினை வாதம் செய்கிறார். இந்துக்களுக்கெதிரான வன்முறைகளைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார். இவரைக் கைது செய்ய ஆட்சிக்குத் துணிவில்லை. அமிர்தசரஸ் கோவிலுக்குள் போலீஸ் நுழையக் கூடாதாம். நுழைந்தால், 'பஞ்சாபே பற்றி எரியும்' என்று அகாலிகள் எச்சரித்துள்ளனர். பிந்தரன்வாலேயின் தீவிரவாதம் 'காலிஸ்தான்' கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் சுதந்திர சீக்கிஸ்தானுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் மற்றும் ஆயுத உதவிகள் தாராளமாகக் கிடைத்து வருகின்றனவாம்.

இந்து ரக்ஷா சமிதி

இது, அகாலி தீவிரவாதத்திற்கு எதிரடி கொடுக்கப் புறப்பட்டுள்ள பஞ்சாப், ஹரியானா தீவிர இந்துக்களின் அமைப்பு. அகாலிகள் பஸ்களை நிறுத்தி இந்துக்களைச் சுட்டுக் கொன்றது, இந்துக்கடைகளைத் தாக்கியது, வீடுகளை எரித்தது, இந்துக் கோவில்களையும் தெய்வங்களையும் அவமதித்த செயல்கள் ஆகியவற்றினால் உணர்ச்சிவசப்பட்டுப் பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது இந்தச் சமிதி.

சீக்கிய இந்துக் கலகங்கள் வெடித்து இரண்டே வாரங்களில் குறைந்த பட்சம் 50 பேர்கள் மாண்டனர்.

சீக்கியர்கள்


70 கோடி இந்திய ஜனத்தொகையில் சீக்கியர் ஒரு கோடி. அதாவது மொத்த ஜனத்தொகையில் 2 சதவிகிதத்திற்கும் குறைவு. பஞ்சாபில் மட்டும் பெரும்பான்மையுள்ள சமூகம். (அதுவும் 51 சதவீதம்தான்.) இந்திய ராணுவத்திலும் (8 சதவிகிதம்) ஜனாதிபதி பீடத்திலும், மத்திய அரசிலும் வட இந்திய நகர டாக்ஸி ஓட்டும் தொழிலிலும் சீக்கியர் செல்வாக்கு ஓங்கி இருக்கிறது. இந்திராகாந்தியின் (வேண்டாத) மருமகள், மேனகா சஞ்சய் காந்தி, சீக்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரும்பான்மை சீக்கியர் தேசிய கண்ணோட்டத்துடன், சிறந்த இந்தியப் பிரஜைக

பானிபட் கலகப் பிரதேசத்தில் எல்லைக் காவல் படையைச் சேர்ந்த வீரர் ரோந்து.



ளாக இருக்கின்றனர். இவர்கள் சீக்கிய மதமே இந்து மதத்தைப் பாதுகாக்கத் தோன்றியதுதான் என்பதை மறவாதவர்கள். பஞ்சாபில் இந்துக்களுடன் ரத்த சம்பந்தமும் நல்லுறவும் கொண்டவர்கள். மிக மிகச் சிறுபான்மையினரான அகாலி தீவிரவாதிகளே பிரிவினை முதலான தகாத கோரிக்கைகளை எழுப்பிவிடுகின்றனர். அகாலித் தலைமையை மிதவாதிகளிடமிருந்து பறித்துக் கொண்டு சீக்கிய குருத்வாராக்களையும் சமூகத்தையும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமென்பது தீவிரவாதிகளின் தலைவர் பிந்தரான்வாலேயின் நோக்கம்.

சீக்கியரின் முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்களித்து விட்டு, கட்சி, சுயநலநோக்



கில் ஒன்றும் செய்யாமல் இருந்து விட்ட மெத்தனம் தான் தீவிர அகாலிகள் இந்த அளவுக்குத் துளிர் விட்டுத் தழைத்திருப்பதன் காரணம். இன்று அஸ்ஸாமைப் போல் பஞ்சாபும் தீர்க்க முடியாத பிரச்னைக்குரிய பிரதேசமாகிவிட்டது. பஞ்சாப் பிரச்னை இந்து–சீக்கிய மோதலில் முடிந்திருப்பது மேலும் விசனத்துக்குரியது.

அராஜகப் பாதையில் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் ஆள்பவர்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்க, அரசையோ, அரசியல் வாதிகளையோ நம்பிப் பிரயோஜனமில்லை என்று மக்களே முன்வந்து இந்து சீக்கியர் நல்லுறவை மீண்டும் நிலைநாட்டும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

சென்ற வாரம் வழக்கறிஞர்களும், அன்னிய மாநிலங்களிலிருந்து வந்த சமூகத் தொண்டர்களும், இருதரப்பு மக்களையும் இரட்டி விதிவிதியாக

செய்தி வெடிகள்




- சத்துணவுத் திட்டத்தைக் காஷ்மீரில் அமுல்படுத்துவோம். —பாரூக் அப்துல்லா.
- அத்துடன் 'டால் ஏரியை'ப் 'பெரியார் ஏரி' என்று பெயர் மாற்றம் செய்வாரா?
- முருங்கை இலையை உரலில் போட்டு இடித்துச் சாறு பிழிந்து தேய்த்தால், இடுப்பு வலி குறையும். —ஒரு வைத்தியர்.
- இருக்கிற இடுப்பு வலியோடு முதுகுவலி, முழங்கைவலி, உள்ளங்கைவலி எல்லாம் சேருமே!
- வீட்டில் ஈத்தொல்லை இருந்தால், தண்ணீரில் உப்பைக்கலந்து தரையைக் கழுவவேண்டும். —ஒரு யோசனை.
- 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்று ஈக்கள் நகராமல் உட்கார்ந்து விட்டாலோ?
- மனிதனுடைய தலைமுடியில் செம்பு, துத்தநாகம், தங்கம் ஆகிய உலோகங்கள் உள்ளன. —ஓர் ஆராய்ச்சி.
- 'என் தலை முடியில் வெள்ளியே இருக்கிறது!' என்கிறார் ஒரு தும்பைப் பூத் தலையர்!
- இப்போது வரும் புது நடிகைகளுக்குக் கண் இருக்கவேண்டிய இடத்தில் காதும், காது இருக்க வேண்டிய இடத்தில் கண்ணும் இருக்கிறது. அழகு எப்படி இருக்கும்? —ஒரு பழைய நடிகை.
- இப்படி இவருக்கு உடம்பெல்லாம் வாயாக இருக்க வேண்டாம்!
- அகாலிதளத்தின் கிளர்ச்சிகள் அமைதியாகவே நடைபெறுகின்றன. —பாதல்.
- அதாவது மயான அமைதியாக!

—மகரம்.

அப்துல்லா செய்வாரா?



வாரம் ஒரு புத்தகம்



ஆழ்கடலின் அற்புதங்கள் அதன் முத்தும், பவளமும், இயற்கைச் செல்வங்களும் மட்டும் அல்ல. அந்தக் கடலில் மனிதன் கப்பல் ஓட்டியதும் திரைகடல் ஓடித் திரவியம் தேடியதும், ஆர்ப்பரிக்கும் அலைகளின் நடுவே யுத்தம் செய்ததும் கூட அற்புதங்கள் தான். இந்த அற்புதங்களை— குறிப்பாகக் கடற்போர் பற்றிய அனுபவங்களைத் தொகுத்

கடல், கப்பல், கடற்போர்

தளிக்கிறது **புகழ் பெற்ற கடற்போர்கள்** என்னும் நூல். ஆசிரியர் **வி. என். சாமியின்** முயற்சி பாராட்டுக்குரியது. அவர் பல துறைகளையும் ஆய்ந்து சேகரித்துள்ள ஆயிரக் கணக்கான தகவல்கள் எல்லாமே சுவாரசியமானவை. கண்ணுக்கு விருந்தாய் உள்ள இப்புத்தகத்தின் பதிப்பாளர் —**தமிழ்க் கடல் பதிப்பகம்!**

நூலிலிருந்து சில சுவையான தகவல்கள்:

இலக்கியம்:

அழுவம், ஆழி, ஓதம், பரப்பு, பரப்பகம், பரவை, புணரி, பௌவம், திரைக் கரம், நீர், நீரகம், முதுநீர், முந்நீர், கார்கோள்— இவை கடலைக் குறிக்கும் பழந்தமிழ்ப் பெயர்கள்.

சட்டம்:

பொதுமைக் கடலில் செல்லும் கப்பல்கள் தங்கள் நாட்டுக் கொடியைத்தாங்கியிருக்க வேண்டும். ஓர் அரசின் கொடியைத்தாங்கிச் செல்லும் கப்பல் அவ்வரசின் நிலப் பகுதியாகவே கருதப்படும். ஆதலால், அதில் குழந்தை பிறந்தாலும், குற்றம் நிகழ்ந்தாலும், ஒப்பந்தமோ, உயிலோ எழுதினாலும், அவை அந்த அரசின் சட்டங்களுக்கு உட்பட்டவை.

கர்ண பரம்பரைச் செய்தி:

மினுஸ் என்பவரே முதன் முதலாகக் கடற்படை ஒன்றை அமைத்தவர். இதைக் கொண்டு சைக்ளெடீஸ் என்னும் தீவுக் கூட்டத்தில் இருந்த கடற் கொள்ளையரை அவர் ஒடுக்கினார்.

விவரங்கள் சேகரிப்பு:

கப்பலைப் பழுது பார்க்கும் கூடத்தில் உதிரி உறுப்புக்கள் விநியோக நிலையம் ஒன்று இருக்கிறது. கப்பலில் பயன்படுத்தப்படும் எண்பதாயிரம் உறுப்புக்களையும் எளிதில் எடுத்துக் கொடுக்கக் கூடிய வகையில் இந்த நிலையத்தினர் ஒழுங்காகப் பிரித்து வைத்துள்ளனர்.

ஆராய்ச்சி:

திருச்செந்தூர் கோயிலில் இருந்த திருமணி விளக்கான கலங்கரை விளக்கம், கடலில் செல்பவர்களுக்கு உறுதுணையாகச் சங்க காலத்திலிருந்தே விளங்கியதால் ''செட்டியார் கப்பலுக்குச் செந்தூரானே துணை'' என்ற பழமொழி தமிழிலும் மலையாளத்திலும் இன்னும் வழங்கி வருகிறது.

லேட்டஸ்ட் நியூஸ்:

ஃபாக்லாந்து போருக்குப் பிறகு அமெரிக்கா தனது கப்பற்படைக்கு 340 ஸீ ஹாரியர் விமானங்களை வாங்கத் தீர்மானித்தது. பிரிட்டிஷ் — அமெரிக்கக் கூட்டுத் தயாரிப்பு உடன்படிக்கை ஒன்றும் கையெழுத்தாகியுள்ளது.

-எஸ்ஸார்

விற்பனை உரிமை: அபிராமி பப்ளிகேஷன்ஸ், 307, லிங்கிச் செட்டித்தெரு சென்னை—1, விலை: ரூ.60.

அமைதி ஊர்வலம் போனார்கள். ரத்தவெறிக் காளாகிய கிராமங்களிலும், சிற்றூர்களிலும் அமைதி கோஷம் எழுப்பியபடி, ஆயிரக்கணக்கான மக்கள் நடந்து சென்றனர்.

கோயில்களுக்கும் குருத்வாராக்களுக்கும் சென்று அமைதிக்காகப் பிரார்த்தனை செய்தனர்.

''நம்மைச் சுற்றி நிகழும் சம்பவங்களைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்க முடியாது'' என்ற ஒரே வாசகத்தை மட்டும் அட்டையில் எழுதி உயரப் பிடித்துச் சென்றார்கள்.

அமிர்தசரஸின் பிரஜைகள் ''பிராயச்சித்த தினம்'' ஒன்றை அனுஷ்டித்தனர்.

ஹிந்து— சீக்கிய நல்லுறவு அடியோடு குலைந்துவிடாமல் இருக்கப் பொது மக்களே முன்வந்து செய்யும் முயற்சிகள்தாம் பஞ்சாப் நிலைமை சீர்திருந்தும் என்பதற்கான ஒரே நம்பிக்கையாகும்.

புகைப்படங்கள்:

வி. எஸ். ராமநாதன்

ஒரு மின்விசிறி, தினமும்
தொடர்ந்து மணிக்கணக்கில்
ஓடிக்கொண்டிருந் தால்,
யார் அதன் மோட்டாருக்கு
உத்தரவாதம் தருவார்கள்?



நாங்கள் தருகிறோம்.

'பஜாஜ்' முத்திரையிடப்பட்டிருந்தால், எந்த மின் விசிறியும் எத்தகைய கடுமை யான உபயோகத்தையும் தாங்கும் என நீங்கள் நிச்சயமாக நம்பலாம். மிகச் சீரிய ட'சாப் பொருட்கள் மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. அதோடு அதிநவீன டிசைன். தொழில்நுட்பப் பின்பலம் வாய்ந்தது. எனவே ஆண்டாண்டாக ஓசையற்று ஓடும்.

நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவம் வாய்ந்த மிகச் சில கம்பெனிகளில் ஒன்று பஜாஜ். ஒவ்வொரு பஜாஜ் படைப்பிலும் இந்த அனுபவ முத்திரை பளிச்சிடும். அதோடு, 3500க்கும் மேற்பட்ட விற்பனை மற்றும் சர்வீஸ் நிலையங்கள் கொண்ட மிகப்பெரிய விற்பனையாளர் படையையும் பின்பலமாகக் கொண்டது.


இதுபோன்ற காரணங்களாலேயே இன்று இந்தியாவில் இல்லங்கள்தோறும் எல்லோருக்கும் தெரிந்த பெயராகிவிட்டது

bajaj

**சிறந்ததையே வாங்குவீர்–
பஜாஜ் வாங்குவீர்.**

Hero's-BE-743 TAM

பஜாஜ் ஸுப்பர் ஃபேன், சீலிங், டேபிள் மற்றும் பெடஸ்டல் மாடல்கள், பஜாஜ் பியூட்டி ஃபேன், பஜாஜ் எக்ஸாஸ்ட் ஃபேன்.


சட்டம்
நீதி
அந்துலே
இ·காங்கிரஸ்
எம்.எல்.ஏக்கள்


வருகிறது!
வருகிறது!
பஞ்சாயத்து
தேர்தல்


சாப்பிடு கண்ணு!
15 வயதுக் குழந்தைகள்
சத்துணவு திட்டம்



1984 மார்ச் 18
ருத்ரோத்காரி பங்குனி 5
மலர் : 42 இதழ் : 33

கல்கி

செருப்புக்கு ஏற்பக் காலை வெட்டுவதா?

சீதாதேவியின் தூய்மை ராமபிரான் அறியாததல்ல. இருப்பினும் அவள் அக்னிப் பிரவேசம் செய்தபின்னரே ஏற்றான். அவனுடைய பரிசுத்தத்தைத் தான் உணர்ந்திருந்தால் போதாது, மக்கள் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான் அவன் நோக்கம். இப்போது ராமனது கடின சித்தத்தைச் சிலர் குறை கூறினாலும் சீதாபிராட்டியிடம் அன்பும், பக்தியும் அதிகரித்தன. இத்தகைய மிக உயர்ந்த பண்பாட்டைப் பாரத நாட்டில் அண்மைக் காலம் வரை கூடப் பலர் கடைப்பிடித்துவந்தனர். அரியலூர் ரயில் விபத்து – சாஸ்திரி ராஜினாமா; முந்த்ரா விவகாரம்— டி. டி. கே. பதவி துறப்பு என்று பல உதாரணங்களைக் கூறலாம். ஆனால் அலகாபாத் தீர்ப்பை இந்திராகாந்தி உதாசீனம் செய்து தன்னிச்சையாக நடந்து கொள்ளத் தீர்மானித்ததைத் தொடர்ந்து வேறு பல அரசியல்வாதிகளின் போக்கிலும் விபரீத மாறுதல் ஏற்பட்டது. குற்றம் சுமத்தப்பட்டாலே அவமானம்; சந்தேகத்துக்கு இடமளித்தாலே இழுக்கு என்று கருதி வந்த காலம் போய், என்னவானாலும் சரி, பதவியை விடுவதில்லை; எவ்வளவுதான் குற்றங்கள் சுமத்தப்பட்டாலும் வெட்கம், மானம் இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள், ஆனால் சிலர் மட்டும் மாமன்னர்கள்; வேறு சிலர் சக்கரவர்த்திகள் என்ற தாரதம்மியம் தோன்றியது. சிலரை மட்டும் சட்டம் ஏதும் செய்யாது, வழக்குத் தொடுக்கவும் முடியாது என்ற சலுகையை அந்த ஒரு சிலர் தங்களுக்குத் தாங்களே வழங்கிக் கொண்டனர்! இதுவே வெட்கக்கேடு என்றால் இப்போது இத்தகைய சலுகை எம். எல். ஏக்களுக்குக் கூட விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற முயற்சி அந்துலே விவகாரத்தையொட்டி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது ஜனநாயகத்தின் அடிப்படையையே பரிகசிப்பதாகும். அந்துலே குற்றமற்றவராக இருந்தால் அவர் ஏன் நீதி விசாரணைக்கு அஞ்ச வேண்டும்? சட்டத்தின் முன் அனைவரும் சமமாகக் கருதப்பட்டு எல்லோரும் சட்டத்தை மதித்து நடந்து கொள்ள வேண்டுமே தவிர சிலருடைய வசதிக்காக மட்டும் சட்டம் திருத்தப்படுவதென்பது செருப்புக்கேற்பக் காலை வெட்டுவது போல் தான்.

''அந்துலே எம். எல். ஏ. என்பதால் அவர் மீது வழக்குத் தொடுக்கவோ, விசாரிக்கவோ கூடாது என்பதொன்றுமில்லை; தாராளமாக வழக்கு விசாரணை நடத்தலாம்; துரிதமாக நடத்தவும் வேண்டும்'' என்று அண்மையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததையொட்டி, சட்டத்தையே திருத்தி எம். எல். ஏக்களுக்குச் சட்டத்தின் பிடியிலிருந்து விடுதலை அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது வெற்றி பெற்றால் நாடெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான எம். எல். ஏக்களுக்கு லஞ்ச ஊழல்களில் மனம்போனபோக்கில் ஈடுபட லைசென்ஸ் வழங்கியதாக ஆகும். மகாராஷ்டிர இ. காங்கிரஸ் எம். எல். ஏக்களின் இந்த அநாகரீகமான, அநீதியான கோரிக்கைக்குப் பிரதமர் செவி சாய்ப்பாரேயானால் அந்துலே விவகாரத்தில் இந்திராகாந்திக்கும் பங்குண்டு என்ற குற்றச்சாட்டுக்கும் நிரூபணம் கிடைத்ததாகி விடும்.



அத்தியாயம் 20

போர் முரசு

ராஜ நர்த்தகியின் மாளிகை உப்பரிகை. நிலா முற்றத்தில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்தான் ஆதித்தன். தென்றல் இதமாக வீசியது. கிழக்கே பெரியதொரு செம்பொன் தாம்பாளமாகப் பூரண சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தான். மரங்கள் கருநிழலாக மாறி வந்தன. கூடுகளுக்குத் திரும்ப வேண்டிய நேரம் கடந்து தாமதமாகி விட்டதை உணர்ந்து ஒன்றிரண்டு பறவைகள் அவசரமாகச் சிறகடித்து விரைந்தன.

மெலிதான வெண் துகில் அணிந்து நிலாமுற்றத்தின் சுற்றுச் சுவர் ஓரமாக நின்று சந்திரோதயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அபிமானவல்லி. தென்றல் அவள் கேச இழைகள் சிலவற்றையும், மேலாடையையும் அலைப்புறச் செய்தது. ஆதித்தன் இதயமும் அவற்றுடன் சேர்ந்து படபடத்தது. இந்த எழில் பாவையிடம் தொடர்பை அவன் ஏற்படுத்திக்கொண்டதற்கு அந்தரங்கமான காரணம் இருந்த போதிலும் அந்தக் காரணத்தையும் மீறிக் கவர்ச்சியும் படிப்படியாக அவனை அடிமைப் படுத்தியிருப்பதை அவன் தனக்குள் தானே மறுக்க முயன்று தோல்வி கண்டு வந்தான். இளங்கோப்பிச்சியின் மனம் இதை அறிந்து வேதனையுறும் என்பதை அறியாதவனல்ல அவன். ஆயினும் இவளைக் காண வருவது கவர்ச்சிக்காக அல்ல, கடமைக்காகவே என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு அடிக்கடி வந்து போனான்: உள்ளம் அவனை இதற்காக இடித்துக்காட்டவும் தொடங்கியது. 'கடமையாகத்தான் ஆரம்பித்தது; ஆனால் காமமாக வளர்ந்து வெகு நாளாயிற்று' என்று அவனைப்பழித்த அதே இதயம், இப்போது அவள் திரும்பிப் புன்னகையோடு அவனை நோக்கி வரும் போது படபடக்கவும் செய்தது. மெலிதான வெண் துகிலுக்குப் பின்னால் அவள் உருவம் கருநிழலான வடிவமைப்பில் அவன் கண்களுக்கு விருந்தாகி, சிந்தனையை அழித்து, கிறுகிறுக்க வைத்தது. இதயம் மார்புக் கூட்டின் மீது 'தடக் தடக்' கென்று மோதியது.

''வல்லி! நாளை நான் போர்க்களம் புறப்படுகிறேன்'' என்றான், ஏக்கத்துடன், எதிர்பார்ப்புடன். தொண்டை அடைத்துக் கொள்ளக் குரல் கரகரத்தது.

''பிரபோ! அவ்வாறு சொல்லாதீர்கள்!'' என்று வாயைப் பொத்தினாள், தேவைக்கு அதிகமான நேரம் விரல்களை அவன் உதடுகள் மீதாக உறவாட அனுமதித்தாள். அவள் கரத்தைப் பற்றி மெல்ல விலக்கியவன், இலேசான ஒரு வற்புறுத்தலுடன் இழுக்கவும், குறிப்புணர்ந்த நெடுநாள் காதலி போல் அவன் மடியில் அமர்ந்து கழுத்தைச் சுற்றி வளைத்தாள்.

'' 'இக்ஷணம் கிளம்புகிறேன்' என்று சொல்லுங்கள். வெற்றித் திருமகளின் அழைப்பை ஏற்றுப் போவதாகக்கூறுங்கள்.''

''அன்பே! வெற்றி உறுதி என்பதில் அவ்வளவு நம்பிக்கையா, உனக்கு?''

கன்னங்களை வருடி இரு கரங்களாலும் அவன் முகத்தை ஏந்தினாள். அவன் கண்களை உற்றுப் பார்த்துப் புன்னகைத்தாள். ''ஐயமென்ன பிரபோ! சோழர்களின் அறுநூறு வருட அடிமை வாழ்வுக்குப் பழிக்குப் பழி வாங்கிச் சரித்திரத்தில் ஏற்பட்ட களங்கத்தைத் துடைத்துப் புதிய வரலாறு எழுதப் போகிறீர்கள்! பல்லவேந்திரனைத் தேர்க் காலில் கட்டி, இழுத்து வரப்போகிறீர்கள். தஞ்சைத் தலைநகருக்கு வெற்றிவீரராகத் திரும்புவீர்கள். பட்டணப் பிரவேசத்தின் போது நான் இதே உப்பரிகையிலிருந்து மலர் தூவி வரவேற்பேன்!''

அந்தக் கணத்தில் தன் இடையில் இருந்த குத்துவாளை உருவி அவள் வயிற்றில் இறக்க வேண்டும் என்ற ஆவேசம் ஏற்பட்டது அவனுக்கு. மிகுந்த சிரமப்பட்டு அந்த எண்ணத்தை அடக்கிக் கொண்டு எழுந்தான். ''வல்லி! நானும் உனக்கு ஏமாற்றமளிப்பதாக இல்லை. நீ என்னை வரவேற்று மலர் மாரிப் பொழியும் போது நான் காஞ்சியிலிருந்து கைப்பற்றி வந்த பொற்காசுகளையும் மணிமாலைகளையும் முத்துக்களையும் உன் காலடியில் குவிப்பேன்.... சரி, நான் வரட்டுமா? நேரமாகிறது.''


''பிரபோ! என்ன அவசரம்? இன்று உங்களை அரண்மனை திரும்ப அனுமதிப்ப

பிரான்சு நாட்டிலுள்ள கிராஸி நகரத்தில் ஏராளமான சென்ட் தொழிற்சாலைகள் உள்ளன. இந்த சென்ட் தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் 10 மில்லியன் பவுண்ட் மல்லிகைப் பூக்களும், 3 மில்லியன் பவுண்ட் ரோஜாப்பூ இதழ்களும், 4 மில்லியன் பவுண்ட் ஆரஞ்சுப்பூ இதழ்களும் சென்ட் செய்யத் தேவைப்படுகின்றன. 1 கிலோ ரோஜா எசன்ஸ் தயாரிக்க 5 டன் ரோஜா இதழ்கள் தேவைப் படுகின்றன.

—அரு. சோமசுந்தரம் அவர்களின் 'பிரான்சு' என்னும் நூலிலிருந்து

-தகவல்: ஆ. சந்திரசேகரன்





அபியாளவல்லி

கி.ராஜேந்திரன்

தாக உத்தேசமில்லை!'' என்று கெஞ்சினள், தோள்களில் தொங்கினன். சற்று முன் நிழல் வடிவாகத் தென்பட்ட வடிவழகுகள் இப்போது உயிர்த் துடிப்புடன் அவன் மீது படிந்து பதிந்தன. மாலையைக் கழற்றுவது போல் மென்மையாக ஆனல் உறுதியாக விலக்கி விட்டு, ''இல்லை வல்லி! நாளை கிழக்கு வெளுக்கு முன் புறப்படுகிறேன். சற்று நேரம் கன்னரதேவனுடன் இருக்க வேண்டாமா? சிறுவன், சீக்கிரமே உறங்கி விடுவானல்லவா?''

''மகாராணியும் ஏக்கத்துடன் காத்திருப்பார்கள், இல்லையா?''

''அதுவும் மெய்தான், எங்கே புன்முறுவலுடன் எனக்கு விடை கொடு!''

''சென்று வாருங்கள் அரசே! போர்க்களத்திலும் அடியாளை மறவாதீர்கள்!'' என்று பாதம் பணிந்தாள். அவளை எழுந்திருக்கச் செய்து, ''நீ என்றும் என் அபிமானவல்லி'' என்று கூறி, பிரியும் முன் இறுதியாக ஒருமுறை இதழோடு இதழ் சேர்த்தான்.

நன்கு வளர்ந்து விட்ட பாலன் ஆயினும் குழந்தை போலத் தூக்கிக் கன்னரதேவனின் கன்னங்களை முத்தமிட்டான் ஆதித்தன். இறங்க அனுமதியாமல் நெஞ்சுயரத்திற்கு ஏந்தி நிற்கவும் இளவலுக்கே வெட்கமாய் இருந்தது. ''சென்று வரட்டுமா தேவா?''

''வென்று வருவீர்கள் அப்பா!'' என்றான் மகன். ''உங்களுக்காக நான் தினம் நாலு வேளையும் பிரார்த்திப்பேன். 'ஐயா! என் அமுதே! எனக்கு யார் துணை நீயலதே!' என்று மனமுருகி அவனிடமே என்னை ஒப்புவித்துக் கொண்டால் அவன் உங்களைப் பத்திரமாக என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடுவான்!''

''பிச்சி! எத்தனை அழகாகப் பேசுகிறான் பார், நம் மைந்தன்!'' என்று அவளை வலக்கரத்தால் சுற்றி வளைத்துத் தன் பரந்த மார்போடு அணைத்தான். இடக்கரத்தில் ஏந்தி நின்ற சிறுவன் நெளிந்து கீழிறங்க முயன்றான். ஆதித்தன் அதை அனுமதித்துப் பிடியைத் தளர்த்த, ''நம்பியின் தமிழ்ப் பள்ளியில் முதல் மாணவனாய் விளங்கும் இவன், வேறு எப்படிப் பேசுவான் சுவாமி?'' என்று கேட்டாள் பிச்சி.

''மைந்தா! எங்கே, அந்தப் பாடலை முழுமையாக ஒரு தடவை பாடிவிடு! பின்னர் நீ படுத்துறங்கப் போகலாம்.''

கணமும் தாமதியாமல் கணீரென்று குரலெடுத்துப் பாடினான் கன்னரதேவன்.

''மையார் கண்டத்தினாய் — மத
மாவுரி போர்த் தவனே!
பொய்யா(து) என்னுயிருள் புகுந்
தாய் முன்னம் போந்தறி யாய்!
கையார் ஆடர வா — கட
வூர் தனுள் வீரட்டத்(து) எம்
ஐயா! என் அமுதே — எனக்(கு)
ஆர் துணை நீயல தே!''

பாடி முடித்த பிறகும் கண்களைத் திறவாமல், கரம் கூப்பியவாறே நின்றிருந்தான் சிறுவன். ''தேவா! இந்தப் பாட்டு எப்போதும் என் இதயத்தில் ஒலித்து எனக்குத் துணை நிற்கும். பிறை சூடிய பெருமானைப் 'பித்தா' என்றே அழைக்கத் துணிந்தவராயிற்றே சுந்தரர்! அவர் இயற்றிய இப்பாடல் எனக்குத் தைரியத்தையும் அளிக்கும், கவசமாகவும் இருந்து காக்கும்.''

''அப்பா! காலை முரசு அதிரவும் நான் எழுந்து விடுவேன். தங்களுக்கு ஆத்திமாலை சூடி வழியனுப்புவேன்!''

''அப்படியே ஆகட்டும் குழந்தாய்! இப்போது சயனிக்கச் செல்!''

கன்னரதேவன் வணங்கிச் சென்றதும் ஆதித்தன் தன் பட்டமகிஷியைத் திரும்பி நோக்கி, ''தேவி!'' என்றான், பரிவுடன்.

அந்த அழைப்புக்காகவே காத்திருந்தது போல அவள் உடல் நடுங்க ஆரம்பிப்பதையும் அவள் உகுக்கும் கண்ணீரால் தன் நெஞ்சம் நனைவதையும் அவன் உணர்ந்தான்.

''பிச்சி! என்ன இது, வீரத்துக்குப் பெயர் பெற்ற ராஷ்டிரகூட வம்சத்தில் பிறந்த நீயா இப்படி...''

அவள் மிகுந்த சிரமப்பட்டுத் தன்னை ஒரு நிலைப்படுத்திக் கொண்டாள். ''பிரபோ! மன்னிக்க வேண்டும். கணவன் போர்க்களம் செல்கையில் மனைவி மலர்ந்த முகத்துடன் வழியனுப்ப வேண்டும் என்பது பெண்ணாய்ப் பிறந்த யாருக்குமே பால பாடம்தான்.''

''பின்னர் ஏன் இந்தக் கலக்கம்?''

''அச்சத்தையும், கவலையையும் ஒளிக்கத்தான் முடியுமே தவிர, ஒழிக்க முடியவில்லையே, சுவாமி!''

ஆதித்தன் 'களுக்'கென்று சிரித்தான். ''அப்படியானால் என் வீரத்திலும் அறிவாற்றலிலும் உனக்கு நம்பிக்கை இல்லை என்றாகிறது.''

''பிரபோ! பிச்சிதான் நான் என்றாலும் அத்தனை அசடு இல்லை. வீரத்தில் உங்க



CIPLA CIPLA CIPLA CIPLA CIPLA CIPLA CIPLA

சிப்லா ...
... என்றால்
பலருக்கும்
பல அர்த்தங்கள்...

சுதந்திரத்துக்கு முன் தேசியவாதிகளாய்த் திகழ்ந்தவர்களுக்கு—
வெற்றிகரமான சுதேசி முயற்சியின் சின்னம்.

மருந்து தயாரிப்பு துறையிலுள்ள சகாக்களுக்கு—
புதிய தொழில் நுட்ப முறைகளை முதன் முதலில் புகுத்திய முன்னோடி.

மருத்துவ உலகுக்கு—
உலகெங்கும் அவ்வப்போது தயாரிக்கப்படும் புதிய மருந்துகளைத் தாமதமின்றி வழங்கும் நிறுவனம்.

சிறிய பெரிய மருந்து வியாபாரிகளுக்கு—
தன் ஒழுக்கக் கொள்கையை தான் விநியோகம் செய்யும் ஒவ்வொரு தயாரிப்பிலும் பிரதிபலிக்கச் செய்யும் நிறுவனம்.

எண்ணிலடங்கா கோடானு கோடி நோயாளிகளுக்கு—
நோயுற்ற போதும் நல் ஆரோக்கியத்திலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியில் மனப்பூர்வமாய் ஈடுபாடு கொண்டுள்ள ஸ்தாபனம்.

வளரும் விரிவாக்கப் பணியின் முன்னேற்ற காதை

ஆராய்ச்சி முதல் அடிப்படை தயாரிப்பு வரை
ஏற்றுமதி முதல் தொழில் நுட்பப் பரிமாற்றம் வரை

CIPLA

289, BELLASIS ROAD, BOMBAY-400 008

7/8 CIPLA P.R.JA

னுக்கு நிகரானவர் யாருமில்லை என்பதையும் பகைவனின் சூழ்ச்சியை முறியடிக்கவும், உடனிருந்து ஏய்ப்பவர்களின் வஞ்சனையை விஞ்சவும் அறிவாற்றல் தங்களுக்கு உண்டு என்பதையும்...''

''...உணர்ந்திருக்கிறாயல்லவா? அப்படியானால் உன் கவலைக்கு வேறு காரணம் இருக்க வேண்டும்!''

''பிரபோ! இந்தப் பேதையை மன்னியுங்கள். எனக்குக் கவலை என்பதைவிடப் பேராசை என்று கூறலாம். உங்கள் இதயத்தில் எனக்கு ஒரு சிறிய இடமேனும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற பெரு விருப்பம்!''

''ஓ! இதற்குத்தானா இத்தனை பயம்?'' என்று கூறி அவள் கரம் பற்றி மயில் போன்ற அமைப்புடைய மஞ்சத்துக்கு அழைத்துப் போய் அமர்ந்து மடியிலே கிடத்திக் கொண்டான். குனிந்து அவள் முகம் பார்த்துக் கண்ணோடு கண் நோக்கிச் சொன்னான்:


''காஞ்சியை வெல்வேன். இரு பிரம்மாதிராஜர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய கூட்டுப் பொறுப்பில் ஆட்சியை ஒப்படைத்து திரும்புவேன். தஞ்சையில் நீயும் மக்களும் அளிக்கும் மகத்தான குதூகல வரவேற்பை ஏற்பேன். சில காலம் சென்று மீண்டும் உன்னையும் அழைத்துக் கொண்டு சோணாட்டின் வடதிசைத் தலைநகருக்குப்போவேன். இதற்குள் யுத்தத்தின் அல்லல்கள் தீர்ந்து மக்கள் அமைதியுற்றிருப்பார்கள். சோழப் பேரரசின் ஆட்சி முறைச் சிறப்பை உணர்ந்து மகிழ்ந்துமிருப்பார்கள். நமக்குக் கோலாகல வரவேற்புத் தருவார்கள். பட்டமகிஷியாகிய உன்னை அரியாசனத்தில் என் அருகே அமரச் செய்து பல்லவ சோழனாக மகுடாபிஷேகம் செய்து கொள்வேன்...''

''பிரபோ! என் பேராசை அத்தனை விரிவானதல்ல. நான் கோருவது அரியாசனமல்ல. உங்கள் இதயாசனத்தில் நிரந்தர இடத்தைத்தான்.''

''பிச்சி! நீ வெகு எளிதாகத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறாய். இதயத்தில் இடம் பிடித்தால் மட்டும் போதும் என்றால் அது வெகு சுலபம். அதற்கு என் உறுதி மொழி போதும். ஆனால் இதயாசனத்துடன் அரியாசனத்தையும் பகிர்ந்து கொள்ளத்தான் உனக்குத் தகுதி வேண்டும். அந்தத் தகுதி வீரத்தை மட்டுமல்ல, தியாகங்களையும் உள்ளடக்கியது. புரிகிறதா, அன்பே!''

அவன் கரத்தைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு முத்தமிடவும் செய்தாள். ''பிரபோ! தங்கள் இதயத்தில் எனக்கு நிலையான சிறு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதை அறிந்த பின் எப்பேர்ப்பட்ட பெரும் பொறுப்பானால் என்ன, அல்லது இழப்பானால் தான் என்ன, இலகுவாக ஏற்க நான் சித்தமாகி விடுவேன்.''


''பிச்சி! நான் இங்கில்லாத நேரத்தில் நாடாள வேண்டியவள் நீதான். மனத்தை உறுதியாக வைத்துக் கொள். நானே நான் போர்க்களம் கிளம்பும்போது நிம்மதியான மன நிலையுடன் புறப்பட விரும்புகிறேன்.



உன் மனம் அமைதி இழந்தால் எனக்கும் நிம்மதி கிட்டாமல் போகும்.''

எழுந்து அமர்ந்தவள், அவன் தோளில் தலைசாய்த்து, ''முழு மன அமைதியை உங்கள் சொற்கள் எனக்கு அளித்து விட்டன, பிரபோ! என்னை விடப் பாக்கியசாலி யார்?'' என்றாள். மறுபடி கண்ணீர் பெருகியது, ஆனந்தப் பரவசத்தில். அதனை அன்பான அரவணைப்பால் மேலும் அதிகரித்தான் ஆதித்தன்.

பால் நிலவு அரண்மனை உத்தியான வனத்தைச் சொப்பன லோகமாகச் செய்து கொண்டிருந்தது. பல்வேறு நிற மலர்கள் மங்கிய நிலவொளியில் இன்னும் அதிக லாவண்யத்துடன் திகழ்ந்து மெல்லிய பூந்துகிலைப் போர்த்திக் கொண்ட வனதேவதைகள் போல் தென்றலில் அசைந்தாடிச் சிரித்தன. இரவு நேர மலர்களின் மணம் கனமாகச் சூழ்ந்தது. எங்கோ தொலை தூரத்தில் கூகை ஒன்று எழுப்பிய ஒலி கூட நிசப்த கீதத்துக்குச் சுருதி சேர்ப்பது போலவே தோன்றியது. இவை எதையும் உணராதவனாக ஏதோ யோசனையுடன்



ஆரோக்கியம் அழைக்கிறது

மார்ச் 4ல் ஆரோக்கியம் அழைக்கிறது இலவச இணைப்பில் வெளியான சில கருத்துக்களுக்கு விளக்கங்கள் தேவை:

- ''இரத்தப் பரிசோதனை'' தலைப்பில் ஆர். பி. ஸி. என்னும் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையைக் கவனிப்பதன் மூலம் இரத்தச் சோகை இருக்கிறதா என்று அறியலாம். இத்துடன் ஹீமோக்ளோபினின் அளவையும் கவனிக்க வேண்டும். இவ்விரண்டு சோதனைகளும் ஒன்றாகவே செய்து கொள்ளலாம்.

- டி. ஸி. (D.C.) என்பது வெள்ளை அணுக்களின் விகிதாச்சாரம். இவற்றை பாலிமார்ப், லிம்போசைட், ஈஸிநோஃபில் மற்றும் மானோசைட் என்று பிரிக்கலாம்.

- ''எலக்ட்ரோ கார்டியோ கிராம்'' என்ற தலைப்பிலுள்ள படம்—போனோகார்டியோ கிராமையும் காண்பிக்கின்றது. (அதாவது இருதயத் துடிப்பை டேப்பின் மூலம் பதிவு செய்தல் – இது ஒரு ஜெர்மானிய முறை.)

- எலக்ட்ரோ கார்டியோகிராம் என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முதல் பகுதி எக்கோ கார்டியோ கிராமைப் பற்றியது. இது ஒரு நவீன பரிசோதனை. (Echo) எக்கோ கார்டியோகிராப் மூலம் இதயத்திலுள்ள வால்வுகளைப் பற்றியும் ரத்தத்தைப் பம்பு செய்யும் பாகத்தின் கனபரிமாணத்தைப் பற்றியும் வரை படமாக அறியலாம்.
ஆனால் மாரடைப்பு (Heart attack) இருக்கிறதா என்று கண்டுபிடிக்க முடியாது.

—தொகுப்பாசிரியர்.

மெல்ல நடை பயின்று கொண்டிருந்தான் குலோத்துகன்.

''உறக்கம் வரவில்லையா?'' என்றாள் கடம்பமாதேவி அவன் எதிரே தோன்றி.

''உனக்குமா?'' என்றான்.

பெருமூச்செறிந்து, ''அது உங்களுக்கு அதிசயமாய்த் தோன்றுகிறதா?'' என்றாள்.

''இல்லை, விரகதாபம் நமக்குப் பொதுச் சொத்தாகி விட்டது'' என்று விரக்தியுடன் நகைத்தான்.

''நாளை பிரிகிறோம்'' என்றாள். ''நீங்கள் திரும்பி வரும்போது நான் இங்கிருப்பேனா என்பது தெரியாது. ஒருவேளை சேர நாடு திரும்பியிருக்கலாம்.''

திடுக்கிட்டு நிமிர்ந்தான்: ஏதோ அது பேரிழப்பாகி விடும் போல் அவனுக்குத் தோன்றியது. 'ஏன் இப்படி இருக்கிறது?' என்ற அறிவுபூர்வமான வினாவுக்கு அவனே பதில் கூறிக் கொண்டான். அவளுக்கும் கேட்கிற மாதிரி உரக்கவே பேசினான்:

''இல்லை தேவி, கூடாது! வெற்றித் திருமகள் உன் உருவில் தான் சோணாட்டுக்கு அருள் பாலிக்க வந்திருப்பதாகக் கருதுகிறேன். நாங்கள் வாகை சூடித் திரும்பும்போது நீ அவசியம் இங்கே இரு. எமது வெற்றியை உனது காலடியில் தான் சமர்ப்பிக்க வேண்டும்!''

''பெரிய பெரிய வார்த்தைகளை உதிர்க்கிறீர்கள். இப்போதே என் இதயம் உங்கள் காலடியில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதை உணராமல்'' என்றாள். ஏக்கத்துடன் ஒரு விம்மலும் வெளிப்பட்டது.

''தேவி உனது கோமளமான இதயத்தைப் புண்படுத்துகிற இந்த நீசனை மன்னித்து விடு'' என்றான்.

''வீரரே! புண்படும் மனம் தான் பண்படவும் செய்யும். எனவே உங்கள் உதாசீனத்தையும் நன்மையாகவே கருதி ஏற்கிறேன்.''

''என்ன வார்த்தை சொன்னாய்! உன்னை உதாசீனம் செய்வதா? தேவி! நீ என் பாதங்களில் வைத்த உன் இதயத்தை நான் எட்டி உதைத்து விடவில்லை. பொக்கிஷமாக எடுத்துப் பாதுகாத்துப் புனிதமாய்க் கருதிப் போற்றுகிறேன். வாழ்க்கையே வெறுத்துப் போன நிலையில் அதில் திரும்பவும் நம்பிக்கை துளிர் விடச் செய்தவள் நீ. உன் அன்பும் ஆர்வமும் எனக்கு அளவிலாச் சக்தி அளிக்கின்றன. பதிலுக்கு என்னுடைய உள்ளத்தை உன் மென்மையான பாதகமலங்களில் வைக்காதது ஒன்றுதான் என் தவறு.''

''அன்பரே! உமது மனம் மாறும். போரிலே உங்கள் வெற்றிக்கு உதவப் போகும் திருமகள் காதலிலே என் வெற்றிக்கும் துணை நிற்பாள். நம்பிக்கையுடன் பிரார்த்தித்தபடி காத்திருப்பேன்.''

இரவின் மௌனத்தைக் கலைத்த முரசொலி, வீரர்களைத் துயிலெழுப்பிப் படை கிளம்ப வேண்டிய தருணம் நெருங்கி விட்டதை உணர்த்தியது.

(தொடரும்)



ஸூப்பர் ரின்
அதிக வெளுப்பொளி பாய்ச்சுது...

இதற்கு ஈடுநிற்க டிட்டர்ஜெண்ட் வில்லை எதுவுமே இல்லை.

உற்றுப் பாருங்கள்
இப்போது ஸூப்பர்
ரின் வில்லையை—
கண்கவரும் புதிய
மேலுறை, புதுமை
கமழும் நறுமணம்.



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS RIN 69 2013 TM

அனுராதாரமணன்

'இந்தக் கொலை வழக்கிலிருந்து ராஜா தப்பவே முடியாது... இனிமேல் இந்தக் குடும்பமே நாசம்தான்....'

இதை நினைக்கும்போதே எத்திராஜின் இதயத்துக்குள் சந்தோஷம் ஊற்றெடுக்கிறது...

எத்தனை வருடத்திய லட்சியம் நிறை வேறப் போகிறது...

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொழுதும் அவன் சாப்பிடும் ஒவ்வொரு பிடி கவளமுமே இந்த லட்சியத்திற்காகத்தானே...

நிஜம்தான். அவன், பரந்தாமனின் குடும்பத்தைப் பூண்டோடு ஒழிப்பதற்காகவே ஜனனமெடுத்திருக்கிறான். வாழ்க்கையில் இதைத் தவிர, அவனுக்கு வேறெந்தக் குறிக்கோளும் இல்லை... அவனது இலக்கு–பரந்தாமன்தானே தவிர ராஜா இல்லை... இருந்தாலும், ராஜாவினால் பரந்தாமனைத் தலை நிமிரவொட்டாமல் செய்யலாம் என்றால், அவரைத் தாக்க – அவர் பெற்ற மகனையே ஒரு ஆயுதமாக உபயோகப்படுத்த முடியுமென்றால், இதனால் அவர் மனமொடிந்து, தலை குனிந்து, தற்கொலை முயற்சி வரையில் தள்ளப் படுவாரென்றால்...

இந்தக் கொலையையும், தேடப்பட்டு வரும் ராஜாவையும் தாராளமாக உபயோகிப்பதில் ஆட்சேபணை எதுவும் இல்லை எத்திராஜுக்கு.

அப்படி என்ன கோபம் அவனுக்கு.... ஒரு நல்ல மனிதரைத் தலைகுனிய வைத்துப் பார்ப்பதில் அவனுக்குக் கிடைக்கக் கூடிய சந்தோஷம்தான் என்ன...?

எத்தனையோ இருக்கிறது.

பத்து வயதில் இவன், தனது ஒரே துணையான தாயை இழந்து அநாதையாய் நின்றது...

அறிந்தவர் தெரிந்தவர்களெல்லோரும் இவன் மீது காறித் துப்பாத குறையாக விரட்டியடித்தது...

படிப்பில் எத்தனையோ துடியாக இருந்தவன் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தியது...

எல்லாவற்றுக்கும் மேலாக, அம்மாவின் இதமான அரவணைப்பில், அவளது மார்புச் சூட்டில் நிர்பயமாய், தனது எதிர்காலத்தைப் பற்றிய கவலையான அவளிடம் ஒப்படைத்து விட்டுத் தூங்கியவனை நடுத்தெருவுக்கு – பிளாட்பாரத்துக்குக் கொண்டு வந்தது...

எல்லாம் இந்தப் பரந்தாமன்தான்.

வேண்டுமென்று செய்யவில்லை. சட்டம், அவரது கண்களுக்கு இரும்புத் திரை போட்டு விட்டது...




எத்திராஜ், தட்டுமுட்டுக்கள் நிரம்பிய, தனது இருண்ட அறைக்குள் வந்து, ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி அலமாரியில் வைக்கிறான். விளக்கு வெளிச்சத்தில் பழுப்பேறிய புகைப் படத்தில் அவனது அம்மா சிரிக்கிறாள்.

சிரிக்கும் அவளின் உதடுகளையே உற்றுப் பார்க்கிறான் எத்திராஜ். கொஞ்சம் கொஞ்சமாய் அந்தச் சிரிப்பே அழுகையாய் மாறுவது போல... உதடுகள் துடித்துத் துடித்து அவனிடம் எதையோ சொல்ல விரும்புவது போல... உதட்டோரத்தில் கருஞ்சிவப்பாய் ரத்தம் வழிவது போல...

''என் கண்ணு... என் ரா ஜா... நீதாண்டா உங்க அம்மாவைக் காப்பாத்தணும்... உங்க அப்பாரு இருந்திருந்தா–உன்னைய கலெக்டருக்குப் படிக்க வைப்பாரு.. எம் மவன், எம் மவன்னு உன்னைக் குறிச்சியில உட்கார வைச்சுப் பேசுவாரு.... அவரு சம்பாரிச்ச பணத்துல கால் வாசி இருந்திருந்தா – இன்னிக்கி நான் கையேந்தி, நிக்க வேண்டியிருக்காதுடா... தரும தொரை... காசைக் காசுன்னு பார்க்காம உறவுமொறைங்களுக்கெல்லாம் அள்ளி விட்டாரு...''

அவள், மகனை நெஞ்சோடணைத்தபடி சொல்லுவாள். அவன், அப்படியே அப்பாவை உரித்து வைத்திருப்பதாகவும், பேச்சும் தோரணையும் கூட அவரைப்போலவே.

சொல் ஒன்று வேண்டும்



இருப்பதாகவும் சொல்லிச் சொல்லிப்பூரித்துப் போவாள். கணவனைப் பற்றிப் பேச ஆரம்பித்தால், அந்தப் பேச்சுக்கு ஒரு முடிவே இருக்காது.

''ஆத்தெக் குறுக்காட்டி அணையக்கட்டி, வாய்க்கா பிரிப்பாரு... பத்து சோடி மாடு வச்சிருப்பாரு... நாலு பேரு உடம்பொறந்த வங்க... அவங்களைப் படிக்க வச்சி, ஆளாக்கி னது முச்சூடும் உங்க அப்பாருதான்.... கருப்பணமாருக்கு நேர்ந்துவிட்டு, தவசா தவ மிருந்து நீ பொறந்தே... பார்க்கக்கொடுத்து வைக்கலியே என் தொரைக்கு...''

''தங்கப்பொடி நுணுக்கி
தரையாலே கோலமிட்டா
தரையாலே போறவங்கோ
தங்கப் பொடி யாருதுன்னு...
தடமோ சருக்காருது
தங்கப் பொடி எங்களது...
வெள்ளிப் பொடி நுணுக்கி
வீதியிலக் கோலமிட்டா
வீதியாலே போறவங்கோ
வெள்ளிப் பொடி யாருதுன்னு...
வீதி சருக்காருது
வெள்ளிப் பொடி நம்பளுது...''

அவள் விம்மியபடியே பாடுவாள். எத்தி ராஜுக்கு அவளது பாட்டின் அர்த்தம் புரியாவிட்டாலும், அவளது சோகம் புரிந் தது.

கணவன் இறந்த பின் சொத்து சுகமெல் லாம் தாயாதிப் பங்காளிகளின் வாய்க்கரிசி யாய்ப் போன பின், மாதா மாதம், கைச் செலவுக்குப் பணம் கேட்டு, மைத்துனர் களிடம் கையேந்த வேண்டிய நிலை அவளுக்கு.

என்னதான் ஓட்டலில் செக்கு மாடாய், மாவாட்டி உழைத்தாலும், கையில்நாலணுக் காக சேராத கொடுமை. ஆசைக்கு மட்டும் குறைச்சலில்லே. மகனை கலெக்டருக்குப் படிக்க வைத்து, நாற்காலியில் உட்கார வைத்து, அவனருகில் தானும் நின்று, ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண் டும் என்கிற தணியாத ஆசை.

பெற்ற பிள்ளைக்காக, யாரிடமும் உடம் பைக் குறுக்கி, கையேந்தத் தயாராக இருந் தாள் அவள்...

அன்றும் அப்படித்தான்.

மகனை ஆறும் வகுப்பில் சேர்க்கவும், புதுசாய்ப் புத்தகம் வாங்கித் தரவும் ஓட்டல்

முதலாளியிடம் முப்பது ரூபாய் கடனுகக் கேட்டிருந்தாள்.

''வேலை முடிஞ்சு. வீட்டுக்குப் போகையில வந்து கேளு...''

முதலாளி, இவளது முகத்தைப் பாராம லேயே பதிலளிக்க... அந்தி மயங்கும் நேரத் தில், மகனை ஒரு கையில் பிடித்தபடி அவள் முதலாளியின் எதிரே வந்து நிற்க...

''இந்தா — பணத்துக்குமாத்திரம் சொன்னு சொன்னபடி வந்து நின்னுடு. வேலையின்னு கண்டுக்காதே... பத்தாம் நம்பர் ரூமுக் காரன் ரெண்டு நாளாக் கத்தருன். ரூம் பெருக்கலையாம்... பானையிலத் தண்ணிக் கொண்டு போய் வைக்கலையாம்...''

''செய்யறேன் எசமான். நேத்துக் காலை யில நான் ரூம் பெருக்கத்தான் போனேன். அவரு பூட்டிட்டுப் போயிட்டாரு...''

''பேசாதே. மளார்னு காரியத்தைக் கவனி...''

முதலாளி, அவளைப் பார்த்து உறுமிவிட்டு எத்திராஜின் பக்கம் திரும்பினர்.

''டேய் பொடியா... எதுத்தாலக் கடை யிலப் போய், ரெண்டணுவுக்குப் பொகை யிலை வாங்கியாடா... மட்டைப்பொகையிலை வேணும்... பன்னீர்ப் பொகையிலைன்னு கேளு...''

அவர், அவனது உள்ளங்கையில் சில்ல ரையை வைத்து அழுத்த, அவன் தலை தெறிக்க ஓடினன்.

ஆனல்—

அவன் கடைக்காரனிடம் புகையிலையை வாங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தி லேயே லாட்ஜில் பரபரவென எழுந்த கலவர மும், விசில் சத்தமும், திபுதிபுவெனப் போலீஸ் தலைகள் புற்றீசலாய்க் கிளம்பிய தும்...

சின்னப் பையனுக்கு ரொம்பவும் வேடிக் கையாயிருந்தது. வாய் பிளந்தபடி பார்த்துக் கொண்டு நின்றான்.

''டேய் அதோ பாருடா... உங்க ஓட்டல் முதலாளியப் போலீஸ் பி டி ச் .க ட் டு ப் போகுது...''

வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் உற்சாகமிகுதியில் கூவினன்.

''அடேடே... எதுக்குப் பிடிக்கறுங்க..''

கணவன்: ''விதி படத்திலே ஊர்வசி நடிப்பு அபாரம்...''

மனைவி: ''ஐய ஊர்வசி எங்கே அந்தப் படத்திலே வர்றுங்க. சுஜாதா தானே வர்றுங்க...''

கணவன்: ''இந்த ஞாபகம் உப்பு மாவுக்கு உப்பு போடும் போது இருந் திருக்கலாமே டார்லிங்...''

சந்தி.குமரிலஸ்வரன்



''அவரு என்ன. கொஞ்சமாவா தப்பு செய்யறாரு... ஓட்டல்லே பதார்த்தமா விக்கி ருரு? பொம்பளைங்கள இல்லே வியாபாரம் செய்யறாரு... பாவி மனுசனுக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்...''

கடைக்காரனின்வார்த்தைகளைச்செவிமடுத்த வாறே நின்றிருந்த சிறுவன், திடீரெனத் தேள் கொட்டினாற்போல அலறினன்.

''ஐயய்யோ எங்க அம்மா... எங்க அம்மாவையும் போலீஸ் பிடிச்சுட்டுப் போகுதே... அம்மா... அம்மாவ்....''

அவன், புகையிலையை விட்டெறிந்து விட்டு, தாயிடம் ஓடினன். போலீஸ் அவளை வேனில் ஏற்ற முயற்சி செய்கையில் அவளை இறுகப் பிடித்துக் கொண்டு கதறி ஞன்.

''இது எங்க அம்மாங்க... விட்டுடுங்க ஐயா...''

''சரிதான் நகருடா...''

இன்ஸ்பெக்டர் ஒருவர், அவனது கரத் தைப் பிடித்து அப்பால் தள்ளினர்.

அந்தத் தாயோ, கேட்பவர் நெஞ்சே உருகும்படி அலறினள்.

''சாமீ... எனக்கு ஒண்ணும் தெரியா துங்க... ஓட்டல்லே வேலே செய்யறவங்க... மாவாட்டி, பாத்திரம் தேய்ச்சு, கூட்டிப் பெருக்கறவங்க... சாயங்காலத்துல இங்கே என்ன நடக்குதின்னே எனக்குத் தெரியா துங்க...''

''கம்மாக் கத்தாதே. வண்டியில ஏறு..''

''ஐயய்யோ... என்னே விட்டா எம் மவ னுக்கு யாருமே இல்லீங்க... அப்பனில்லாத பிள்ளேங்க... நாளைக்கு ஸ்கூலுக்கு சம்பளம் பணம் வேற கட்டணுமுங்க... உங்க காலைத் தொட்டுக் கும்பிடறேனுங்க.... எம் மவன் மேலே சத்தியமா எனக்கும், இதுக்கும் சம்பந்தமே இல்லீங்க... பெரிய மனசு பண்ணுங்க யசமான்....''

அம்மாவின் கதறலையும் மீறிக் கொண்டு, எத்திராஜ் கதற — இது ஒன்றையுமே லட்சி யம் செய்யாத போலீஸ் அவளை, அவனிட மிருந்து பிடுங்கி, வேனில் ஏற்றிக் கொண்டு பறந்தது...


அது பறந்த பின் எழும்பிய தூசி, அடங்கி வெகு நேரமாகியும், அங்கேயே விழுந்து புரண்டு அழுது கொண்டிருந் தான் எத்திராஜ்.

இந்தச் சம்பவத்துக்குப் பின் ஒரு மாதம் போலக் காவலில் வைக்கப்பட்டிருந்தாள் அந்தத் தாய். மற்ற சிவப்பு விளக்குப் பெண்களுடன்தான் அவளும் விடுதலை யானுள். ஓட்டல் முதலாளிதான் தானும் ஜாமீனில் வெளியே வந்து, இவளையும் பெரிய மனசு பண்ணி, விடுவிக்க ஏற்பாடு செய்தார். அது வரையில் வெற்றிலைப் பாக்குக் கடையில் தான் வாசம் எத்தி ராஜுக்கு. தினமும் தாயைப் பார்க்க — போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விடுவான்.

அம்மாவைப் பார்க்க முடிகிறதோ இல் லையோ — அவளைக் கதறக் கதற வண்டியி லேற்றிக் கொண்டு போன இன்ஸ்பெக்டரை —ஸ்டேஷனுக்கு வெளியே நின்றபடியே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பான்.



"எனது ஆறு வயதுச் செல்வி பரத நாட்டியம் நன்கு ஆடுகிறாள். நாளைய உலகமே அவளது மேடையாம்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள் நேசத்தோடு நினைந்து மகிழும் ஒருநாள்!
வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்டட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.
"என்னுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல."
குழந்தைகளைக் கேளுங்கள்
பெற்றோர்களைக் கேளுங்கள்
உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்
அதில்...உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல. காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல... அவற்றைவிட அதிகமோ அதிகம்!
அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
Cadbury's Bournvita
The Tastier Food Drink
காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.



அம்மா காவலில் இருந்த ஒரு மாதகாலமும் இவன் பள்ளிக்குப் போகவில்லை. ஆறும் வகுப்பு, எத்திராஜ் இல்லாமலேயே பாடத்தை நடத்திக் கொண்டு போயிற்று. உறவுக்காரர்கள் யாருமே அவனை, வீட்டில் சேர்க்க விரும்பவில்லை. ஏற்கெனவே காசில்லாத உறவு. போதாக் குறைக்கு பாசுள்ள உறவாகவும் ஆகிவிட்டது.

அம்மா வெளியே வந்ததும் மகனைக் கட்டிக் கொண்டு 'ஓ'வென அழுதாள்.

''அழாதேம்மா... அதான் போலீஸ் உன்னை வெளியே விட்டுடுத்து இல்லே... இன்னமும் ஏன் அழறே...''

மகன், தாயின் ஒட்டி உலர்ந்த கன்னத்தை வருடியபடியே கேட்டான்.

''இனிமே நம்மை யாரு சேர்த்துவாங்க?''

உறவினர் ஒவ்வொருவராய் இவர்கள் குடிசையின் முன் வந்து நின்று காறித் துப்பிய போது, குடிசைக்குச் சொந்தக்காரன் மறுநாள் மாலைக்குள் குடிசையைக் காலி செய்து விட வேண்டும் என உத்தரவு போட்ட போது...

இத்தனைக்கும் காரணம் அந்தக் கொடுவாள் மீசை இன்ஸ்பெக்டர்தான் என்று, அந்தச் சிறுவனின் நெஞ்சில் மிக அழுத்தமாய்ப் படிந்து விட்டது...

எல்லாவற்றுக்கும் சிகரம் வைக்கும்படியாக அவன் தாய் செய்த காரியம்...

பொழுது சாய்வதற்குள் குடிசையைக் காலி செய்து விட்டு, எங்கே போய் நிற்பது என்கிற கேள்வியும், இது வரையில் பட்ட அவமானமும் தாளாதவளாய் அன்றையப் பொழுது விடிவதற்குள்ளேயே, புடவைத் தலைப்பை உத்தரத்தில் கட்டி, இன்னொரு முனையில் தன் கழுத்தைச் சுருக்கிட்டுக் கொண்டு பிணமாய்த் தொங்கினாள் அவள்.

காலையில் அவன் கண் விழித்தெழுந்த போதே — தாயின் பித்த வெடிப்புப் பாதங்கள் அந்தரத்தில் தொங்குவதைத் தான் கண்டான்...

''ஐயய்யோ அம்மா!!''

அலறிக் கொண்டு மூர்ச்சையானவன் தான்...


மயக்கம் தெளிந்து எழுந்த போது — அவன் அம்மாவைப் போசுக்கி இரண்டு நாட்களாகியிருந்தது. ஓலைக் குடிசையின் சொந்தக்காரர், தெருவில் விட்டெறிந்த தட்டுமுட்டுச் சாமான்களில், அம்மா உபயோகித்த சில பொருட்களையும், அவனின் இரண்டு கிழிசல் புடவைகளையும், இதோ — அலமாரியில் உள்ள அவனின் புகைப்படத்தையும் கட்டி எடுத்துக் கொண்டு நடந்தவன்தான்.

வாழ்க்கையில் பல விதங்களிலும் அடிபட்டு, மிதி பட்டு, இன்று பரந்தாமன் வீட்டுக் கார் டிரைவராக வந்திருக்கிறான்.

எத்தனை வருஷங்களானாலும், தன் தாயை அந்த நிலைமைக்கு ஆளாக்கிய கொடுவாள் மீசைக்காரரை அவன் மறக்கவே இல்லை.

அவனது இலக்கு — இவரது வீழ்ச்சி.

மனிதர் ஒரேயடியாய்க் கண்ணை மூடுவதில் அவனுக்கு எந்தவித சுவாரஸ்யமும் இல்லை.



எறும்பு மட்டும் சாதாரணமாக மனித உருவில் இருந்தால் அது இழுத்துச் செல்லக் கூடிய எடையின் அளவு எவ்வளவு இருக்கும் தெரியுமா? 2,40,000 பவுண்ட்கள்!

-தெய்வயானை.

அணுஅணுவாய்த் துடிதுடித்துச் சாக வேண்டும். அவன் அம்மாவைப் போல....

மற்றவர் கையால் சாவதை விட, தன் கையாலேயே தனது முடிவைத் தேடிக் கொள்ள வேண்டும்: அவன் அம்மாவைப் போல...

செய்யாத குற்றத்துக்குப் பழி சுமக்கும் இதயம், எப்படிப்பட்ட அவமானத் தீயில் வெந்து போகும் என்பதை அவர் அறிய வேண்டும்.

அம்மாவைக் கையில் விலங்கு போட்டு, இழுத்துச் சென்றதைப் போல — இந்த மனிதரையும் ஒருநாள் போலீஸ், விலங்கு மரியாதையுடன் இழுத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது தான் அவனுக்குத் திருப்தி.

எத்திராஜ் ஏதோ ஒரு திட்டத்துடன், பரந்தாமனிடமே வேலைக்கு அமர் — அவனது நல்ல காலமோ இல்லை — பரந்தாமனின் போதாத காலமோ...

ராஜா — இப்படியொரு அசம்பாவிதத்தில் சிக்கிக் கொண்டு விட்டான்...

அப்பா கையில் விலங்கேறினால் என்ன... மகன் கையில் ஏறினால் என்ன...

பார்க்கப் போனால் முன்னதை விடவும், பின்னதற்கே குடும்பத்தை நிலை குலையச் செய்யும் சக்தி அதிகம்.

எத்திராஜ் இத்தனையையும் மனசுக்குள் கணக்குப் போட்டபடி, தாயின் மங்கிய உருவத்தை உற்றுப் பார்க்கிறான்....

''எப்படியும் இந்த ராஜாவை நான் பிடிச்சுக் கொடுத்திடுவேம்மா... பரந்தாமன் மட்டுமில்லே... அவர் வம்சமே தலைய நிமிர்த்த முடியாதபடி, செஞ்சிடறேன்... நீ கவலைப்படாதே... உன் மகன் சொன்னதைச் செய்வான்...''

அவன் தனக்குள் முனகியபடி, முதல் நாள் கபாலி கோவில் வாசலில் சந்தித்த மஃப்டி போலீஸ்காரரைத் தேடிப்போகிறான்.

'அந்தப் பொண்ணைப் பார்த்து வச்சுக் கிட்டாறு இந்த ஏட்டு? பார்த்திருந்தா இந்நேரம், அவ முடியப் பிடிச்சு ஸ்டேஷனுக்கு இழுத்திட்டு வர மாட்டாரோ....'

தலையைச் சிலுப்பிக் கொண்டு அறையை விட்டு வெளியேறியவன், மீண்டு ஒருமுறை நாலா புறமும் பார்த்துவிட்டு வேகமாய் நடக்கிறான். (தொடரும்)

மார்னிங் வாக்

ஜெயரதன்

காலை மணி ஐந்தரை.

தயங்கித் தயங்கி இருள் விடைபெற்றுக் கொண்டிருந்தது.

பரபரப்புத் தொடாத கன்னித்தனத்துடன் காலை எழுந்து கொண்டிருந்தது.

''மாலா... கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ... நான் வாக் போயிட்டு வந்துடறேன்...''

காலைநேரத்தின் கட்டைக் குரல் கம்பீரமாய் ஒலிக்க, படி இறங்கிப் போனான் மூர்த்தி.

வெள்ளை நிறத்தில் டென்னிஸ் பனியன்.

காலில் 'நார்த் ஸ்டார்' மிடுக்காய் எல்லிக் கொடுக்க, வெள்ளைநிறப்பேண்ட்டோடு, கிரிக்கெட் விளையாட்டுக்காரன் மாதிரி வேக வேகமாய் நடக்கலானான்.

இரட்டை வரிசையாய் வீடுகள் காலைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தன.

அவனும் ஏழரை மணி வரை தூங்கிக் கொண்டிருந்தவன் தான். பல்லைத் துலக்கி விட்டு, ஹிந்து பேப்பரில் மேலோட்டமாகத் தலைப்புச் செய்திகளை ஒரு சைபில் காப்பித் தம்ளருடன் பார்த்து விட்டுக் குளிக்கச் செல்வான். ஒருநாள் விட்டு மறுநாள் ஷேவிங். அன்றைக்கு ஷேவிங் இருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகப் பரபரப்பு. பரவாயில்லையென்று விட்டுவிட முடியாதவாறு வெள்ளை முடிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டன. அலுவலகத்திலும் பக்கத்து நாற்காலிகளில் பெண்கள் அதிகமாகிவிட்டபடியால், வயதானவன் என்று அவர்கள் நினைத்து விடாதிருக்க, ஷேவிங் உபத்திரவத்தைத் தள்ளிப் போட முடியவில்லை. பல நாட்கள் சாப்பிடக் கூட அவகாசமில்லாமல் அலுவலகம் ஓடியிருக்கிறான். அன்றைக்குக் கூட ஷேவிங்கை விட்டதில்லை. நாற்பது வயதைத் தாண்டி விட்டாலே, மற்றவர்கள் பார்வையில் இளைஞனாய் இருக்கச் சிரமப்படத்தான் வேண்டியிருக்கிறது...

இப்படி ஏழரை மணி வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கியவன், ஒருநாள் வேறு ஏதோ காரணத்துக்காக டாக்டரைப் பார்க்க நேரிட்டபோது, யூரினைச் சோதித்த அவர் கூறியதைக் கேட்டதும், தூக்கத்தையே இழக்கும்படியாகி விட்டது.

''உங்களுக்கு டயாபடீஸ் இருக்கே!... யூரின் டெஸ்ட் ரிப்பின் ப்ளஸ்...''

''எனக்கா? அதுக்குள்ளேயா...? வயசு நாப்பத் தொண்ணுதானே ஆறது?''

''...எப்ப வேணும்னாலும் வரும். ரத்தத்தைச் சோதிச்சு பண்ணிட்டு மேற்கொண்டு சொல்றேன். ஸ்டார்ட் ஆல் ஸ்வீட்ஸ் இமிடியட்லி அண்ட் ஃபார் எவர்...ப்ளீஸ்.

ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டு நாளைக்கு வாங்க.... பயமில்லே. ஆனா டயட்லே ஸ்டிரிக்டா இருக்கணும்...''

தலையைத் தலையை ஆட்டிக்கொண்டு டாக்டர் உள்ளே போனார்.

ஆடிப் போய் வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள் ரத்தத்தைப் பரிசோதித்து ரிப்போர்ட்டுடன் போனான். எஸ். எஸ். எல். ஸி. யில் அவன் வாங்கியிருந்த மார்க்கை விட பத்துக் கூடுதலாக 320 எம். ஜி. என்று ரிப்போர்ட் அவனைப் பற்றிப் புகார் செய்தது.

''... யூ ஆர் எ டயாபெடிக்... மாத்திரை எழுதித் தரேன்... சாப்பாட்டுக்கு அப்புறம் மார்னிங் ஒண்ணு, நைட் ஒண்ணு சாப்பிடுங்க... டயட் எல்லாம் எழுதித் தரேன்.... அரிசியைக் கொறைக்கணும்... அவாய்ட் ஆல் ரூட்ஸ்... நெறைய மோர் சாப்பிடலாம். தக்காளி சாப்பிடலாம்... எல்லாத்தையும் விட ரொம்ப முக்கியம், மார்னிங் வாக் போகணும். ஒரு மணி நேரம் வேகமா நடக்கணும்... டெய்லி போகணும் என்ன?.. என் கிட்டத் தலையை ஆட்டிட்டு வீட்டிலே இழுத்துப் போர்த்திண்டு படுத்துக்கப்படாது... அப்புறம் வியாதியும் உங்களைக் கட்டிப் பிடிச்சுண்டு படுத்துக்கும்... உங்களை எழுந்திருக்க விடாது... என்ன, நான் சொன்னது அர்த்தமாறதா?... வாக்கிங் டெய்லி போகணும் ஆமா... மருந்தைவிட எக்ஸர்சைஸ் ரொம்ப அவசியம்... ஓ.கே... மீட் மீ ஆஃப்டர் த்ரீ வீக்ஸ்...''

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான் மூர்த்தி.

''காலம்பர சீக்கிரம் எழுந்து வாக் போகணுங்கறீரே?... ஒங்களுக்கு ஏழரை மணிக்கு முன்னாலே பொழுது விடியாதே?... எப்ப எழுந்திருக்கறது. எப்ப வாக் போறது. எப்ப



ஆபீஸ் போறது... ஊஹூம், எனக்கு நம்பிக்கையில்லே...'' என்ற மாலாவை முறைத்தான் மூர்த்தி.

வேகவேகமாக பஸ் ஸ்டாப்புக்கு நடந்தான் மூர்த்தி. அவன் நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓட்டமும் நடையுமாய்ப் பின் தொடர்ந்தாள் மாலா.

பழைய நிகழ்ச்சிகளை நினைத்துக்கொண்டே வேகவேகமாய் நடக்கலானான் மூர்த்தி.

கையிலிருந்த வாட்சைப் பார்த்தான்.

மணி ஐந்தே முக்காலைக் காட்டிற்று..

சே! முக்கால் மணி நேரம் தானா ஆகியிருக்கிறது? வெகு நேரம் நடந்த மாதிரி இருக்கிறதே...

ஒரு ஆவேச உந்துதலோடு மீண்டும் வேகமாய் நடக்கலானான்.

எதிர் பிளாட்பாரத்தில் ஒரு கிழவர், ஒரு நடு வயதுப் பெண் மணியுடன் வந்து கொண்டிருந்தார்.

இருவர் கால்களிலும் 'டென்னிஸ் ஷூ' இருப்பதைப் பார்த்ததும் 'நம்ம கேஸ்' என்று எண்ணிக் கொண்டான்.

யாருக்கு டயபடீஸாயிருக்கும்? கிழவிக்குத் தான் இருக்கும்! துணைக்குக் கிழவர் வருகிறார் போலிருக்கிறது. அவரும் ஏன் காலில் ஷூ போட்டுக் கொண்டிருக்கிறார்? ஒருவேளை அவருக்கு ப்ளட் ப்ரஷராக இருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. வயதானவர்கள், சமாளிக்கலாம், முடியவில்லையென்றால் இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்துக் கொள்ளலாம். நம் மாதிரியா? ஆபீஸிலும் வேலை. வீட்டிலும்



பொறுப்பு. வரிசையாய் மூன்று பெண்கள். பெரியவள் இப்போதுதான் டென்த் படிக்கிறாள். இரண்டிரண்டு வருஷ இடைவெளியில் மீதி இரண்டு பேரும். பிள்ளைக்கு ஆசைப்பட்டு மூன்றாவதும் பெண்ணாய்ப் போன பின்பு, 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' பாணியில் 'பிள்ளையாவது, பெண்ணாவது எல்லாம் ஒன்றுதான்' என்று தத்துவம் பேச ஆரம்பித்தாகி விட்டது. நண்பர்கள், உறவினர்கள் வட்டத்திலும் பெண் மட்டும் உள்ளவர்களோடு ஒரு அன்னியோன்னிய பாவமும், பிள்ளைகள் உள்ளவர்களிடம் கொஞ்சம் எரிச்சலும், பிள்ளைகள் மட்டுமே உள்ளவர்களிடம் ஒரு குரோதமும் – உருவாகி விட்டன...

அந்தத் தெருவைக் கடந்து அடுத்த தெருவுக்குள் நுழைந்தான்.

இரட்டை வரிசையாய்ப் பெரிய மரங்கள் அணிவகுத்து நிற்க, பெரிய பெரிய வீடுகள். பல லட்சங்கள் பெறும் வீடுகள். இன்னும் விழித்துக் கொள்ளாமல் சாந்தமாய் இருந்தன. 'லாரிகள் போகக் கூடாது' என்ற தடையுத்தரவைத் தாங்கிய எச்சரிக்கை. தெருமுனையில் காவலுக்கு நின்றது. இவர்கள் போக்குவரத்துக்குத் தடையில்லாமல் இருக்க, பொதுப் போக்குவரத்தைத் தடை செய்யும் அளவுக்குச் செல்வாக்குப் படைத்தவர்கள். இந்தப் பங்களாக்களின் ஏர் கண்டிஷனர் பொருத்தப்பட்டிருக்கும் படுக்கையறைகளில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவு சற்று எரிச்சலாய் இருந்தது. தனக்கு ஐநூறு சதுர அடியில் ஒரு போர்ஷன் கூடச் சொந்தமில்லாது இருக்கிறபோது, இத்தனை பேருக்கு ஏக்கர் கணக்கில் வீடு இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டான் மூர்த்தி.

ஒரு பங்களாவின் வாயிலில் ஒரு வேலைக்காரப் பெண் குனிந்து பெருக்கிக் கொண்டிருந்தாள். மாநிறமாய் வாட்டசாட்டமாய் இருந்தாள். 'விருட் விருட்'டென்று துடைப்பத்தால் பெருக்கிய அவள் உடம்பில் பதிவாகிய அதிர்வுகள், சாயம் போன அவளது பழைய துணியின் மூலமாய் அவனுக்குப் புலனாகியது. அந்த அதிர்வுகள் அவனுக்குள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியதைச் சங்கடத்துடன் உணர்ந்தான். அவள் முகம் எப்படி இருக்கிறது என்று பார்க்கும் பரபரப்புடன் அவளை நெருங்கினான். இவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் தன் வேலையில் ஈடுபட்ட அந்தப் பெண் முகம் வசீகரமாகவே இருந்தது. அளவில் பெரிய, வெள்ளைக் கற்கள் பதித்த மூக்குத்தியுடன் அவள் அழகாகவே இருந்தாள். அவளை விட உடலளவில் ஒல்லியான வீட்டு எஜமானியம்மாள் கொடுத்த பழைய ரவிக்கையை அவள் அணிந்து கொண்டிருக்கிறாள் என்று பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது.

இவளுக்கெல்லாம் டயபடீஸ் வந்தால் என்ன செய்வாள்? எப்படி டயட்டில் இருப்பாள்? கிடைத்ததைக் கிடைத்தபோதெல்லாம் சாப்பிடும் இவர்களுக்கு டயட்டாவது? இவளைவிடப் பல மடங்கு வாழ்க்கைத்தரத்திலே உயர்ந்திருக்கிற எனக்குச் சாப்பிடவே முடியாத வியாதி வந்து விட்டதே? என்ன கொடுமை இது?

இயற்கை சன்னமாய் ஒரு பாலன்ஸ் செய்வதை உணர்ந்தான் மூர்த்தி. சக்தியிருக்கிறவர்களுக்கு உள்ளூர ஒரு பலவீனத்தையும், நலிந்தவர்களுக்கு உள்ளூர ஒரு பலத்தையும் மிகவும் சாமர்த்தியமாய்க் கொடுத்து மேடு பள்ளங்களை நிரவிவிடுகிற இயற்கையின் சாதுர்யத்தை ரசித்தான்.

எதிரில் இரண்டு வாலிபர்கள் ஷார்ட்ஸ் அணிந்து, வியர்வை வெள்ளமாய் வழியஓடி வருகிறதைக் கவனித்தான். செதுக்கின மாதிரியான உடல்வாகு, ஒட்டிய பனியன்களில் புடைத்துத் தெரிந்தது. சற்றுப் பொறாமையாக இருந்தது. இந்த மாதிரிச் சின்ன வயதிலேயே தானும் உடற்பயிற்சி செய்திருந்தால், நாற்பதாவது வயதில் இப்படி, வாய்க்கு ருசியாய்ச் சாப்பிடக் கூட முடியாமல் சிரமப்பட வேண்டாமே என்று நினைத்துக் கொண்டான். சிறு வயதில் எதையுமே முறையாகச் செய்யாமல் அப்படியும் இப்படியுமாகப் பொழுதைக் கழித்தது நினைவுக்கு வந்தது.

'நீச்சல் கற்றுக் கொள்கிறேன்' என்று இரண்டு மூன்று நாட்கள் குளத்தங்கரையில் கொட்டமடித்ததோடு சரி. அளவுக்கு அதிகமாய்த் தண்ணீரில் அலைந்து, சளிகட்டி, இருமல் வந்து, காய்ச்சலில் படுத்துக்கொண்டான். 'குளத்தங்கரைப் பக்கம்' போனே காலை ஒடிச்சுப்புடுவேன்' என்ற அப்பாவின் மிரட்டலோடு, நீச்சல் பயிற்சி ஓய்ந்து போயிற்று.

'சைக்கிள் கற்றுக் கொள்கிறேன்' என்று அப்பாவுக்குத் தெரியாமல், அம்மாவிடம் கெஞ்சிக் கூத்தாடி ஓரணாவும், ரெண்டணாவும் வாங்கி வாடகை சைக்கிளை எடுத்து, எதிர்வீட்டு ரகுவின் நேரடி மேற்பார்வையில் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான். இவன் ஒரு ரவுண்டு போக வேண்டுமானால், ரகுவிற்கு இரண்டு ரவுண்டு ஓட்ட சைக்கிளைக் கொடுக்க வேண்டும் என்பது உடன்

- மனிதனின் நரம்புகள் 80 போன்கள் ஒலிக்கின்ற அளவிற்குத்தான் ஒலியைத் தாங்க முடியும் என்று ஜெர்மனி நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- நம் உடம்பில் உள்ள அணுக்களில் பாதிக்கு மேல் ஒரு வாரத்திற்கு முன் நம் உடம்பில் இருந்தவை அல்ல. எல்லாம் புதிதாய் உருவானவை.

–ஜா. ரவி.



பாடு. ஒரு மணி நேரம் வாடகைக்கு எடுத்தால் முக்கால் மணி நேரம் அவன் ஓட்டுவான். கால் மணி நேரம் தான் இவனுக்கு வரும். கற்றுக் கொள்ள வேண்டுமே என்று பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்வான். அது என்ன மாய வித்தையோ, இவனுக்கு வரவேயில்லை. குளத்தங்கரைப் புளிய மரம் மாதிரி உடம்பை வளைத்துக் கொண்டு சைக்கிளைச் செலுத்தச் சிரமப்பட்டான். விஸ்தாரமான மைதானத்தில் ஓட்டும்போது, அந்தப் பாழாய்ப்போன சைக்கிள், வெறுமையான எல்லா இடத்தையும் விட்டுவிட்டு, மைதானத்தின் ஓரமாய்ச் சிவனே என்று நின்று கொண்டிருந்தஒற்றை மரத்தை நோக்கி இவனை இழுத்துக் கொண்டு போய்ப் படாரென்று மரத்தில் மோதி இவனைக் கீழே சாய்த்துத் தானும் சாய்ந்து விட்டது. இவனையும் சைக்கிளையும் அள்ளிப் போட்டுக் கொண்டு ரகு வீட்டில் சேர்த்தான். சைக்கிள் கடைக்காரனுக்கு நஷ்ட ஈடாக இருபத்தைந்து ரூபாயும், டாக்டர் பில்லாக நாற்பது ரூபாயும் கொடுத்துவிட்டு அப்பா நரசிம்மாவதாரம் எடுத்துத் தன் ஆயுதமான விசிறிக் காம்பை எடுத்ததும், பாதி விளாசலை அம்மா வாங்கிக் கொள்ள, சைக்கிள் ஓட்டும் படலம் அன்றோடு முடிந்து போயிற்று.

வேகவேகமாய் நடக்கலானான்.

நம் பெண்களையாவது நன்றாக விளையாடப் பழக்க வேண்டும், வீராங்கனைகளாகவளர்க்க வேண்டும்; நாளை முதல் பெரிய பெண்ணையும் தன்னோடு அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

எதிரில் இரண்டு பெண்கள் வேகவேகமாய் நடந்து வந்தார்கள்.


டைட் பாண்டும் உடலைக் கவ்விய டீ ஷர்ட்டுமாய் அந்தப் பெண்கள் உடம்பு குலுங்க நடந்து வந்ததை ரகசியமாய்ப் பார்த்து ரசித்தான். 'இப்போதெல்லாம் அநேகமாய் எல்லாப் பெண்களும் அழகாய்த் தான் இருக்கிறார்கள்' என்று நினைத்துக் கொண்டான்.

தன் பெண் நடந்து வரும் போதும் இப்படித்தானே மற்றவர்கள் பார்ப்பார்கள் என்று நினைத்துக் கொண்டதும் அடிவயிறு குபீரென்றது. 'வாக்கிங்'கும் வேண்டாம். ஒரு இழவும் வேண்டாம். எல்லாம் வீட்டுக்குள்ளேயே எக்ஸர்ஸைஸ் பண்ணட்டும். அதையும் தவிர, அவர்களுக்கு நாற்பது வயதாகிறபோது, அம்மைத் தடுப்பு ஊசிமாதிரி டயபடீஸுக்குத் தடுப்பு மருந்து கண்டு பிடித்து விடுவார்கள்' என்று எண்ணிக் கொண்டான். மனத்துக்கு நிம்மதியாக இருந்தது. பின்னால் திரும்பி அந்தப் பெண்களைப் பார்த்தான். பின்னால் பார்க்கவும் அந்தப் பெண்கள்அழகாய் இருப்பதைக்கவனித்தான். மனத்தின் ஏதோ மூலை லேசாக வலித்தது.

கால்கள் கெஞ்சின.

மணியைப் பார்த்தான். ஆறு பத்து. திரும்பிப் போனால் சரியாக இருக்குமே என்று தோன்றியதும் உற்சாகமாக இருந்தது

வந்த பாதையில் திரும்பி நடக்கலானான்.



குறிஞ்சி மலர் 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் என்பது தெரியும். ஆனால் இதைவிட மிக அதிக ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும் இன்னொரு தாவரமும் இருக்கவே செய்கிறது! கத்தாழை நூறு வருடங்களுக்கு ஒரு முறைதான் பூக்கும்! அதனால் இதனை பாட்டனியில் 'செஞ்சுரி பிளாண்ட்' என்று சொல்வார்கள்.

—டீ. வி. 'இளந்தென்றல் நிகழ்ச்சியில் கேட்டது. —சி. பூபால்சிங்

எதிரில் வேறு சிலர் காலில் ஷூவுடன் வந்து கொண்டிருந்தனர்.

'இப்போ ஊரிலே டயபடீஸ் ஜாஸ்தியாயிடுச்சி போலிருக்கு' என்று எண்ணிக் கொண்டே நடந்தான்.

அந்த நினைவே சுகமாய் இருந்தது.

"மணி ஏழரையாறது இன்னும் தூங்கறீங்களே? இனிமே எப்போ எழுந்திருந்து எப்போ வாக்கிங் போறது...''

கட்டிலில் தலையோடு காலாய்ப்போர்த்திக் கொண்டு கிடந்த மூர்த்தியை உலுப்பிக் கொண்டிருந்தாள். மாலா.

கைக்குழந்தை மாதிரி நெளிந்தான் மூர்த்தி. கண்கொள்ளாமல் தூக்கம் வழிந்தது.

''ரொம்ப அசதியாயிருந்தது. தூங்கிட்டேன். ஆனாலும் வாக்கிங்போற மாதிரிக் கற்பனை பண்ணிண்டுதான் படுக்கையிலே படுத்திண்டிருந்தேன்... காலையிலே சீக்கிரம் எழுந்திருக்கணும்னு தான் பார்க்கறேன்.... முடியல்லே மாலா. என்னமா தூக்கம் வரது தெரியுமோ...? ஒருவேளை டயபடீஸ் இருந்தாலே தூக்கம் வருமோ... நாளை லேர்ந்து பாரேன்... ரெகுலராப் போறேன்''

சோம்பலுடன் படுக்கையை விட்டு எழுந்தான் மூர்த்தி.

ஏழரை மணி வெய்யில் கண்ணைக் கூசிற்று.

''ஆமா... தெனம் இதைத்தான் சொல்றீங்க... முதல் நாள் ஆர்ப்பாட்டமாப் போனதோட சரி... நாப்பது ரூபாய்க்கு டென்னிஸ் பனியன். எழுபத்தைஞ்சு ரூபாய்க்கு புது ஷூ... வெள்ளைப் பாண்ட் இல்லேன்னு டெரிகாட் புது பாண்ட்டுன்னு இருநூறு ரூபாய்க்கு. எல்லாம் வாங்கி, ஹாங்கரிலே தொங்கறது... மார்னிங் வாக்காம் மார்னிங் வாக்...''

பல்லைத் தேய்த்து விட்டு வந்தான்.

''மாலாக் கண்ணு! இன்னிக்கு மட்டும் காபியிலே சர்க்கரை போட்டுடு... நாளை லேர்ந்து வேண்டாம் நீ வேணாப்பாரேன்..''

காதில் வாங்கிக் கொள்ளாமல் உள்ளே போனாள் மாலா.


மெல்ல மடியும் வேர்கள்

19

ஆன் ஆர்பரை விட்டு டல்லாஸுக்குக் கிளம்பு முன் சில சுவாரசியமான அனுபவங்கள் ஏற்பட்டன.

ஒரு தமிழர் வீட்டிலே சத்திய நாராயணர் பூஜை நடப்பதாக என் மன்னி என்னை அழைத்துக் கொண்டு போனாள்.

வீடு, பெரிய தோட்டத்துடன், தனிமையான ஒரு இடத்தில் பேஸ்மென்டும் மேல் தளமுமாகப் பெரியதாக அமர்க்களமாக இருந்தது. அமெரிக்காவில் சௌகரியமாகத் தங்கிப் பணிபுரியும் எல்லா இந்தியர்களின் வீடும் பெரியதாய்ச் சகல வசதிகளுடன் கூடியதாய் இருக்கும் என்று புரிந்து கொண்டேன். இந்தியாவில் அவர்களது படிப்புக்குக் கிடைக்கும் வேலைக்கு நிச்சயம் கற்பனை கூட செய்ய முடியாத வசதிகள், சம்பளங்கள் இங்கு கிடைப்பது இவர்களை அங்கிருந்து நகர விடாமல் போதையூட்டுவனவாக இருக்கின்றன. இரண்டு கார்கள், இரண்டு டீ. வி. எல்லா வேலைக்கும் மெஷின்கள். தவிர மின்சார - காஸ் செலவில்லாமல் விநாடி நேரத்தில் சமையல் செய்ய உதவும் Microwave Oven இத்யாதிகள் இல்லாத வீடுகளே இருக்காது போல் தோன்றிற்று. சமையல் செய்யவும் அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாதபடி முக்கால் தயாரான பதார்த்தங்களும் நறுக்கப்பட்ட காய்கறிகளும் கிடைக்கின்றன. மிக மலிவாகக் கிடைக்கும் சாப்பாட்டு வகைகள் ஏராளம். காலை உணவுக்குப் பல ருசிச் சுவையான ரெடிமேட் Cereal-கள். பல வகை அட்டைப் பெட்டிகள் காலை ஆகாரத்தின் போது மேஜையில் அமர்ந்து விடுகின்றன.



○ டல்லாஸில் ரீயூனியன் டவர்

தினமும் காலையில் அம்மாக்கள் தங்கள் கொழு, கொழு குழந்தைகளை வழக்கமாகக் கேட்கும் கேள்வி:

''ஹனி! விச் சீரியல் டு யூ வான்ட் டு டே?''

ஏராளமாய்ச் சாப்பாடு கிடைக்கும் அமெரிக்காவில் அநேகமாய் எல்லோரும் ''டயட்''டில் இருக்கிறார்கள்! ஒவ்வொரு ஆகாரத்து விளம்பரத்திலும் இது 'low Calorie' என்று விளம்பரப்படுத்துகிறார்கள். இனிப்புப் பண்டங்களில், non fattening, low Calorie no sugar என்று ஆசைகாட்டுகிறார்கள். வீட்டில் வளர்க்கும் நாய், பூனைக்குக் கூட low Calorie diet!' இதைப் பற்றி நான் பிறகு திரு. உதயமூர்த்தியிடம் குறிப்பிட்டபோது அவர் ''இது வாஸ்தவம் தான்'' என்று சிரித்தார். அவருடைய நாய் நல்ல சத்தான ஊட்டமுள்ள ஆகாரத்தைச் சாப்பிட்டுப் படு சோம்பேறியாகப் போயிற்றாம். அவரைப் பார்த்ததும் பாய்ந்து ஓடி வரும் வழக்கம் போய்த் தூரத்தில் உட்

○ ஹூஸ்டன் துறைமுகம்



கார்த்தபடியே வாலை ஆட்ட ஆரம்பித்ததாம்.

அமெரிக்காவில் குடியேறி விட்ட பல இந்தியர்களுக்கும், கிட்டத்தட்ட இப்படிப்பட்ட ஒரு சோம்பேறித்தனம் தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. இந்தியச் செய்தியைத் தெரிந்து கொள்ளக் கூட ஆர்வம் மங்கி வரும் சோம்பேறித்தனம்... இந்திய வாழ்வின் எல்லா அம்சமுமே... மட்டமாகத் தாங்கள் வாழ லாயக்கற்ற தாய்த் தோற்றுவித்துவிட்ட மெத்தனம்...

இவர்கள் எல்லோரும் மொத்தத்தில் தங்களுக்குள் சூழ்கியிருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றிற்று. இதில் இரண்டு வகை —ஒரு பிரிவு தாங்கள் அறியாத குற்ற உணர்வுடன் ஒரு இந்திய கலாச்சார பிரமையை உருவாக்கிக் கொண்டு, அந்தப் பிரமையே தங்கள் வேர்களாகப் பாவித்து, அதை மிகத் தீவிரமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு விதமான தவிப்பு காணப்பட்டது. இந்த முரண்பாடு விசித்திரமாகத் தோன்றியது.

கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை என்கிற கதை இது. அமெரிக்க சௌகரிய வாழ்வு வேண்டும், ஆனால் அதன் கலாச்சாரம் தம் குழந்தைகளுக்கு ஒட்டக் கூடாது! இந்தியாவுக்குத் திரும்பி வந்து வசிப்பது ஒத்துவராது ஆனால்இந்தியாவில் அவர்கள் பதினைந்து இருபது வருஷங்களுக்கு முன் பார்த்த கட்டுப்பாட்டுடன், — அமெரிக்க சமூக அமைப்பைத் தவிர வேறு எதையும் பார்த்திராத, அறியாத அவர்களுடைய குழந்தைகள் வளர வேண்டும்! இதில் யார் அதிகம் பரிதாபத்துக்குரியவர்கள் — பெற்றோர்களா குழந்தைகளா என்று நான் குழம்பினேன். அமெரிக்க வாழ்வோடும் ஒட்டாமல், தற்கால இந்திய சமுதாயப் போக்கையும் உணராமல் நிற்கும் இவர்களிடையே அமானுஷ்யமான ஒரு தேக்கம் தெரிவது போல் எனக்குத் தோன்றிற்று.

ஆனால் இந்த இரண்டுங்கெட்டான் தவிப்பு அடுத்த தலைமுறைக்கு இருக்காது.

வாஸந்தி

ஏனென்றால் அவர்களை வேர்களின் ஞாபகம் அலைக்கழிக்காது — அதைப்பற்றிய பிரமைகள் சுமையாக இருக்காது. வெகு இயல்பாக அமெரிக்கக் கலாச்சாரத்துடன் கலந்து போவார்கள்....

சத்தியநாராயண பூஜைக்கு நிறைய இந்துப் பெண்கள் வந்து அமர்ந்திருந்தார்கள். திடீரென்று throw the water! Ring the bell!'' என்று அவர்களிடையே ஒரு ஆண் குரல் அதட்டலாகக் கேட்டது. நான் திடுக்கிட்டுக் கூர்ந்து பார்த்தேன். நட்ட நடுவில் ஒரு சின்ன டேப் ரெக்கார்டரிலிருந்து குரல் கேட்டது. ஸம்ஸ்கிருதத்தில் அஷ்டோத்திரம். நடுநடுவில் பூஜை செய்பவருக்கு ஆங்கிலத்தில் கட்டளைகள்! மணி அடியுங்கள் தீபாராதனை காட்டுங்கள் என்று. 'Throw the Water' என்று ஆங்கிலத்தில் கேட்க வேடிக்கையாக இருந்தது!

பூஜைக்குப் பிறகு, அதன் பலன்கள் (ஆங்கிலத்தில் அச்சிட்டது) படிக்கப்பட்டன. பூஜையை நிறுத்தினாலோ வேண்டுதலை நிறைவேற்றா விட்டாலோநேரும் துர்பாக்கியங்களும் தண்டனைகளும் விவரமாகப் படிக்கப்பட்டன.

அங்கு உட்கார்ந்திருந்த பெண்கள் எல்லோரும் படித்தவர்களாக நாகரீகமாகத் தோன்றினார்கள். நம்ப முடியாத திகைப்புடன் நான் அமர்ந்திருந்தேன். முப்பது வருஷங்களுக்கு முன் என் பாட்டியின் நம்பிக்கைகளுக்கும் இவர்களது நம்பிக்கைக்கும் அதிக வித்தியாசமில்லை என்கிற உணர்வில். அவர்கள் பிக்னிக்கிற்கு வந்தது போல் கொண்டு வந்திருந்த பதார்த்தங்கள் காலியானதும் பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு yankee உச்சரிப்பு ஆங்கிலத்துடன் தத்தம் காரில் ஏறி வாகவமாக முனை திரும்பி மறைந்ததும், நான்

○ டல்லாஸ் விமான நிலையம்



தான் ஏமாற்றப்பட்டாற் போல் தனித்து நின்றேன்..

இப்படிச் சில குடும்பங்கள். வேறு சில முழுக்க முழுக்க அமெரிக்கப் பின்னணியுடன் கலந்துபோய், அமெரிக்க உடையும் பேச்சும் சாப்பாடுமாய், தனித்தன்மையை இழந்து...

இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பும் பற்றுதலும் உள்ள இந்தியர்களும், நிறைய இருக்கிறார்கள். திரைகடல் ஓடி திரவியம் தேடும் பணியின் மத்தியில் தாய்நாட்டிடம் ஆத்மார்த்தப் பற்றுதலும் பாசமும் கவலையும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். நான் பொதுவான நிலையை எழுதுகிறேன். அந்தப் பொதுவான நிலை பரவலாகப் போவது என்னுள் துக்கத்தை ஏற்படுத்துகிறது.

பெற்றவர்களை மறக்கும் பிள்ளைகளுக்கும் பிறந்த மண்ணை மறக்கும் பிரஜைகளுக்கும் என்ன வித்தியாசம்?

தீபாவளி அன்று அண்ணா வீட்டில் காலையில் பண்டிகை கொண்டாடி, மதியம் பன்னிரண்டு மணிக்கு டெட்ராய்ட் விமான நிலையத்துக்குச் சென்றேன். திரு. சங்கர் ரமணி அனுப்பியிருந்த டிக்கெட் எனக்காகக் காத்திருந்தது. விமானப் பயணம் ரொம்ப போரடித்தது. சிகோகோவில் வேறு ஒரு மணிநேரம் நின்றது. பிளேனில் ஒலிபெருக்கியில் சொன்னதில் ஒரு அட்சரம் கூட எனக்குப் புரியவில்லை. நம் உள்நாட்டு விமானப் பயணத்தின் போது நொடிக்கொரு தரம் எதையாவது கொண்டு கொடுத்து உபசரிக்கிறார்கள். அமெரிக்காவிலும் ஃப்ரான்ஸிலும், நான் பயணித்த உள்நாட்டு விமான ஸர்வீஸ்ஸில் நீர் கூடக் கிடைப்பதில்லை. காசு கொடுத்தால் ஏதாவது கிடைக்கும்!

டல்லாஸ் விமான நிலயத்திற்கு திரு.சங்கர்ரமணி வந்திருந்தார். 'எண்ணெய் மன்னன்' என்று குறிப்பிடும் அளவுக்கு வாழ்வில் உயர்ந்திருக்கும் அவர் என்னுடைய மகாகனமான பெட்டிகளைத் தாமே தூக்கி விமான நிலையத்துக்குவெளியில் இருந்த தமதுகாருக்கு எடுத்துச் சென்றது வியப்பைத் தந்தது. அவரளவு செல்வமுள்ளவர் இந்தியாவில் இருந்தால் எட்டுக் கண் விட்டெறியும்! முதல் முறையாக அவரை சந்தித்த என்னை அவருடைய சுபாவிக எளிமை மிகவும் கவர்ந்தது. அதிகம் ஆங்கிலம் கலக்காமல் தமிழ்நாட்டில் பேசுகிறாற் போல் தமிழும் அமெரிக்க வாடையில்லாத ஆங்கிலமும் பேசினார். தமிழ் பத்திரிகைகளையும் அவர் படிப்பதை அறிந்து பெரிய ஆச்சரியம் ஏற்பட்டது எனக்கு.

''சொந்தத் தொழில் செய்வது அமெரிக்காவில் சுலபமாக இருக்கிறது. திறமையிருப்பவர்களுக்கு நிறைய வாய்ப்பு இங்கு. இந்தியாவில் இருப்பது போல் சிவப்பு நாடா இங்கில்லை. பர்மிட்டுக்கும் லைசென்சுக்கும் அலையாய் அலைய வேண்டியதில்லை. எந்த அரசியல்வாதிக்கும் வாய்க்கரிசி போடவேண்டியதில்லை. என் தொழில் சம்பந்த மட்டில் நான் திருப்தியாயிருக்கிறேன்'' என்றார்.

சற்று தூரம் கார் சென்றதும் ஒரு பெரிய கோடௌன் மாதிரி தோன்றிய இடத்துக்கு முன் நிறுத்தினார். அந்த ஷெட்டிற்குள் ஒரு விமானம் இருந்தது. மிக சாதாரணமாக, ''இதுதான் என்னுடைய ஏரோப்பிளேன்'' என்றார். இதுதான் என் சைக்கிள் என்கிற விஷயம் போல்! அருகில் சென்று அதைக் காண்பித்தார். ''பைலட்டைத் தவிர எட்டு பேர் உட்காரலாம்'' என்றார். இந்தியாவிலிருந்து வந்திருக்கும் அவரது சகோதர, சகோதரிக் குடும்பத்தினர் இதில் தான் அமெரிக்க டூர் சென்றார்களாம். அவர்களுக்கு விமானத்தில் பயணித்து அலுத்து விட்டதால் நான் போய்ச் சேர்ந்தவுடன் என்னையும் அழைத்துக் கொண்டு அவரது வானில் ஹூஸ்டனுக்குக் கிளம்ப ஏற்பாடாகியிருப்பதாகவும் சொன்னார்.

டல்லாஸில் 'ஸோனாபாத்' தும் நீச்சல்குளமுமாக அவரது வீடு ஒரு பெரிய மாளிகை. நல்ல கலா ரஸனையுடன் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வீடு நிறைய உறவினர்களும், ஹாஸ்யமான தமிழ்ப் பேச்சும். அன்று தீபாவளியாதலால், உக்காரை, மிக்ஸர், தேன்குழல் பட்சணங்களுமாய்த் தமிழ்நாட்டில் இருப்பது போலவே எனக்குத் தோன்றிற்று. டல்லாஸில் நல்ல வெய்யில் வேறு!

வீட்டின் சுபிட்சத்துக்கும் ஆடம்பரத்துக்கும் சம்பந்தமில்லாத எளிமையுடன், சங்கர் ரமணி தம்பதிகள்!

மினி பஸ்ஸைப் போல் இருந்த வானில் திருமதி சங்கர் ரமணியும் குழந்தைகளும் தவிர மற்ற எல்லோரும் ஹூஸ்டனுக்குக் கிளம்பினோம். வேடிக்கைப் பேச்சும் கிண்டலும் பாட்டும் சீட்டுக் கச்சேரியுமாகப் பயணம் முழுவதும் நிஜமான உல்லாசப் பயணமாக இருந்தது. அத்தனை நெருக்கமான குடும்பத்தைப் பார்க்க மிகவும் சந்தோஷமேற்பட்டது..

ஹூஸ்டனுக்குச் செல்லும் பாதையின் ஆரம்பத்திலேயே நெடுஞ்சாலையின் அழகும் பிரமிக்க வைக்கும் பல மாடிகள் கொண்ட ஃப்ளை ஓவர்களும் என் சிந்தையைக் கவர்ந்தன. எண்ணெய்ச்செல்வம்மிகுந்த இந்தப்பகுதி நெடுக அங்கங்கே எண்ணெய்க் கிணறுகள் தெரிந்தன. மிக நவீனமான பளபளக்கும் வானளாவிய பன்மாடிக் கட்டிடங்கள் கண்ணில் பட்டன. சிமெண்ட்டும் சுண்ணமும் இல்லாத அடுக்கு மாடிக்கட்டிடங்கள். இரும்புச் சட்டங்களில், கண்ணாடிகளைப் பொருத்தி வெகு விரைவில் இந்தப் பிரும்மாண்டங்களை எழுப்பி விடுகிறார்களாம். இந்தப் பயணத்திலும் பல ஏக்கரா நிலப் பரப்புவெட்ட

ஆய்வு:

குற்றங்கள் குறையுமா?

1983-ல் முன்னெப்போதும் இல்லாத அளவில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு குற்றங்கள் தமிழகத்தில் உயர்ந்தன. 84லிலும் இந்தப் போக்கே தொடர்கிறது. காரணங்கள் என்ன? எப்படி தடுப்பது?

வெளிச்சத்தைப் பார்த்தேன். இடத்துக்கும் இயற்கை வளத்துக்கும் பஞ்சமே இல்லை இங்கு. அவற்றுடன் மனித யத்தனம் சேர்ந்து எத்தனை பெரிய அற்புத உலகத்தை சிருஷ்டித்திருக்கிறது! தனிப்பட்ட மனிதர்களின் முயற்சியினால் மட்டும் ஏற்பட்ட வளர்ச்சி இல்லை இது. ஒட்டு மொத்தமாய் ஒரு தேசத்தின் உழைப்பு. பொது ஜன வாழ்வைப் பாதிக்கும் எல்லா விஷயங்களிலும், உ-ம், தொலைபேசி, போக்குவரத்து, சுகாதாரம் ஆகியவற்றில் எல்லாம் ஒரு ஒழுங்கு முறை இருப்பதற்குக் காரணம் ஒவ்வொரு பிரஜைக்கும் சுவபாவிகமாக இருக்கும் பொறுப்புணர்ச்சி. சுகாதாரமும் பொது நல உணர்வும் அவர்களது வாழ்வோடு ஐக்கியமாகி இருக்கின்றன. ஒரு விமான கூடத்தில் ஒரு இளைஞர் கூட்டம் (13-லிருந்து 16 வயது இருக்கும்.) பார்த்தேன். ஏக அமர்க்களம் செய்து கொண்டிருந்தார்கள். கையில் கோக், ஐஸ் க்ரீம் பெட்டிகளுடன். தங்கள் சாமான்களைத் தாங்களே தூக்கி கொண்டுமே சிறு குப்பையும் போடாமல் அக்கறையுடன் பொறுக்கி குப்பைக் கூடையில் போட்டு விட்டே நகர்ந்தார்கள்.

டில்லியில் ஒரு நம்பர் டெலிபோனில் கிடைப்பதற்குள் கைவிரல் சோர்ந்து போகிறது. அங்கெல்லாம் நம்பர் கிடைக்கவில்லை என்கிற பேச்சே இல்லை. (தவறான நம்பராக இருந்தால் கருவியே சொல்லி விடும் தவறானது என்று) வேண்டியவர்களின் குரல், எத்தனை தொலைவாக இருந்தாலும் அடுத்த அறையிலிருந்து வருவது போல் கேட்கிறது. உடனுக்குடன் காரியத்தைத் தடங்கலில்லாமல் முடிக்கும் கரிசனம் வேறு எங்குசென்றாலும். திரு. சங்கர் ரமணி சொன்னது போல் சிவப்பு நாடாவில் மாட்டிக் கொள்ள வேண்டிய அவஸ்தை இல்லாத நிலையில் நாடு முன்னேறாமல் என்ன செய்யும்?


ஹூஸ்டன் சென்றதும் இரவு ஒரு ரெஸ்ட் ஹவுஸில் தங்கி காலையில் ஸ்ரீராம், கீதா என்ற அன்பு நிறைந்த தமிழ்த் தம்பதியினர் வீட்டிற்குக் காலை உணவைச் சாப்பிடச் சென்றோம். இளம் நாகரீக நங்கையான கீதா அருமையான தோசை வார்த்து எங்களுக்குச் செய்த ராஜோபசாரம் எங்களைத் திக்குமுக்காட வைத்தது.

அந்த இடத்திற்கு திரு. உதயமூர்த்தியும் வந்து சேர்ந்தார். ஹூஸ்டன் மீனாட்சி கோவிலைப்பார்க்கச் சென்றவழியில் அவர் பேசியவை மிக சுவாரஸ்யமாக இருந்தன. மேற்கத்திய நாகரீகத்தின் நல்ல விஷயங்களை ரசித்து தமிழ்நாட்டின் நல்லபண்புகளைக்காப்பாற்றி வருவது அவருடைய தனிச் சிறப்புக்குக் காரணம் என்று புரிந்தது.

(தொடரும்)

மேலட்டை: வாஸந்தி

வண்ணப்படம்: அது


சூப்பர் மேன் மகாவீர்!
உண்மைக் கதை
மகாவீர். 18 வயது. டாக்ஸி டிரைவர். இவ்வாண்டு பிப்ரவரி 24ல் புதுதில்லி விமான நிலையத்தில்....
டாக்ஸி! ராஜஸ்தான் மாநிலம் ஸிகார் மாவட்டத்தில் எங்க கிராமத்துக்குப் போகணும்...
ஆயிரம் ரூபா ஆகும்!
பணம் கைமாறுவதை நாலு கொள்ளையர் கவனிக்கிறார்கள்...
பசையுள்ள புள்ளிங்க தான்!
நெடுந்தூரப் பயணமாதலால் துணைக்கு நண்பன் ஜெய் பிரகாஷையும் அழைத்துக் கொண்டான் மகாவீர். கொள்ளையர் பின் தொடர்ந்தனர்.
அதோ DLT 5554! அந்த டாக்ஸிதான்! ஃபாலோ பண்ணு!
மகாவீரின் டாக்ஸியில்...
மூணு பேரும் எங்கேயிருந்து வரீங்க?
நாங்க கட்டட மேஸ்திரிங்க. குவைத் போயிருந்தோம். நிறைய சம்பாதிச்சோம். ஊரைப் பார்க்க ஆசை வந்திச்சு. லீவிலே வந்தோம்...
ஏகாந்தமான இடத்தில் DEA 6370 எண்ணுள்ள அம்பாஸிடர் டாக்ஸியை முந்திச் சென்று மடக்கியது...



நாலு கொள்ளையரும் துப்பாக்கி, கத்தி சகிதம் ஓடி வந்து, மகாவீரையும் ஜெய்பிரகாஷையும்..
மூச்சு விட்டா .....!
எகிறுதே; எமன் கிட்டத்தான் போவே!
கொள்ளையர் தலைவன் பயணிகளை மிரட்டினான் :
குவெய்த்திலேருந்து கொண்டு வந்த பணம் பொருள்கள் எல்லாத்தையும் கக்கு!
மகாவீர் தந்திரமாகக் கதவு கைப்பிடியைப் பற்றி சரேலென்று இழுக்கக் கொள்ளையன் ....
ஆ! ஐயோ!
காரைச் சுற்றி ஓடி மறு புறத்தில் நண்பன் ஜெயபிரகாஷை காப்பாற்றுகிறான் மகாவீர்...
இந்தா இதை வாங்கிக்க!
அடுத்து பயணிகளிடம் வழிப்பறி செய்து கொண்டிருந்த கொள்ளையர் தலைவன் மீதும் பாய்ந்தான்.
டிஷ்யூம்!
திகிலடைந்த கொள்ளையர் தங்கள் காரில் ஓட முயன்ற போது அவர்கள் கத்தி பயன் பட்டது ....
ராஸ்கல்! இப்ப எப்படி கம்பி நீட்டுவே பார்க்கலாம்!


கொள்ளையர் ஓட்டம் பிடிக்க மகாவீரும் ஜெயப்பிரகாஷும் பின் துரத்திச் சென்று...
டிஷ்யூம்!
ஆ! ஐயோ!
இந்தா சாப்பிடு!
கொள்ளையர் தலைவன் துப்பாக்கி காட்டினன்.
டேய், டாக்ஸி டிரைவர்! என் கிட்ட விளையாடாதே! நான் பொல்லாதவன்.
அஞ்சா நெஞ்சுடன் மகாவீர் ஒரு செங்கல்லை வீச அது கொள்ளையர் தலைவன் தலையைத் தாக்க...
ஆ!
வெற்றி வீரனை மகாவீர்.
ரெண்டு பேர் ஓடிட்டாங்க
தலைவனும் இன்னொருத்தனும் சிக்கிட்டாங்களே, போதாதா! இவங்களை வைச்சே அவங்களைக் கண்டு பிடிச்சுடலாமே!
பயணிகளின் நன்றி
ரொம்ப தாங்க்ஸ் மகாவீர் சினிமாலெ வர ஹீரோ மாதிரி நடந்துக்கிட்டே!
சினிமா கதாநாயகனுக்குக் கிடைப்பது 20 லட்சம் ரூபாய். மகாவீருக்குக் கிடைத்த போலீஸ் பரிசு ரூ.200!
இரண்டு கோடியா இதை மதிக்கிறேன் ஸார்!


இலவசம்!
Glucovita
FREE
STAINLESS STEEL SPOON
WITH THIS PACK
Take 10 g (two teaspoonfuls) or more two or three times a day in water tea, coffee, milk or other beverages
® Regd. Proprietors CPC International Inc. New Jersey, U.S.A.
® Regd. Users Corn Products Co. (India) Ltd. Bombay - 400 001
ஒரு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஸ்பூன்–
குளுகோவிடா குளுகோஸ்–டீ யின்
விசேடமான லேபிள் உள்ள
பேக்கிற்குள்
க்ளூகோவிடா க்ளூகோஸ்-டீ களைப்பை போக்குது,
உடனடி சக்தி அளிக்குது.
முந்துங்கள்! ஸ்டாக்குகள் மிதமாகவே உள்ளன

ஆரோக்கியம் அழைக்கிறது


புற்று நோய்

ஒரு கருவானது. ஒரே செல்லில் இருந்து ஒரு குழந்தையாக உருவாகிறது. அந்தக் குழந்தை பிறகு பெரிதாக வளர்கிறது. அப்படி ஒரு செல்லிலிருந்து அத்தனை பெரிய உருவம் வருவதற்கு எத்தனை கோடிக்கணக்கான செல்கள் வேண்டும் என்று எண்ணிப் பார்க்கவும். ஆனால் அந்தந்த உறுப்புக்கள் தேவைக்கும் அதிகமாக வளர்வதில்லை. உதாரணமாக, கை, உடலுக்குத் தகுந்த நீளம் வளர்ந்ததும் நின்று விடுகிறது. இரத்த அணுக்கள் வேண்டிய அளவு தான் போன் மாரோ (BONE MARROW) வில் தயாராகிறது. அப்படி ஏதாவது ஒரு தசை அளவுக்கு மீறி, வளர்ந்து கொண்டே போனால், அதுதான் புற்று நோய். அப்படித் தசை வளர்ந்து பக்கத்தில் இருக்கும் வேறு தசைகளையும் தின்று விடும். அதுவுமில்லாமல் இரத்தத்தின் வழியாக வேறு பாகங்களுக்குப் போனால், அந்தப் பாகத்தையும் தின்றுவிடும். உதாரணமாக, நுரையீரல் புற்றுநோய் இரத்தத்தின் வழியாக மூளைக்குப் போனால், மூளையை அழித்து விடும்.

புற்றுநோய் வருவதற்குத் திட்டவட்டமான காரணம் கிடையாது. நுரையீரல் புற்றுநோய் புகை பிடிப்பவருக்கு வரும். ஆனால் சில சமயங்களில் புகை பிடிக்காதவர்களுக்கும் வரலாம். பொதுவாக நம் நாட்டில் புகையிலை போட்டுக் கொண்டு கன்னத்தில் அடக்கி வைத்துக் கொள்ளுவதால் வாயில் புற்று நோய் வருகிறது.

> வேகமாகப் பரவும் ரத்த அணுப் புற்று நோய்கள் (அக்யூட் லுகேமியா) தவிர, மற்றவை எல்லாம் மெதுவாக வளர்வதே. ஏன் கடைசிக் கட்டம் வரை வளர விடுகிறார்கள் என்றால், புற்று நோய் கடைசி வரை வலியில்லாமல் இருப்பதே காரணம். மற்ற நோய்கள் போல, வலி ஆரம்ப கட்டத்திலேயே தெரிய வந்தால், முதலிலேயே மருத்துவரிடம் வந்து விடுவார்கள். புற்று நோயை ஆரம்பக் கட்டத்திலேயே குணப்படுத்துவது மிக எளிதும்கூட.

புற்று நோய்க்குப் பல நூறு ஆண்டுகளாக ரண சிகிச்சையே செய்யப்பட்டு வந்தது. முதல் உலக மகா யுத்தத்திலிருந்து கதிரியக்கத்தினால் சிகிச்சை துவங்கினோம். இரண்டாவது உலக மகா யுத்தத்திலிருந்து தான் மருந்துகள் மூலம் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. ஆகையால் புற்று நோய்க்கு




○ டாக்டர் வெலாமின் வி. லாரன்ஸ்

மருந்துகள் மூலம் அளிக்கும் சிகிச்சை மருத்துவத்தில் புதியது எனலாம். இதை கீமோதெரபி என்பார்கள்.

பெண்களின் கர்ப்பப் பையில் வரும் 'கோரியோ கார்சினோமா' புற்று நோயை ரண சிகிச்சை இன்றியே மிக எளிதில் பூரண குணம் செய்யலாம். சிறு பிள்ளைகளுக்கு வரும் ரத்த அணுப் புற்றுநோய் (அக்யூட் லிம்ஃபாடிக் லுகேமியா) மற்றும் சிறுநீரகப் புற்றுநோய் (WILMS) மருந்தினால் முழுக்கக் குணமாக்கி விடலாம். தற்பொழுது HODGKIN'S என்னும் LYMPH GLAND புற்று நோய், முற்றிய நிலையில் கூட மருந்தினால் பூரண குணமாக்கலாம். ஆனால் இந்த மருந்துகள், மற்ற மருந்துகள் போல் சாதாரணமானவை அல்ல. மிகவும் தொல்லை கொடுக்கக் கூடியவை. ஆகையால் இந்த மருந்துகளை, இதற்காகப் பயின்றவர்கள் மட்டுமே கொடுக்க வேண்டும். ஏனென்றால் மருந்துகள் பல. புற்றுநோயிலும் பலவிதமானவை உள்ளன. ஆனால் இன்னின்ன வகைப் புற்று நோய்க்கு இன்னின்ன மருந்துகள் தான் கொடுக்கவேண்டும் என்றிருக்கிறது. எல்லா மருந்துகளும் எல்லாப் புற்று நோய்களுக்கும் பொருந்தாது. கொடுக்கவும் கூடாது. புற்று நோய்கள் எல்லாமே ஒருவரைக் கொன்றுவிடும் என்பது தவறான கருத்து.

அநேகமாக எல்லாப்புற்று நோய்களையும் ஆரம்பகட்டத்திலேயே கண்டுபிடிக்கலாம். அதற்கு முக்கிய தேவை பொது மக்களின் ஒத்துழைப்பு. பெரிய பெரிய கருவிகள் வேண்டாம். அதிகப் பணம் செலவு செய்ய வேண்டாம். பொதுமக்கள் புற்று நோய்க்கான பரிசோதனைகளை, வியாதியின் அறிகுறி எதும் இல்லாமல் இருக்கும்

○ புற்றுநோய்க்கு கோபால்ட் கதிர் சிகிச்சை அளிக்கப்படுகிறது.



பொழுதே பண்ணிக் கொள்வது அவசியம். ஏதாவது வலியில்லாத கட்டி அல்லது அசாதாரண ரத்தக் கசிவு இருந்து வந்தால், சில சமயங்களில் அது கடைசிநிலையாக இருக்கும். ஆகையால் வியாதி இல்லாமல் இருக்கும் பொழுதே பரிசோதனை செய்து கொள்ளுதல் அவசியம்.

கர்ப்பப்பை புற்றுநோய் (CANCER UTERUS)

கர்ப்பப்பை வாயில் வரும் புற்றுநோய்தான் நமது நாட்டுப் பெண்மக்களிடையே அதிகம். இந்த நோய் மேலை நாடுகளில் அதிகம் இருந்தது. ஆனால் PAP என்கிற 'பொப்பனிகுல்' பரிசோதனைமூலம் அந்தப் புற்று நோய் மிகக் குறைந்துவிட்டது. இந்தப் பரிசோதனையை, மிக எளிதில், ஐந்தே நிமிடங்களில், பண்ணி விடலாம். வலி கிடையாது; பணச் செலவும் அதிகம் ஆகாது. CYTOLOGY தெரிந்த மருத்துவர் மட்டுமே இந்தப் பரிசோதனை செய்து சொல்ல வேண்டும். பரிசோதனையின்போது புற்றுநோயின் அறிகுறி தெரிந்த உடன் சிகிச்சை அளித்துப் பூரண குணம் அடைவது எளிது. ஆனால் வளர விட்டால் இந்தக் கொடிய நோய் உயிரையே அழித்துவிடும். இந்நவீன பரிசோதனை செய்யத்தேவையில்லை என்று சொல்லக்கூடும். ஆகையால் அந்தப் பரிசோதனை பற்றிப் படித்த மருத்துவர்களிடமே செல்ல வேண்டும்.

வாய், தொண்டை, குடல்—புற்றுநோய்:

மேற்படி பரிசோதனை தவிர, புற்றுநோய் சம்பந்தப்பட்ட ONCOLOGY சோதனையும் செய்து கொள்ள வேண்டும். இரு வருடங்களுக்கு ஒரு முறையாவது மருத்துவர்களிடம் சென்று இந்தச் சோதனையைச் செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக, வாய் அல்லது தொண்டையில் ஏதாவது தொந்தரவு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆண்களாய் இருந்தால் அந்த அங்க பாகங்களைப் பரிசோதித்துக்கொள்வது அவசியம். மலத்தில் மைக்ரோஸ்கோப்புக்கு மட்டுமே தெரிகிற (OCCULT BLOOD) ரத்தம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இருந்தால் ஏன் என்று கண்டுபிடிக்கவேண்டும். இதற்கு என்று மருத்துவரிடம் செல்லாவிட்டாலும், வேறு சிகிச்சைகளுக்குப் போகும் பொழுதாவது, இந்த நோய்க்குறி பற்றி மருத்துவரிடம் தெரிவிக்கவேண்டும்.

மார்பகப் புற்றுநோய் (CANCER BREAST)

பெண்களின் மார்பகப் புற்றுநோய் கண்டுபிடிப்பது மிக எளிது. அதற்கு மருத்துவர் உதவி தேவையில்லை. பெண்களின் மார்பகத்தில் வலியில்லாமல் இருக்கும் எந்தவிதக் கட்டியையும் எடுத்துவிட வேண்டும். சிறிது — பெரிது, என்று பார்க்காமல் மருத்துவரிடம் சொல்லி எடுத்து விடுவது நல்லது. பெண்கள் தங்களைத் தாங்களே மாதத்திற்கு ஒரு முறையாவது குளிக்கும் அறையிலோ, படுக்கும் அறையிலோ, கண்ணாடி முன் நின்று தங்கள் மார்பகத்தைக் கைகளால் பரிசோதனை செய்ய வேண்டும். ஏதாவது கட்டியாக அல்லது உருண்டையாக தெரிந்தால் உடனே மருத்துவரிடம் சென்று காட்ட வேண்டும். அந்தக் கட்டி எவ்வளவு சிறிதாக இருந்தாலும், கரையவில்லை என்றால் அதை எடுத்து விடவேண்டும். அப்படி எடுக்காமல், சில மாதங்கள் கவனக் குறைவாக இருந்து விட்டால், எவ்வளவு செலவு செய்தாலும் உயிருக்கு ஆபத்து நேரும். இந்தக் கொடிய நோயின் வலி மிக அதிகம்! ஆக, புற்றுநோயை உங்களாலேயே தடுக்க முடியும்.

-டாக்டர் பெல்லார்மின் வி. வாரன்ஸ்

தொகுப்பாசிரியர் குறிப்பு:

புற்றுநோய் இப்போதெல்லாம் நல்ல முறையில் வைத்தியம் செய்யக் கூடிய வியாதிகளில் ஒன்று. ஆகையால் மிதமிஞ்சி பயப்பட்டு, அங்குமிங்கும் அலைந்து எப்படியாவது சில நாட்களுக்குள்ளேயே குணப்படுத்தி விடவேண்டும் என்று துடிக்காதீர்கள். மனதைரியத்துடன், தகுந்த வைத்திய ஆலோசனையுடன் இந்த நோயைக் கட்டுப்படுத்தி, வாழ்க்கையைச் செவ்வனே நடத்த முடியும். புற்று நோயை எந்த டாக்டரும் வைத்தியம் செய்யலாம் என்ற கருத்து தவறானது. இப்போதெல்லாம் ஒவ்வொரு விதமான புற்றுநோய்க்கும் நிபுணர்களின் ஆலோசனை மூலம் சிகிச்சை செய்து கொள்ளலாம். இது ஒருவரால் செய்யக் கூடிய சிகிச்சை அல்ல. மருத்துவர், அறுவைச் சிகிச்சை நிபுணர், கதிரியக்க நிபுணர் இவர்கள் அனைவரும் கூடிச் செய்ய வேண்டிய வைத்திய முறை.

நவீன உத்திகளையும், வைத்திய முறைகளையும் நிபுணர்களின் ஆலோசனையின்றிச் செய்து கொள்ளவே வேண்டாம்!

1. CYTOLOGY: உடலிலுள்ள செல்களை மைக்ராஸ்கோப்பின் வழியே பார்த்து, இவை சாதாரணமானவையா, அல்லது புற்றுநோய் வகையைச் சார்ந்ததா, நோய்த் தொற்றினால் ஏற்பட்ட மாறுதல்களா என்று கண்டு பிடிப்பது சைட்டாலஜி. இதற்கு மிகுந்த அனுபவமும் பயிற்சியும் தேவை.

2. ONCOLOGIST: எல்லாவிதமான புற்றுநோய்களுக்கும் அவற்றின் தனித்தன்மையை, அதற்குத் தகுந்த பரிசோதனைகள் மூலமாகக் கண்டுபிடித்து, அதற்குத் தேவையான அறுவை சிகிச்சை மூலமாகவோ அல்லது கதிரியக்கம் மற்றும் மருந்துகள் மூலமாகவோ சிகிச்சை அளிப்பவர். இது ஒரு தனித்துறை.

தொகுப்பாசிரியர் டாக்டர் வியாஸ்

கட்டுரை வடிவம்: சாருகேசி



பழைய வயலின்!

ஜெயந்தி சங்கர்

விரிசல் கண்ட ஊறுகாய் ஜாடிக்குப் பின்னால் அலமாரியின் மேல் தட்டில் மக்கிக் கொண்டிருந்த பழைய பேப்பர்களுக் கடியில் கிடந்தது அந்த வயலின். கமலா அதை எடுத்தபோது சுழல் சுழலாகத் தூசி புறப்பட்டு ஜாடிகளின் மீதும் சுத்தமாய்ப் பெருக்கியிருந்த தரையிலும் படிந்தது.

மேஜை மேலிருந்து கீழே இறங்கினாள் கமலா. கையெல்லாம் கீறல். புழுதி அவளைத் திணறடித்தது. சுத்தமான துணியை எடுத்து வயலின் பெட்டியைத் துடைக்க ஆரம்பித்தாள். அதற்குள் கிடந்த அவள் வயலினின் மரம், காய்ந்தும் தந்திகள் அறுபட்டும் இருந்தது. ஒரு துண்டுத் துணியை எண்ணெயில் முக்கி வாத்தியத் தின் மேல்புறத்தைத் துடைத்தாள். எண் ணெயில் குளித்தபின் மட்ட ரகப் பட்டுத் துணி போல் பளபளத்தது அந்த வயலின்.

தந்திகளை இறுக்கிக் கட்டிவிட்டு வில்லைக் கையில் எடுத்தாள். சுருதி கூட்டப்படாத தந்திகளிலிருந்து வெளிப்பட்ட அபஸ்வரம் தாங்காமல் வாசிப்பதை நிறுத்தினாள். தந்திகளைச் சரி செய்து சுருதி கூட்ட முயன்றாள். ஆனால் தெருவோரத்துப் பிச்சைக்காரர்களைப் போல் அவை மரத் தோடு சுருண்டு கொண்டன.

கமலாவுக்குத் தன் முதல் சங்கீத வகுப்பு ஞாபகம் வந்தது. ராமச்சந்திரன் பிரபல பாடகர். பலரும் நாடும் பாட்டு வாத்தி யார். அவர் புதுமாணவியாகக் கமலாவை ஏற்றுக் கொள்வதற்குள் அவள் அப்பா பல முறை அவரை வீடு தேடிப் போய் அலைய வேண்டியதாயிற்று. அப்பாவின் அந்தஸ் துள்ள நண்பர் அவளுக்காகச் சிபாரிசு செய் தார். பாடகரோ பல குடும்பங்களில் வெறும் கௌரவத்துக்காக அவரைப் பாட்டு சொல்லிக் கொடுக்க அழைப்பதைத்தெரிந்து கொண்டு லேசில் மசியவில்லை. ஒருவழியாக ஒப்புக் கொண்டவர் வேண்டா வெறுப் புடன் கமலாவின் வீடு தேடி வந்தார். முதல் வகுப்பில் கமலாவை சில ஸ்வரங் களைக் கோடிட்டுக் காண்பிக்கச் சொன்னார். தொடர்ந்து அவள் ஒரு சின்ன வர்ணம் வாசித்தாள். திடீரென்று கற்பனை ஸ்வரங்



களை உதிர்க்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு ஸ்வரமும் சுருதி சுத்தமாய். அவள் விரல்களிலிருந்து ஜனனமாயிற்று. அவள் முடித்து விட்டு நிமிர்ந்த போது ராமச்சந்திரன் அவளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

''இது யாருடைய சிட்சை?''

''யாருடும் இல்லே. நானேதான்.... தப்பாய் இருந்தா மன்னிக்கணும்.''

ஓர் அபூர்வ ராகத்தின் பெயரைச் சொல்லி வாசிக்கச் சொன்னார். திரும்பவும் அனாயாசமாய் காவிரியில் இலைகள் மிதப்பது போல் மிதந்து வந்தன ஸ்வரங்கள்.

''உனக்கு யார் வாசிக்கச் சொல்லிக் குடுத்தா?'' மூக்குக் கண்ணாடியை வேகமாகத் துடைத்துக் கொண்டே மீண்டும் கேட்டார்.

''ரேடியோவில் கேட்டுக் கத்துண்டேன். பக்கத்தாத்துல ராதா கத்துக்கறா. சில சமயம் அவ வாசிக்கறதைக் கேட்டுண்டிருப்பேன்.''

ராமச்சந்திரனுக்கு அதற்கு மேல் தூண்டுதல் தேவைப்படவில்லை. ஒரு மணி நேர வகுப்பை இரண்டு மணி நேரம் நடத்தினார். அஸ்தமித்த பிறகு தாழ்வாரத்தில் விட்டிருந்த செருப்பைத் துழாவி மாட்டிக் கொண்டு சென்றார்.

ஏழு வருஷங்களில் குரு தமக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லிக் கொடுத்து விட்டார்.

''பல வருஷமா என்னை மிஞ்சக் கூடிய சிஷ்யனைத் தேடிண்டிருந்தேன். போயும், போயும் ஒரு பொண்ணா வந்து அப்படி அமையணும்?'' அவர் குரலில் அலுப்பும், வேதனையும் கலந்திருந்தன. ''உனக்குக் கல்யாணமாகிக் குழந்தைகள் பிறக்கும். வயலினை ஒரு மூலையில் தூக்கிப் போட்டுவிட்டு எல்லாத்தையும் மறக்கப் போறே. நான் அடியத் தொடடான்னு திரும்பவும் சிஷ்யனைத் தேட ஆரம்பிக்கணும்.''

கமலா வாதாடினாள். எம். எஸ்ஸை உதாரணம் காட்டினாள். ''கல்யாணம் பண்ணின்டும் அவர் சங்கீத சேவை செய்யவில்லையா? எவ்வளவோ பெண் வித்வான்கள் இருக்கிறார்கள்.''

ராமச்சந்திரன் தலையை அசைத்துக் கொண்டே டப்பியிலிருந்து ஒரு வெற்றிலையைப் பொறுக்கி எடுத்தார்.

கமலாவின் முதல் மேடைக் கச்சேரி எதிர்பாராதவிதமாய் அமைந்து விட்டது. பிரபல பெண் பாடகர் ஒருவரின் கச்சேரிக்கு வாசிக்க இருந்த வயலின் வித்வான் ஆந்திரா வெள்ளம் காரணமாய் வர முடியாமல் போயிற்று. கல்யாண சீசனாக இருந்ததால் எல்லா வித்வான்களும் கச்சேரி ஒத்துக் கொண்டிருந்தனர். சபாக் காரியதரிசி தவித்துப் போய்விட்டார். அப்போதுதான் கமிட்டியிலிருந்த ஒருவர் கமலாவின் பெயரைக் குறிப்பிட்டார். தலைவர் தயங்கினார். பாடகிக்கோ முன்பின் தெரியாத சின்னப் பெண்ணை வைத்துக் கொண்டு பாட விருப்பமேயில்லை. வேறு வழியின்றிக் கமலாவுக்கு வாய்ப்புக் கொடுக்கும்படி ஆயிற்று.

கச்சேரி ஆரம்பித்தது. பாடகி முதலில் எளிமையான உருப்படிகளைப் பாடினார். கமலாவை அவ்வப்போது சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டார். ரசிகர்கள் பொறுமை இழக்க ஆரம்பித்தனர். அதைப் புரிந்து கொண்ட பாடகி, தன் முழு வித்வத்தையும் வெளிக் கொணரும் வகையில் பாட ஆரம்பித்தார். கடினமான ஸ்வரப் பிரஸ்தாரங்களைக் கையாண்டார். தீபாவளி வாண வேடிக்கை போல் அவை அரங்கைக் கலகலக்க வைத்தன. உச்சக் கட்டத்தை அடைந்ததும் கரகோஷம் செவியைப் பிளந்தது. வயலினுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

ஒரு விநாடி கமலாவின் கை மரத்துப் போயிற்று. எதிர்பார்ப்புக்கு அடையாளமாய் எங்கும் நிசப்தம். முன்வரிசையில் அமர்ந்திருந்த ராமச்சந்திரன் பார்வையால் தைரியம் சொல்லக் கமலா வாசிக்க ஆரம்பித்தாள். பாடகியின் ஒவ்வொரு ஸ்வரத்துக்கும் ஈடாக அவள் வயலினிலிருந்து நாதம் வெளிப்பட்டது. பாடகியும் மிருதங்க வித்வானும் அந்த அற்புத சங்கீதத்தைக் கேட்டுச் சிலை போல் அமர்ந்திருந்தனர். அவள் வில்லைக் கீழே வைத்ததும் கரகோஷம் கூரையைப் பிளந்தது.

சீக்கிரமே கமலாவின் புகழ் பரவ ஆரம்பித்தது. 'உன் சங்கீதப் பாடத்துக்கு நிஜ

மான ஆரம்பமே இனிமேல் தான். நிறுத்தாமல் வாசிக்கணும்' என்று உபதேசம் செய்தார் குரு. அந்த உபதேசத்துக்கு அவசியமே இருக்கவில்லை. கமலா விரும்பியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். வயலினை வாசித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஒவ்வொரு கச்சேரியிலும் புதிதாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

திடீரென்று ஒருநாள் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் வயசாகி விட்டது என்று அவளுக்கு உறைத்தது.

''கமலா நீ கல்யாணம் பண்ணிக்கணும்'' என்றாள் அம்மா.

''ஏன்? எனக்கு எதுக்கு இப்பக் கல்யாணம்?''

''அசடாட்டம் பேசாதே. ஒருநாள் இல்லாட்டா ஒருநாள் எல்லோரும் கல்யாணம் பண்ணிக்கணும்''.

''என் வாசிப்பு என்னத்துக்காகறது?''

''உன் சங்கீதம் ஒண்ணும் ஆயிடாது. ஒழிஞ்ச நேரத்துல சாதகம் பண்ணலாம்.''

''ஆனால் கச்சேரி... அடுத்த வருஷம் நேஷனல் ப்ரோகிராமில் வாசிக்க சான்ஸ் இருக்குன்னு பேச்சு அடிபடறது.''

அப்பாவுக்கு அவளுடன் வாதாடப் பொறுமையில்லை. கல்யாணமான பெண் பாடகர்களின் பெயர்களை அடுக்கினார்.

''இன்னும் கொஞ்சம் நாள் போகட்டுமே...''

''உளறாதே. ஏற்கெனவே இருபத்தினாலு வயசாச்சு. உனக்கு ஏன் கல்யாணம் ஆகலேன்னு எல்லோரும் பேசிண்டிருக்கா. உங்கப்பாவுக்கு வியாபாரத்துல ஏராளமா நஷ்டம். கல்யாணத்துக்கு அதிகம் செய்ய முடியாது. சீக்கிரமா எந்த வரன் அமையறதோ, முடிச்சுடணும்''. பால்காரன் வாசலில் சைக்கிள் மணியை அடித்தான். அம்மா போய்விட்டாள்.

மாடிக்கு ஓடிப் போய்க் கட்டிலில் விழுந்தாள் கமலா. இந்த அம்மாவுக்குத் திடீரென்று என்ன வந்தது? பரந்த மனத்தோடு கச்சேரிகளுக்கெல்லாம் கூட வந்தாள். வீட்டு வேலை செய்ய ஒருநாள் கூடக் கூப்பிட்டதில்லை. அவள் வாசிப்பைக் கேட்டுப் பூரித்துப் போவாள்..

யோசித்துப் பார்த்த கமலாவுக்கு அப்போது தான் உறைத்தது. சங்கீதம்தான் அவள் தொழில் என்ற ரீதியில் ஒருநாளும் அவள் பெற்றோர்கள் பேசியதில்லை. அதை ஒரு தற்காலிகமான பொழுதுபோக்காக, அவளுக்கும், தங்களுக்கும் புகழைத் தேடித் தரும் பொழுது போக்காகவே எண்ணினார்கள். வந்த பணம் அவள் கைச்செலவுக்காயிற்று.

பெண் வயலின் வித்வான்களுக்குக்கிராக்கி கிடையாது. அவர்களை வெளியூரிலிருந்து அழைத்து வருவதைச் சபாக்காரர்கள் கூடிய வரையில் தவிர்த்தார்கள். பெற்றோர்கள் கூட வந்தால் தான் வெளியூர் போக முடியும்.

திடீரென்று கமலாவுக்குத் தன் சங்கீத வித்வத்தின் பேரில் எரிச்சலாய் வந்தது. அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுத்த விஷயம் இப்படிப் பிரச்சினையாகிப் போய் விட்டதே. இனி எதிர்காலத்தில் அவள் அதிகபட்சம் எதிர்பார்க்கக் கூடியது ஒன்று தான் — சங்கீதப் பிரியனான கணவன் அமைய வேண்டும் என்பதுதான்.

அது நடக்காத காரியம் என்று கமலாவுக்குச் சீக்கிரமே தெரிந்து விட்டது. இருபத்தியாறு வயதானதும் தெரிந்தவர்கள் அவளுக்கு வரன் பார்த்துச் சொல்வதையே நிறுத்தி விட்டார்கள்.

அம்மா ஒருநாள் குண்டைத் தூக்கிப் போட்டாள். ''நல்ல சமாச்சாரம்டீ கமலா.. என் சிநேகிதியோட பையன் இருக்கான். சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட். அவனுக்கு உன்னைக் கேக்கறா. வரதட்சிணையே வேண்டாமாம்! கல்யாணத்தையும் சீக்கிரமே முடிச்சுடணும்ங்கறா...''

கமலா கோவிந்தனைப் பார்த்ததும் பிள்ளை வீட்டாரின் அவசரத்துக்குக் காரணத்தைப் புரிந்து கொண்டாள். குண்டாக, அம்மைத் தழும்புடன் இருந்தான் அவன். எதிர்த்துப் பார்த்தாள். அம்மா விடவில்லை. கல்யாணமாகாத பெண்ணை வீட்டில் வைத்துக்

கிருஷ்ணா நீ பேகனே பாரோ!

கல்கியில் மறைந்த நாட்டிய மேதை பாலசரஸ்வதியைப் பற்றிப் படித்த போது எனக்கு இந்த நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வந்தது.


நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது பாலசரஸ்வதி என்ற பெயரில் எனக்கு ஒரு கணக்கு ஆசிரியை இருந்தார். ரொம்பக் கண்டிப்பானவர்.

என்னுடன் படித்த கிருஷ்ணன் என்னும் மாணவன் ஒருநாள் ஜியாமெட்ரி பாக்ஸ் கொண்டு வராததால் நுனி மூக்கு சிவந்த அவர், அவனை 'வெளியே போ' என்று சொல்லி, 'அந்தப் பெட்டி இல்லாமல் வராதே' என்றார்.

'நான் திடீரென்று பெட்டிக்கு எங்கே போவேன்' என்று அவன் சொன்னதற்கு, ''you beg, buy or borrow'' என்று ஆங்கிலத்தில் வெடித்தார்.

குறும்புக்கார கிருஷ்ணன் இரண்டு அடி முன் வந்து மெல்லிய குரலில், ''கிருஷ்ணா, நீ beg, buy or borrow'' என்று நீட்டி முழக்கிப் பாடி அபிநயம் பிடித்து வகுப்பைச் சிரிப்பிலாழ்த்திய காட்சி இன்னும் பசுமையாக இருக்கிறது.

—ஜம்புநாத்.



கொண்டிருப்பது அவமானமாய் இருந்தது அவளுக்கு — அவம்பாத தட்டை வைத்திருப்பது போல!

கல்யாணமானதும் வரதட்சிணை வாங்காத காரணமும் கமலாவுக்குத் தெரிந்துவிட்டது. சிவப்பு விளக்குப் பகுதிகளில் கோவிந்தனின் பெயர் பிரசித்தம்! ஒரு நாளும் அவன் நள்ளிரவுக்கு முன்னால் வீடு திரும்பியதில்லை.

சீக்கிரமே வீடு சூனியமாயிற்று. குடும்பம் மட்டும் பெருகிற்று. பழைய சாதத்தைப் பங்கிடு செய்யவும் கிழிசலைத் தைக்கவும் கமலாவுக்குப் பொழுது சரியாய் இருந்தது. நாலு குழந்தைகளுக்கும் சோறு போட்டுச் சமாளிக்க வீட்டிலிருந்தே வயலின் கிளாஸ் நடத்தலாமா என்று யோசித்தாள். அந்தத் தெருவில் இருப்பவர்களோ வயலின் வாங்கக் கூட வசதியற்றவர்கள்.

ஷெல்பிலிருந்த வயலினை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா. இத்தனை வருஷமாக அது அலமாரியின் மேல் தட்டிலேயே கிடந்தது. யாரும் அதைப் பார்க்கவில்லை. கேட்கவுமில்லை.

கதவை அவசரமாய்த் திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள் குழந்தைகள். ''அம்மா, அம்மா'' என்று அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''கையில என்னம்மா? அது ஒன்னுதா?''

''என்கிட்டத் தாயேன்.''

''ம்ஹூம், நான்தான் வச்சுப்பேன்.''

குட்டிக் கைகள் அவளிடமிருந்து வயலினைப் பிடுங்கின. ஒரு சின்னக் கால் வழுக்கிற்று.

அடுத்த விநாடி அந்த வ்யலின் தரையில் விழுந்து உடைந்தது. உடலிலிருந்து ஆத்மா வெளியேறுவது போல அதன் உள்ளேயிருந்து தூசி மெல்ல வழிந்தது.

கமலாவின் மூன்று பெண்களும் தரையில் உட்கார்ந்து கொண்டு அழ ஆரம்பித்தார்கள். சாயம் போன குட்டைப்பாவாடைகள் முழங்காலுக்கு மேல் ஏறிக் கிடந்தன.

மூத்தவன் — பிள்ளை. கதவுக்கருகில் நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் சலனமில்லை.

''உன் வயலினை உடைச்சுட்டாளா அம்மா?... ரொம்ப நாளைக்கு முன்னால நீ வாசிப்பியே?''

தங்கைகளைப் பார்த்து ஒரு முறைமுறைத்தான். ''அம்மாவுக்கு ரொம்பப் பிடிச்சது அதுதான். தெரியுமா?'' என்றான்.

அழுகை அதிகரித்தது.

கமலா உடைந்த துண்டங்களைப்பெருக்கி எடுத்தாள். காலி அட்டைப் பெட்டி ஒன்றில் அவற்றை வைத்துக் குப்பைத் தொட்டியினுள் போட்டாள்.

அழுதுகொண்டிருந்த குழந்தைகளைக்கட்டி அணைத்துக் கொண்டாள். ''போனால்போகட்டும். அது என்ன ஒரு பழைய வயலின் தானே'' என்றாள் சமாதானமாக.

ஆங்கில மூலத்திலிருந்து தமிழாக்கம்:

சித்ரா ரவி



ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

21

காசியிடம் வில்வத்தின் நிலையை விளக்கினார் டாக்டர்.

''யாரோ பின் மண்டையிலே அடிச்சிருக்காங்க! அடி பலம்தான். இன்னும் கொஞ்சம் வலுவா விழுந்திருந்தா மண்டை ஓடு சில்லு சில்லா நொறுங்கிட்டிருக்கும். இப்போ கூட ஒண்ணும் உறுதி சொல்ல முடியாது... நேத்து ராத்திரி வரைக்கும் சுயநினைவே இல்லே.... இன்னிக்கு விடியக் காத்தாலே ஒரு நிமிஷம் சுயநினைவு வந்துது... மறுபடியும் போயிட்டுது...

''சார் அப்ப அபாயம் இல்லேன்றீங்களா?''

''இத பாருப்பா... இது போலீஸ் கேஸ்.. மர்டர் பண்ண முயற்சி நடந்திருக்கு... இதைப் பத்தி நான் விரிவாச் சொல்லக் கூடாது... ஏதோ நீ இவ்வளவு பதர்றேன்னு சொன்னேன்...''

டாக்டர் வேகமாக அவனைத் தாண்டிப் போனார்.

அதற்குமேல் அவரிடம் செய்தி பெயராது என்று தெளிவாகி விட்டது.

''காலையில் போலீஸ் காவலுடன் இருந்த அந்த ஸ்பெஷல் வார்டிலிருந்து ஒரு நர்ஸ் மூக்குக் கண்ணாடியும், சிடுசிடுத்த முகமுமாக வெளிவந்தாள்.

அதே நர்ஸ் ட்யூட்டி முடிந்து ஆஸ்பத்திரி கேட்டைத் தாண்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

காலையிலிருந்து எத்தனை பேரை விசாரித்தாயிற்று? எவ்வளவு பதறியாயிற்று? எங்குமே ஒரு நல்ல வார்த்தை வரவில்லை.

இருடன்: பணத்தை மரியாதையாகத் தா.

காஷியர்: துப்பாக்கியைக் காட்டினால் பணம் தர சட்டத்தில் இடம் இல்லே. டோக்கனைக் காட்டு, பணம் தர்றேன்.

—லலிதா செல்லப்பா.



ஒருவேளை இவளுக்குத் தெரிந்திருக்குமோ!

காசி வெளியே போன நர்ஸுக்குப் பின்னால் வேகமாக ஓடினான்.

''வணக்கம்மா'' என்று கையெடுத்துக் கும்பிட்டிட்டான்.

அவள் கட்டு விரலால் நெற்றிப்பொட்டுக்குக் கண்ணாடியைத் தள்ளிக்கொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''என்ன வேணும்?''

அவளுக்குக் காசியைப் பார்த்ததும் கொஞ்சம் பிரியமாக இருக்கத் தோன்றிற்று. சுரம் வந்தது. அந்தப் பிரியம் ஏற்பட வைத்ததற்காகத் தெய்வத்தை வணங்கிக் கொண்டான்.

''அந்த ஒலக்கைல அடிபட்ட கேஸு பொழைச்சுக்குமா ஸிஸ்டர்?''

அவள் அவன் தோளையும் கைகளையும் உற்றுப் பார்த்துவிட்டுக் கண்ணை நிமிர்த்தினாள்.

''அது போலீஸ் கேஸு... நான் ஒண்ணும் சொல்லக் கூடாது.''

''ஸிஸ்டர்... ஒலக்கைல அடிச்சபொண்ணு என் தங்கச்சி... அவன் செத்துட்டா அவளுக்குத் தண்டனை அதிகமாயிடும்... அவ எனக்கு ஒரே தங்கச்சி... அப்பா அம்மா இல்லே.''

நர்ஸுக்கு அவன் கன்னம் நடுங்குவது மனசில் தைத்தது.

''சாரி... ஒண்ணும் உறுதியாச் சொல்ல முடியாது. சிரூமூளைல அடி விழுந்திருக்கு.. எந்த நிமிஷத்திலேயும் செத்துடலாம்.... ஒன் தங்கச்சிக்கு அதிர்ஷ்டம் இருந்தாப் பொழைச்சாலும் பொழைக்கலாம். பொதுவா இந்த மாதிரி கேஸுங்க தேர்றதில்லே... ஆயிரத்திலே ஒண்ணு தேறினா அது கடவுள் கிருபை.''

அவன் மீண்டும் அவளுக்குக் கையெடுத்து ஒரு கும்பிடு போட்டான். அவள் அவனைப் பரிவோடு பார்த்துவிட்டு அகன்றாள்.

'அம்மா நீ ஏன் என்னை மேம்பாலத்திலே விசியெறிஞ்சே? என்னிக்காவது ஒரு நாளு என் பிள்ளை என்னவாச்சுன்னு நீ தேடி வருவே தேடி வருவேன்னு ரயில் ரயிலாப் பார்த்தேனே... பாத்துப் பாத்து அது ஒரு பழக்கமாகவே ஆயிடுச்சே. நீ ஏன் என்னை விசியெறிஞ்சே! இப்பிடி ஒரு கேசவனைத்தா வளர்க்கட்டும்னு?' அவன் சைக்கிளில் ஏறி சப் – ஜெயிலுக்குப் போனான். சிமெண்ட்க் கும் அலுவலகத்தைச் சுற்றிக் கொண்டு மிதிக்கும்போது காசியின் மனம் மீண்டும் மேம்பாலத்துக்குப் போயிற்று.

'எதுக்கு என்னைப் பெத்தே? வயித்திலேயே கரைச்சுட ஒனக்கு வகை தெரியாமப்போய்டுச்சா... எத்தினி பேருக்கு நான் கடம்பட்

ஒட்டேன்... இதோ எனக்காக ஒருத்தனை ஒலக்கைல அடிச்சுக் கொலைகாரியாயிட்டாளே ஒருத்தி... என்னை எடுத்து வளர்த்ததுக்கு கேசவ நைனா ரயில் விபத்துலே பூட்டாரே... தாய்க்குத் தாயா இருந்தவ தாலியறுத்த வேதனையில் குடல்புண் வந்து செத்தா... இதோ எம்மேல உள்ளுக்குள்ளே புத்து வச்ச மாதிரி ஆசை வச்சிகினு இருந்த பொண்ணு, அது நடக்காதுன்னுத் தெரிஞ்சதும் கொலைகாரியாயிட்டா...... அம்மா... நீ ஏன் என்னைப் பெத்தே?'

சப்-ஜெயிலின் முற்றத்தில் கையில் டிபன் கேரியரோடு ஹரி நின்றிருந்தான்.

''இன்னா ஹரி?''

''ஜெயாவுக்குச் சாப்பாடு குடுக்க வந்தேன். என்ன சொல்றாரு டாக்டரு?''

காசி பெருமூச்செறிந்தான்.

''என்ன அண்ணாத்தே?''

''உறுதி சொல்ல முடியாது.''

ஹரி அவன் தலைக்குப் பின்னால் கனன்று காய்ந்த மத்தியான வெய்யிலின் வெக்கையெல்லாம் தணிந்து குளிர்ந்த நீலத்தில் சில நம்பிக்கைகள் சிரிப்பது போன்ற நட்சத்திரங்களைப் பார்த்தான்.

''ஜெயாவை பெயில்லே எடுக்கறதுக்காகக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எஞ்சினியர் பீட்டரும் எஸ்தரும் வந்து ஜட்ஜைப்பார்த்துட்டுப் போனாங்க.''

''இன்னா சொன்னாராம்.''

''நாளைக்கிக் காத்தாலே தான் அவரு விடறேன்னு சொல்லியிருக்காரு.''



''எஸ்தர் வந்து ஜெயாவைப் பார்த்துட்டுப் போச்சா?''

''ஆமா அண்ணாத்தை... வில்வம் நெஜம்மாவே அதைப் பொண்ணு கேக்கத்தான் வந்தான்னு கேட்டதிலேருந்து ஜெயா பேசவே மாட்டேண்ணுட்டதாம். என்னமோ மேலுக்கு சிரிக்கற மாதிரி சிரிச்சதாம். மொகம் தொங்கிப் போயிருக்காம்.''

காசி மீண்டும் மேம்பாலத்தை நினைத்தான்.

'என்னைக் கீழே விட்டுட்டு நீ நடந்து போனதிலேருந்து எத்தினி லட்சம் பேர் நடந்து போனாங்க... அந்த மேம்பாலத்திலே தெனம் ஆயிரம் காலுங்களாவது நடந்துருக்குமே... அம்மா நீ ஏன் வரல்லே.... நீ ஏன் வர்லே... நீ உசுரோட இருக்கியா.. இந்தக் கொடுமையைப் பாத்தியா.... பொண்ணுக் கேக்க வந்தவனே ஒலக்கைத் தடியினாலே போட்டுட்டு எனக்காக ஒருத்தி ஜெயில்லே இருக்காளே!'

''அண்ணாத்தே!''

''ம்ம்ம்.''

''நீ சாப்டியா?''

காசிக்கு அப்போது தான் அன்று காலையில் டிபன் சாப்பிட்டதற்கப்புறம் தான் சாப்பிடவேயில்லை என்ற ஞாபகம் வந்தது. பதினொரு மணிக்கு அவன் ஒரு டீ குடித்தது. சாப்பிடத் தோன்றவில்லை. அதற்கு நேரமில்லை. ஞாபகமே கூட வரவில்லை.

''கொஞ்சம் இரு... இந்த டிபன் கேரியரைக் குடுத்துட்டு வந்துடறேன்'' என்று நகரப் போனான் ஹரி.

''ஜெயா கேட்டாக்கா வில்வம் காத்தாலே கண்ணைத் தொறந்து பார்த்தான்னு சொல்லு.''

ஹரி தலையாட்டிவிட்டு உள்ளேபோனான்.

சப்ஜெயில் வாசலில் காவலுக்கு நின்ற கான்ஸ்டபிள் வெண்கல வட்டத்தில் மரச் சுத்தியலால் கணீர், கணீரென்று கேட்கும்படியாக விட்டு விட்டு மணியடிக்கத் தொடங்கினார். மணி எட்டு.

'எந்த தைரியத்தில் அந்த வில்வம் அவளைப் பெண் கேட்க வந்தான்? எதற்கு? அவன் பட்டப் பகலில் மேம்பாலத்தில் நாலு பேர் எதிரில் சவால் விட்டானே அதைக் கேட்டு அவனுக்கு ஏதாவது சபதம் வந்திருக்குமா? இவன் வந்து பெண் கேட்டால் நான் கொடுத்து விடுவேன் என்று எதிர்பார்த்தானா... இல்லை போலீஸ் கேஸ் கடுமையாகட்டும் என்று அவனுடைய ஆட்கள் திட்டமிட்டுப் போய் சொல்லு இருந்தார்களா...'

காசிக்கு நம்ப முடியவில்லை. ஆனால் வெளியே காரில் அன்றைக்கு வில்வத்தை மட்டும் தனியே அனுப்பிவிட்டுக் காத்திருந்தவர்கள் ஒரு நிச்சயதார்த்தம் செய்வதற்கான ஏற்பாட்டோடு வந்திருந்ததாகத்தான் பேசிக் கொண்டார்கள்.

வில்வம் எதற்கு ஜெயாவை மணக்க விரும்பினான்?

அவள் அழகைப் பார்த்து மயங்கினானா?

எதற்கும் அஞ்சாமல் நேருக்கு நேர் நின்று எடுத்தெறிந்தது போல் பேசினாளே, அந்தத் துணிச்சல் அவனைத் தகர்த்து விட்டதா?

எது... எது...? அவளைப் பெண் கேட்கு மளவுக்குத் தூண்டிவிட்டது எது?

(தொடரும்)



அருள்வாக்கு

ரூபாய் என்று ஏற்பட்ட நாளாகச் சொந்தத்துக்கு ஜாஸ்தி சேர்த்து மூட்டை கட்டி வைத்துக்கொள்வது, தன்னுடைய துராசைகளுக்கே கன்னா, பின்னா என்று செலவழிப்பது இதெல்லாம் அதிகமாகி, தானதர்மங்கள் பண்ணுவதற்கும் அபரிக்ரஹ தர்மத்துக்கும் ஹானி உண்டாகி வந்திருக்கிறது. ரூபாய் என்று இல்லாத நாள் உண்டா என்று தோன்றலாம். அப்படி ஒருநாள் இருந்திருக்கிறது. ஆதியில் எல்லா இடத்திலும் Barter என்று ஒரு பொருளுக்குப் பதில் இன்னொரு பொருளை 'எக்ஸ்சேஞ்ச்' (பரிவர்த்தனை) பண்ணிக் கொள்வதுதான் இருந்தது. பிறகு கரென்ஸி என்பது தோன்றிற்று. எந்தப் பொருளானாலும் இதைக்கொண்டு மதிப்பை நிர்ணயம் பண்ணுவது ஸுலபமாயிருந்தது. கையடக்கமாக எடுத்துப்போகும்படியாகவும் வைத்துக் காக்கும்படியாகவும் இப்படி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். சில காரியங்களுக்கு மட்டுந்தான் நாணயமாற்றத்தில் கொடுக்கல் — வாங்கல் நடந்தது. நாணயத்துக்கு நிஜமாகவே அதன் மதிப்பு இருக்கும்படியாகத் தங்கம், வெள்ளி இவற்றிலேயே இருந்ததால் அதிகமாகக் கிடைக்காத இந்த லோஹங்களில் அளவாகவே நாணயம் போடுவார்கள். அப்புறந்தான் நாணயத்துக்கும் அதன் மதிப்புக்கும் சம்பந்தமேயில்லாமல் நிக்கல், செம்பு, வெறும் காகிதம் என்று ஏற்பட்டபின் இஷ்டத்துக்கு அச்சடித்து எல்லோருக்கும், எல்லாவற்றுக்கும் விநியோகிப்பதாக ஆகிவிட்டது!

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

தெரு விபத்துக்கள்

மீ.ப.சோமு



சில மாதங்களாகத் தெரு நாய்களின் அட்டகாசம் பல பேட்டைகளில் அதிகமாகிக் கொண்டு வருகிறது! அவற்றின் கோஷ்டிகான கருதியானது, இரண்டரைக் கட்டையிலிருந்து மூன்று கட்டை, நாலு, நாலரை என்று நாளுக்கு நாள் ஸ்தாயி ஏறிக் கொண்டே போகிறது!

குலைக்கிற நாய் கடிக்காது என்பார்கள். ஆனால் இந்த வசனம் அந்த நாய்களுக்குத் தெரிவதில்லை! அவை குரைத்தும் கடிக்கின்றன. குரைக்காமலும் கடிக்கின்றன!

மின்சாரக் கம்பங்கள் மட்டுமே நிற்கிற சில தெருக்களில், தைரியமாக நுழைந்து போக முடிகிறதில்லை! ஏனென்றால், இந்தத் தெரு நாய்கள் திருடர்களுக்கு மட்டுமே பயப்படுகின்றன! திருடக் கொடுக்கிற அப்பிராணிகளை இவை இனம் கண்டு சாடுகின்றன!

மனிதனும் ஒரு விலங்கு தான் என்று தருக்க நூல் சொல்கிறது. ஆனால் ஜீவ இம்சையைத் தடுப்பதற்கு என்றே ஏற்பட்டுள்ள காருண்ய சபைகள் தங்களுடைய விலங்குப் பட்டியலில் நாயைச் சேர்த்திருப்பது போல், மனித விலங்கையும் சேர்த்திருக்கிறார்களோ இல்லையோ தெரியாது! தவறாமல் நகராட்சிக்கு வரி கொடுத்து வருகிற வாயில்லாப் பிராணிகளுக்கு இம்சை ஏற்படாமல் தடுப்பதற்காக எந்தக் காருண்ய சபை எங்கே இருக்கிறதோ புலப்படவில்லை! இந்தக் குடிமகன் உண்மையில் நாய்க்கடிக்கு அதிகம் பயப்படுகிறானா அல்லது அதற்கான சிகிச்சைக்கு அதிகம் பயப்படுகிறானா என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை! ஊசியின் நற்பலனைப் பற்றி அவனிடம் எத்தனை விளக்கமாகச் சொன்ன போதிலும், வயிற்றைச் சுற்றிக் குத்துகிற அந்த ஊசியின் நீளத்தையும், ஊசிகளின் எண்ணிக்கையையும் எண்ணி எண்ணி, பாவம் குலைபதறுகிறான்! புதியதொரு சிகிச்சைமுறை வந்து கொண்டிருக்கிறது என்று அவனுக்கு ஆறுதல் சொல்வதோடு, நகராட்சிக்கு ஒரு வார்த்தை:



முன்பெல்லாம், அதாவது, முன்னொரு காலத்தில் நாய்வண்டி என்று ஒன்று தெருக்களிலே பவனிவருமே, வந்து தெரு நாய்களோடு சேர்த்து வீட்டில் நாய் வளர்ப்போரையுமே எச்சரிக்கை செய்யுமே, அது இப்போது என்ன ஆயிற்று? நாய்களின் வாயைக் கட்டுவதற்கு என்று மந்திரம் சொல்வார்களே, அப்படி ஒரு மந்திரம் செய்து இந்த வண்டிகளின் வாயையும் கட்டி விட்டார்களோ?

• • •


வீடுகளுக்கும், சாலைகளுக்கும் நகராட்சியினர் எண்கள் கொடுத்து வருகிறார்கள். வரவேற்க வேண்டிய ஏற்பாடு. ஆனால் எண்களின் வரிசை முறை ஒரே ''கந்தர கோள''மாகஇருக்கிறதே!

ஒரு நண்பரிடம் நம்முடைய வீட்டு எண்ணையும் சாலையின் எண்ணையும் தைரியமாகக் கொடுக்க முடிகிறதில்லை! அப்படியெல்லாம் இடத்தைக் கண்டு பிடித்து வந்து விட முடியுமா! நடக்கவே நடக்காது!

அஞ்சல் துறையினருக்கும் நகராட்சி மீது ஒரு பெரிய குறை! புதிதாகப் பணியிலே சேர்கிற ஒரு தபால்காரர் இடங்களைக் கண்டு பிடிப்பதற்குள்ளே மூச்சுத் திணறுகிறதாம்! எப்படித்தான் எண்களை வரிசைப்படுத்தி ஒரு 'க்விஸ்' நடத்துகிறார்களோ!

முதலாவது சாலை என்பது குடியிருப்பின் முகப்பிலே இருந்தால், இரண்டாவது சாலை முதுகந்தண்டிலே போய் நெளிகிறது! மூன்றாவது சாலை நெற்றியிலே முட்டுகிறது! நான்காவது சாலையோ முழங்காலைப் பிடிக்கிறது! ஊடே ஊடே அதே எண்களில் குறுக்குச் சாலைகள் பயங்காட்டுகின்றன!

இந்தக் குளறுபடி போதாதென்று, குடியிருப்புத் தொகுதிகளுக்கு ஆங்கில எழுத்துக்கள்! ''ஐ'' என்பது ''1'' ஒன்று எண்ணோடு குழம்புகிறது! ''ஒ'' என்பது ''0'' வட்டத்தோடு, சைபரோடு, மோதுகிறது! அது ஐ 223 தானா, அல்லது 1223 என்னும் எண்ணா என்று கண்டுபிடித்தாக



வேண்டும். ஐஓ 345 என்று இருந்துவிட்டாலோ மேலும் மேலும் பெரிய சோதனை! அது 10345 போலக் கண் சிமிட்டுகிறது! ஐயோடு ஜே வேறு போட்டி போடுகிறது! கடிதங்களை வழங்கும் போது அஞ்சலார் அஞ்சுகிற அஞ்ச லானது, பெயர் அஞ்சல் பேரஞ்சலாக இருக்கிறது!

'எண்ணிச் செய்வது' என்பார்கள். அது என் களைப் பொறுத்த வரையில் எண் மடங்கு, எண்ணெண் மடங்கு பொருந்தும்!

• • •

இரவு நேரங்களில் சாலை விபத்துக்கள் பயங்கரமாக நடப்பதை அடிக்கடி நாம் செய்தித் தாள்களிலே பார்க்கிறோம்!

இந்த விபத்துக்கள் பலவற் றில் லாரிகள் சம்பந்தப்பட் டுள்ளதையும் காணுகிறோம். இதன் தொடர்பாக மதுராந் தகம் நண்பர் ஒருவர் ஒரு செய்தி சொன்னார். இரவு நேரங்களில் லாரி ஓட்டு நர்கள் சிலர் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக, அவர்க ளுடைய துப்புரவு ஊழி யரைச் சாரத்தியம் செய் யும்படி ஒரு 'சான்ஸ்' கொடுக்கிறார்களாம்! இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரி யாது! போக்குவரத்துக் கண்காணிப்பு அதிகாரிகள் அவ்வப்போது இரவு நேரங் களில் லாரிகளை நிறுத்தி, உரிமச் சோதனைகள் நடத்தி னால் விபத்துக்கள் குறைவ தற்கு இடமுண்டு.

• • •

"பால் பையிலுள்ள ஓட்டை பற்றி எழுதியிருந் தீர்கள். பல இடங்களில் இன்னும் அது தொடர் கிறது!" என்று சில நேயர்கள் தெரிவித்திருக் கிறார்கள். நிருவாகத்தி லுள்ள. ஓட்டைகளை அடைக்கக் கொஞ்சம் அவ காசம் கொடுக்க வேண்டும் அல்லவா? பொறுத்திருப் போம்.

இதுபோலவே பாட நூலுக்கு விஷய "தானம்" செய்துள்ள ஓர் எழுத்தாள நண்பர், "தமிழ்ப் பாட நூல் நிறுவனம் அசைந்து கொடுக்க மாட்டேன் என் கிறதே" என்று வருந்து கிறார்!

பாடம் கற்றுக்கொள்ள நாள் பிடிக்கும் அல்லவா? படித்துக் கொண்டு வரு கிறார்கள்! பார்ப்போம்!



வாலி (வெர்ஸஸ்) கல்கி

வாலி ஒரு சிறுகதை எழுதி அதைக் கல்கி இதழுக்கு அனுப்பி வைத்தார் ஒரு வாரத்திற்குள் அந்தச் சிறுகதை அவருக்கே திரும்பி வந்து விட்டது உடனே கல்கி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்: "நேதாஜி கையெ ழுத்துப் பத்திரிகையை வெளியிட. நீங்கள் இங்கு வந்திருந்த போது என் கதையைப் பாராட்டிப் பேசி னீர்கள் ஆனால் புதிதாக எழுதி, கல்கி இதழுக்கு அனுப்பிய கதையை உடனடியாகத் திருப்பி அனுப்பிவிட் டீர்களே! நியாயமா?"

அந்தக் கடிதத்திற்கு கல்கி அவர் களிடமிருந்து உடனடியாக மறுமொழி வந்தது:

'மூன்று மாதம் கழித்து அதே கதையை மறுபடியும் அனுப்பி வையுங்கள். நான் வெளியிடுகிறேன்!"

மூன்று மாதம் கழித்து அந்தக் கதையை 'கல்கி' இதழுக்கு அனுப்புவ தற்கு முனைந்த வாலி, அதை மறு முறை படித்துப் பார்த்தார். கதை அவருக்கே பிடித்தமாக இல்லை.

"கல்கி அவர்கள் இந்தக் கதையை வெளியிடாதது நியாயம்தான்" என்று வாலிக்குத் தோன்றியது மூன்றுமாத மனவளர்ச்சியின் காரணமாக அதை அனுப்பாமல் நிறுத்திக் கொண்டார்

(அனுராதா ரமணன் நூல்கள் வெளியீட்டு விழாவில் கவிஞர் வாலி ஆற்றிய உரை)

—தகவல்: பத்மா மணாளன்



தினமலர்

தேசிய தமிழ் தினசரியின்

5 வது பதிப்பு

ஈரோடு

நகரில்

மார்ச் 16, 1984ல் ஆரம்பம்!

மாண்புமிகு தமிழகமுதல்வர்

டாக்டர் **எம்.ஜி.ஆர்.**

முதல் பிரதியை வெளியிடுகிறார்!



○ "கருச்சிதைவு வேண்டாம்; உங்களுக்கு குழந்தைவேண்டாமெனில் என்னிடம் அனுப்புங்கள்."

அன்னை வந்தார் அன்பைப் பொழிந்தார்

ப்ரியவன்; சந்திரமௌலி

சென்றோம்;

மார்ச் முதல் தேதி மாலை 3.35. சென்னை மந்தைவெளியில் உள்ள கரைக்குட்டை குடிசைப் பகுதியில் குழந்தைகள் பெண்கள் ஆண்கள், வயதானவர்கள், என்று பலதரப்பட்ட கூட்டம் சாலையில் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தது. அன்னை தெரசா தமிழக அரசின் சுற்றுலாத் துறையின் 'டட்ஸன்' காரில் ஏர்போர்ட்டிலிருந்து நேராக அந்தக் குடிசைப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். அன்னையின் கண்கள் குழந்தைகளின் மேல் பாய்ந்தன. போலீஸ் தடுத்ததையும் மீறி, கூட்டத்தினரிடையே சென்று குழந்தைகளை அள்ளியெடுத்து முத்தமழை பொழிந்தார். பார்ப்பவரின் கண்கள் பனிக்கின்றன. மனித உருவில் ஓர் அன்புத் தெய்வம். அன்னையைப் படமெடுக்க எக்கச்சக்கமான புகைப்படக்காரர்களின் கூட்டம். ஒருவர் கூட்டத்தில் தடுமாறி விழ அன்னையின் அன்புக்கை அங்கு சென்று புகைப்படக்காரரை ஆதரவுடன் தூக்கி விட்டது.

அடுத்த விசிட் அசோக் நகர் • குடிசைப் பகுதி. அங்கேயும் அன்னையின் அன்பு வாழ்த்துக்கள். திடீரென்று அன்னைக்கு அருகிலிருக்கும் சர்ச்சுக்குச் சென்று வரலாம் என்ற எண்ணம் ஏற்பட, சர்ச்சுக்குச் சென்று மண்டியிட்டு அனைவருக்காகவும் தொழுதார். ஷெனாய் நகரில் உள்ள குடிசைப்பகுதிக்குச் சென்றார். தமது அன்பு விதைகளைத் தூவி விட்டு ராயபுரத்திலுள்ள தமது ஜாகை நோக்கிச் சென்றார். அங்கே எக்கச்சக்கமான விசிட்டர்கள். எந்தவித களைப்பையும் காட்டாமல் அனைவரிடமும் பேசி, சில ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டுவிட்டுக் கண்ணயர்ந்தார்.


மறுநாள் காலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்து ஒரு மணி நேரம் பிரார்த்தனை. 5.40-க்கு விமானத்தில் மதுரைக்குப் பயணம். விமானத்தில் யாருடனும் பேசவில்லை. பிரார்த்தனை தான். மதுரை பாண்டியன் ஹோட்டலில் காலை சிற்றுண்டியை முடித்துவிட்டுக்

பார்த்தோம்;

கொடைக்கானலை நோக்கிப் பயணம். சின்னஞ்சிறு கிராமங்களிலும் 'அன்னை போகிறாரே பார்க்கவேண்டுமே' என்ற ஆர்வக்கண்களுடன் மக்கள். கொடைக்கானல் பயணத்தின் போது ரோமிலிருந்து வந்திருந்த இரண்டு பிஷப்கள் அன்னையுடன் சேர்ந்து கொண்டனர். ஒருவர் அன்னை பிறருடன் உரையாடியதையெல்லாம் டேப் பண்ணிக் கொண்டிருந்தார். இன்னொருவர் நிகழ்ச்சிகளை வீடியோ எடுத்துக் கொண்டிருந்தார். காதில் விழுந்த ஒரு செய்தி: போப் அவர்களிடம் இருந்து விசேஷ அழைப்பு அன்னைக்கு வந்திருக்கிறதாம். ஏப்ரல் மாதம் வாடிகன் செல்வாராம்.

பத்தரை மணிக்குக் கொடைக்கானல் விழா ஆரம்பமாயிற்று. பெண்கள் பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டிவிட்டுப் பத்து நிமிஷமே பேசினார் அன்னை. 'பசித்து வந்த ஒரு சிறுவனுக்கு ரொட்டித் துண்டு கொடுத்தவுடன் அந்தச் சிறுவன் கொஞ்சம் தின்று விட்டு

○ கொடைக்கானலில் கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை பெயர் சூட்டு விழா.







சொல்கிறோம்



○ வள்ளுவர் கோட்டத்தில் அன்னை தெரசா திரு. ஜகத்ரட்சகன் எழுதிய ''டாக்டர் எம். ஜி. ஆர். ஓர் ஒப்பிலாத தலைவர்'' என்ற நூலினை வெளியிட்டார். மத்திய அமைச்சர் திரு. விஜயபாஸ்கர ரெட்டி முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

மீதியை அடுத்த வேளைக்காக மடித்து வைத்துக் கொண்ட நிகழ்ச்சியை அன்னை நெகிழ்வாகச் சொன்னது கூட்டத்தை உலுக்கி விட்டது. திடீரென்று விழாவில் முதல்வர் அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு அன்னையார் பெயரை வைத்திருப்பதாக அறிவித்ததும் அன்னையார் முகத்தைப் பார்த்தால் ஒரு புன்சிரிப்பு மட்டுமே! பிறகு நடந்த கோகினூர் மாளிகை திறப்பு விழாவில் அன்னை பங்கு கொள்ளாமல் அருகிலிருந்த சத்துணவுக் கூடத்துக்குச் சென்றார்.

கோகினூர் மாளிகையை 35 எம்.எம் காமிராவில் பலவித கோணங்களில் படமெடுத்துக் கொண்டார் காஷ்மீர் முதல்வர்.



○ ''ஆமா... இரண்டு மாசமா இப்படித்தான் இருமிக்கிட்டு இருக்கு....''

வள்ளுவர் கோட்டம் விழாக் கோலம் பூண்டிருந்தது. 30 பள்ளிகளைச் சேர்ந்த 600 சிறுவர், சிறுமிகளை வைத்துக் கொண்டு ஐந்து அருமையான பாட்டுக்களைப் பாடி முடித்தார் எம். பி. சீனிவாசன். 600 சிறுவர் சிறுமிகளும், உணர்ச்சிகளை முகத்தில் காட்டி ஒரேசீராகப் பாடியது அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. அழைப்பிதழில் கண்டபடி 4.45–க்கு வந்தவர்கள் 6.45 வரை சரியான மின்விசிறி வசதி இல்லாததால், வியர்த்துப் போய் உட்கார்ந்திருந்தனர். முதல்வருடன் உள்ளே நுழைந்தார் அன்னை. புழுக்கம் விலகி மனம் விசாலமாயிற்று. மேடைக்குப் போய் அமர்ந்ததும் ஸ்வெட்டரின்பையிலிருந்து ஜபமாலையைக்கையிலெடுத்து வைத்துக் கொண்டு. ஜெபித்துக் கொண்டே அடிக்கடி மத்திய அமைச்சர் விஜய பாஸ்கர ரெட்டியிடம் பேசிக்கொண்டிருந்தார். ஒன்றிரண்டு சமயம் முதல்வரிடமும் பேச, எக்கச்சக்கமான காமிராக்கள் அவர்களை ஒளிவெள்ளத்தில் ஆழ்த்தின. வள்ளுவர் கோட்ட விழாவில் சில குறிப்பிடக் கூடிய நிகழ்ச்சிகள்:

- பத்தாயிரம் ரூபாய் அன்னையிடம் நன்கொடையாகக் கொடுத்த நடிகர் பாக்கியராஜுக்கு மேடையில் முதல் வரிசையில் இடம் கொடுத்திருந்தார்கள். ஒன்றரைலட்சம் மதிப்புள்ள பங்களா வழங்கியவருக்குக் கூட இந்த மரியாதை இல்லை.
- ஒவ்வொரு பேச்சாளரும் பேசி முடித்த பின் அவர்கள் கவனித்தார்களோ இல்லையோ, அன்னை அவர்களைநோக்கி கைகூப்பினார்.
- அன்னை அவர்களையும் முதல்வர் அவர்களையும் ஒப்பிட்டு ம. பொ. சி. பேசியது நிறையபேருக்கு வெறுப்பைத் தோற்றுவித்தது. ''இந்த மனிதர் விடமாட்டார்...'' என்று பத்திரிகையாளர்பகுதியிலிருந்து குரல்கள் வந்தன.
- சபாநாயகர் ராஜாராம் அன்னை அவர்களை வரவேற்றுப் பேசும்போது, இதுவரை அவர் பெற்றுள்ள 46 விருதுகளைப் பற்றிச் சொன்னார். உலகத்திலுள்ள முக்கிய விமான கம்பெனிகளும், இந்திய ரயில்வேயும், அன்னை அவர்களுக்கு இலவசமாகவே சேவை செய்ய முன் வந்திருப்பதையும் சொன்னார்

○ ''அன்பே கடவுள்...''



விழா முடிந்து வெளியே வரும்போது, இந்த விழாவுக்கென்றே மாயவரத்திலிருந்து வந்திருந்த 50 வயதான வெங்கடநாயகியென்ற பெண்மணியிடம் அன்னையைப் பற்றிக் கேட்ட போது அவர் சொன்னது: ''எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று பாராமல் இந்த வயதிலும் சுயநலமில்லாமல் ஏழைகளுக்கு உழைக்கிறாரே, இவர் நடமாடும் தெய்வம்''.

வெளியே சுவர்களில் 'மதம் மாற்றும் தெரசாவுக்கு டாக்டர் பட்டமா?' என்று ஹிந்து முன்னணி ஒட்டியிருந்த போஸ்டர்,

அருவருப்பை அளித்தது. என்ன அசட்டுத்தனமான போஸ்டர்?

மறுநாள் மூன்றும் தேதி. வி. ஜி. பி. கோல்டன் பீச்.

உலக அமைதிக்காக ஒரு டஜன் வெண் புறுக்களை அன்னை தெரசா பறக்கவிட்டார். சுதந்திரமாய்ப் பறந்த புறுக்களைப் பார்த்துக் குழந்தை போல் குதூகலித்தார். கோல்டன் பீச்சில் உள்ள அரச மரம் —பனை மரம் இணைந்த ஒரு மரத்துக்கு 'அன்னை தெரஸா அதிசய மரம்' என்று பெயர் வைக்கப்பட்டது.

அன்று மாலை ஸ்டெல்லா மேரி கல்லூரியில் சென்னையில் வாழும் கிறிஸ்துவர்களின் வரவேற்பு.

பெண்கள் மிகுதியாக இருந்தஅக் கூட்டத்தில் கருச்சிதைவெனும் கொடுமை பற்றிப் பேசினார். அவரது உருக்கமான வேண்டுகோள்: ''உங்களுக்குக் குழந்தைகளை பிடிக்கவில்லையா? வேண்டாமா? கருவை அழிக்காதீர்கள்! அனாதையாக்காதீர்கள்! என்னிடம் கொடுத்து விடுங்கள்!''

விமான நிலைய வி. ஐ. பி. அறையில் இந்தியன் ஏர்லைன்ஸ் ஊழியர்கள் ஒரு நீண்ட வாழ்த்தோலையை வாசித்து அளித்தனர். காவல்துறை அதிகாரிகள், அன்னையின் இல்லத்தைச் சேர்ந்த ஸிஸ்டர்கள் என்று பலர் வந்து வணங்கி ஆசிபெற்றனர். அடிக்கடி இருமிக்கொண்டிருந்த அன்னையைப் பார்த்துக் கேட்டோம்: ''நாங்கள் மூன்று நாட்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அடிக்கடி இருமுகிறீர்களே!''

''ஆமாம். கடந்த இரண்டு மாதங்களாக இப்படி இருக்கிறது.''

''ஏதாவது மருந்து சாப்பிடக் கூடாது?'' இதற்கு ஒரு புன்சிரிப்புதான் பதில்.

ஆயிரக்கணக்கான அனாதைகளுக்கு நல்வாழ்வு அளிக்கும் அன்னைக்கு, தம் உடம்பைக் கவனித்துக் கொள்ள நேரமில்லை!

மூன்று நாட்களாக அன்னைக்குப் பாதுகாவலராக இருந்த இன்ஸ்பெக்டர் 'நான் மிகவும் பாக்கியம் செய்தவன், மதர்! உங்களுக்கு மூன்று நாட்கள் சேவை செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்ததே!' என்றார். அந்தப்பாதுகாவலர் அன்னையைப் பார்க்க வருபவர்களை, ஒரு நிமிஷத்துக்கு மேல் அருகே இருக்க விடாமல் துரத்திக்கொண்டிருந்தவர். அன்னை சிரித்தபடி சொன்னார்:

''நீங்கள் என் காரணமாகப் பல பேர்களின் வெறுப்பையும் சம்பாதித்து இருப்பீர்களே: அதற்காக வருந்துகிறேன்!''

'கல்கி' வாசகர்களுக்கு உங்கள் வாழ்த்தைத் தெரிவியுங்கள் என்று நோட்டை நீட்டியதும், 'அன்பே கடவுள்...'' என்று ஆரம்பித்து எழுதியதை அப்படியே கீழே தருகிறோம்.

அன்னையைச் சுமந்து கொண்டு விமானம் பறந்து கண்ணுக்கு மறைந்ததும் விமான நிலையத்தை விட்டு வெளியே வரும் போது மனத்தை முள்ளாகக் குத்திய ஒரு விஷயம்: அன்னை சென்னைக்கு மூன்று நாட்களுக்கு முன் வந்தபோது விமான நிலையத்திற்கு வரவேற்க வந்திருந்த சபாநாயகர் ராஜாராமோ, அமைச்சர் அரங்கநாயகமோ, அல்லது கல்கத்தா சென்று அன்னையை அழைத்த சட்டமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகனோ, வழி அனுப்ப வராமல் இருந்தது தான். நமது அரசியல்வாதிகளின் பண்பாடு இவ்வளவுதானா?

படங்கள்: சுபா

Dear Readers
"Kalki"
God is love
and He loves you
Love one another
as God loves
each one of you
Remember works of
love are works of
Peace
God bless you
M Teresa mc
4/3/8



விதி

தெலுங்கில் (நியாயம் காவாலி) வந்து ஓஹோ என்று பெயர் வாங்கின படம்தானே, ஹிந்தியில் (முஜே இன்சாஃப் சாஹியே) வந்தபோது பார்த்து விட்டுத்தான் விமரிசனம் செய்தாயிற்றே என்று சற்று அசட்டையாகவே நாளைத் தள்ளிப் போட்டு விட்டோம்.

கதையில் முதுகெலும்பே கோர்ட் காட்சிகள் தான். எனவே, மாறுதலுக்கு இருக்கட்டுமே என்று ஒரு இளம் வக்கீலுடன் (சுப்பிரமணியன்) படம் பார்த்தோம்.

இடைவேளை உரையாடலில் இருந்து சில பகுதிகள்:

● காட்சி அமைப்புக்களிலும், வசனங்களிலும் கார்பன் காப்பி எடுக்கட்டும். பரவாயில்லை. ஒப்பனை கூடவா ஹிந்தியிலிருந்து அப்படியே? பூர்ணிமா ஜெயராமின் முகத்திற்குச் சற்றும் பொருந்தாத அந்த மூக்குக் கண்ணாடி என்ன சாதித்து விட்டது?

● டைப்ரைட்டிங் வகுப்புக்களில் மோகன் அடிக்கிற லூட்டிகள் அருவருப்பாய் இல்லே? சென்சாரில் 'கட்' செய்த ஜம்ப் வேறு! இன்னும் நாசூக்காய்க் காதல் பிறக்கக் கூடாதாவென்ன?

● பூர்ணம் விசுவநாதன் ஒரு இயல்பான தந்தையின் பதற்றத்தை அருமையாய்க் கொடுக்கிறார். அவர் பேசுகிற வசனங்களில் உயிரோட்டம் இருக்கிறது.

படம் முடிந்து வெளியே வந்த போது பேசியதில் கொஞ்சம்:

● நடிப்பைப் பொறுத்தவரை சுஜாதா, பூர்ணிமா எல்லோருமே நன்றாகப் பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும், சாட்சி கூண்டில் வந்து நின்றவுடன் மனோரமா கலக்குகிற கலக்கு இருக்கிறதே, பிரமாதம் சார்!

● கோர்ட் காட்சிகளில் சினிமாத்தனம் நிறைய. எந்தக் கோர்ட்டிலும் வெளியே கொடிபிடித்து, கூச்சல் போட்டு வாழ்க, ஒழிக சொல்வதை அனுமதிக்க மாட்டார்கள். வழக்குக்குச் சம்பந்தமில்லாத தன் சுயசரிதையை வக்கீல் சுஜாதா கோர்ட்டுக்கு முன் வெகு விஸ்தாரமாய் எடுத்துச் சொல்வதும் கண்ணீர் சிந்துவதும் கடைசியில் நீதி கேட்டு நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுவதும் நீதிபதியிடம் பச்சாதாபத்தை யாசிக்கிற மாதிரி இருக்கிறது. இதையெல்லாம் கோர்ட்டில் அனுமதிக்க மாட்டார்கள்.

? அப்படியென்றால் படத்தில் உங்களுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லையா?

● அப்படி என்று யார் சொன்னது? இதெல்லாம் சில்லறை விஷயங்கள். என்னை மாதிரி வக்கீல்களை வேண்டுமானால் கொஞ்சம் உறுத்தலாம். படத்தின் நோக்கத்தைப் பார்க்கையில் இதெல்லாம் அடிபட்டுப் போகும். தியேட்டரில் பார்த்தீர்களே, மோகன் பூர்ணிமாவை ஏமாற்றியவுடன் 'அடப்பாவி' என்று எத்தனை பெண்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள்? நாளைக்குக் கண்மூடித்தனமாய் ஆண்கள் பின்னால் போகாமல் இருப்பார்களே.

● பூர்ணிமா விஷயத்தை மூடி மறைக்காமல் வழக்குப் போட்டுத் தவறு செய்தவனைச் சந்திக்கு இழுத்தவுடன் 'அப்படிச் செய், ராஸ்கலை சும்மா விடாதே' என்று குமுறினார்களே. அந்த விழிப்புணர்ச்சி நம் பெண்களுக்கு ரொம்பத் தேவை.

● ஆண்களின் அதிகாரத்திற்கு நடுங்காமல் நியாயத்திற்காகத் துணிந்து நிற்கும் தைரியம் அவர்களுக்கு வேண்டும். நியாயம் கிடைத்த பிறகு அவனை மன்னித்துக் கல்யாணம் செய்ய மறுக்கிறாளே, அந்த

உறுதி நம் பெண்களுக்கு வேண்டும். இந்தப் படம் கட்டாயம் ஒரு சமுதாய பாதிப்பை ஏற்படுத்தும்.

• கண்ட கண்ட மசாலாப் படங்களின் வீச்சிலிருந்து நம் பெண்களை மீட்கிற அளவுக்கு இதில் விஷயம் இருக்கிறது சார். அத்தனை மொழிகளிலும் இது எடுபடும். என்ன சொல்றீங்க?

நிஜம் தான் என்று தோன்றியது. துணிந்து எடுத்த பாலாஜிக்கும், பாத்திரங்களுக்கு உயிரைக்கொடுத்து மனத்தில் பதிய செய்த மோகன், ஜெய், சுஜாதா, பூர்ணிமாவுக்கும் பாராட்டுக்களை அள்ளி வீசலாம்.

விதி வலியது.

பி. கு.: பாக்கியராஜை மறந்துவிடவில்லை! ஹிந்தியில் இல்லாத கூடுதல் கவர்ச்சி பாக்கியராஜ். அந்த ஐந்து நிமிடம் காற்றாட இளைப்பாறின திருப்தி.

நேரம் நல்ல நேரம்

ஊருக்கெல்லாம் பெரிய மனசுடன் வாரி வழங்கியே சந்திக்கு வந்து பெண்ணை அநாதையாக்கி விட்டுப் போகிறார் ஒரு அப்பா. சொத்துக்கு ஆசைப்பட்டுத் தம்பியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு, புருஷனின் மூத்தாள் பிள்ளையை முடமாகவே நிறுத்தி வைத்திருக்கிறாள் ஒரு சின்னம்மா. இந்தப் பையனும் அந்தப் பெண்ணும் ஜோடி சேர, இடையில் இவர்களுக்கு உதவுகிற ஒரு பளபள எருமை மாடும் உண்டு. இதை வைத்துக் கொண்டே கதை பண்ணியிருக்கலாம். ரொம்ப நிதானமாய்ப் போகுமே என்று இரண்டு மூன்று கிளைக் கதைகள் வேறு. புருஷனை வியாபாரத்திற்கு அனுப்பி விட்டு சோரம் போகிற சிலுக்கு. மழமழ முகத்தையும், உடம்பையும் காட்டி தீபா செய்கிற குளுக்கு என்று ஒட்டாத விஷயங்களையும், சேர்த்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் தீபா, அப்புறம் ஒரு கனவு சீனில் சிலுக்கு. கள்ளைக் குடித்த எருமைக்காக அனுராதா என்று மூன்று டான்ஸ் அயிட்டங்கள்.

கருப்பு முடியும், செம்பட்டை மீசையுமாய் வருகிற பாண்டியனுக்குச்சற்று வித்தியாசமான பாத்திரம் தான். உதவாத கைகால்களை இழுத்து இழுத்து நடக்கிற ஜோராகட்டும், குழுபிள்ளைத் தனமான முனகல் பழிப்புக்களை முகத்தில் காட்டுவதிலாகட்டும், நேர்மையான உழைப்புத் தெரிகிறது.

கணவன் வீட்டில் வந்து ஏடாகூடமாய்ச் சிக்கிக் கொண்டு அவதிப்பட்டு, பின்னால் அவனை அழைத்துக் கொண்டு தனியே சென்று சிறப்பாக வாழ்க்கையை நடத்தி, குடும்பத்தை உருவாக்குகிற நல்ல பாத்திரம் ஊர்வசிக்கு. இளமையான முகம், இனிமையான கண்கள். இயல்பான உணர்ச்சி பாவங்கள். தமிழுலகில் இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

ஊர்வசிக்குத் துணைநின்று எருமைமாடு செய்கிற சாகஸங்கள் நமக்கெல்லாம் ரொம்பப் புதிதில்லை என்றாலும், மனதார ரசிக்க முடிகிறது. தன் உயிரையே தியாகம் செய்து அது எஜமானியைக் காப்பாற்றுகிற இடம் தேவையில்லாத நுழைப்பு.

கதை, வசனம், டைரக்ஷன்: என். சம்பந்தம்.

ஆரம்பக் காட்சியில் பாண்டியனுக்குத் தோஸ்துகளாய் வருகிற பசங்களுக்கும், தீபாவுக்கும், சிலுக்குக்கும், இந்தப் படத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம்.

இசை: இளையராஜா. ஐந்தில் இரண்டு பாடல் ஜோர்.

'பவளமணித் தேர் மேலே'யும் 'என் அன்பே ஏங்காதே'யும் காதில் ரீங்கரிக்கின்றன.

அந்த இரண்டரை மணி நேரம் நல்ல நேரமாய் இல்லாவிட்டாலும், பொல்லாத நேரமாயில்லை.

—ஜெயமன்மதன்



மேலவைத் தேர்தல்

பட்டதாரித் தொகுதி



மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்கள் கொண்ட தமிழக பட்டதாரிகள் தொகுதியிலிருந்து ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இத்தொகுதியில் ஆறு வேட்பாளர்கள் நின்றாலும் போட்டி குறிப்பாக மூன்று வேட்பாளர்களுக்குள் தான் இருக்கிறது.

இத்தொகுதிக்கு முற்றிலும் புதிய நபர் **ஜேம்ஸ் பிரடரிக்** என்ற 44 வயதுள்ள தொழிலதிபர். இவர் கட்சி சார்பற்றுத் தேர்தலில் நிற்கின்றார். பி. டி. ராஜன் அவர்களின் இளைய மகன் பழனிவேல்ராஜன் (53 வயது) தி. மு. க. ஆதரவுடன் போட்டியிடுகின்றார், 62 வயதான தர்மராஜ் சந்தோஷம் மூன்று முறை இத்தொகுதியின் பிரதிநிதியாக இருந்தவர்; மீண்டும் தேர்தலில் குதிக்கின்றார்.

சென்ற 1978—ஆம் ஆண்டு தேர்தலில் சுமார் 15 ஆயிரம் வாக்காளர்களே இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்டு இருந்தனர், இந்த முறை 64 ஆயிரத்துக்குமேல் பதிவாகி உள்ளனர். சாதாரணமாக, மேலவைப் பட்டதாரிகள் தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டதாரிகள் பொதுத் தேர்தலைப் போல் பரபரப்பையும், ஆர்வத்தையும் காட்டுகின்றனர். இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டதன் காரணத்தை **ஜேம்ஸ் பிரடரிக்** விளக்குகிறார்.

சுமார் ஒன்றேகால் லட்சம் பட்டதாரிகள் உள்ள இத்தொகுதியில் சென்ற தேர்தலின் போது சுமார் 15 ஆயிரம் வாக்காளர்களே பதிவு செய்து இருந்தனர் என்ற செய்தி எனக்கு ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் தந்தது.

''படித்த பட்டதாரிகள், அரசியலமைப்பில் அவர்களுக்களிக்கப்பட்டிருக்கும் தனிப் பிரதிநிதித்துவத்தில் ஏன் அக்கறைக் காட்டவில்லை? நான் ஒரு பட்டதாரி என்ற முறையில் பிரபல இனத்தாள்களில் ''பட்டதாரிகளுக்கோர் வேண்டுகோள்'' என்ற தலைப்பில் என் எண்ணங்களைத் தெரிவித்தேன், அதைப் படித்த ஆயிரக்கணக்கானவர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்தன தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் ஒன்றையும் மேற்கொண்டேன். வியப்பளிக்கும் பல உண்மைகள் தெரிய வந்தன. பொதுவாக மேலவைப் பட்டதாரித் தொகுதித் தேர்தலைப் பற்றிய தெளிவான கருத்துக்கள் பலரிடம் காணப்படவில்லை. இத்தேர்தலைப் பற்றித் துளியும் தெரியாத, இத்தேர்தலில் இதுவரை வாக்களிக்காத பட்டதாரிகள் பலர் இருந்ததைக் கண்டேன். பல்கலைக் கழக செனட் தேர்தலைப் போன்று இதற்கும் ரு 5, ரு 10 என்று பதிவுக் கட்டணம் இருப்பதாக எண்ணிப் பதிவு செய்யத் தவறியவர்கள் ஏராளம். இந்தத் தவறான எண்ணத்தைப் பயன்படுத்திக் கொண்டு வாக்காளர் தங்களுக்கு வாக்களிக்க கடமைப் பட்டவர்களாக்க அவரின் பதிவுக் கட்டணத்தைத் தாங்களே கட்டி விடுவதாகச் சொல்லும் வேட்பாளர்களையும், அதை நம்பிய பட்டதாரிகளையும் பார்த்தேன். அரசியல் கட்சிகளுக்குச் சம்பந்தப்படாத இத்தேர்தலிலும் அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை ஆதரிப்பதையும் அறிந்தேன். பொதுத் தேர்தல் போன்று இதிலும் இடம், இனம், சாதி, சமயம் போன்றவற்றின் அடிப்படையில் வாக்காளர்கள் அணுகப்படுவது கண்டு வெட்கமுற்றேன்.

''பல சங்கப் பிரதிநிதிகளின் அன்பு வேண்டுகோளுக்கிணங்கி, இத்தேர்தலில் போட்டியிட யோசிக்கையில் என் வாழ்க்கை பின்னணியையும், நான் சாதித்த சாதனைகளையும், செய்து கொண்டிருக்கும் சமுதாயப் பணிகளையும் சுருக்கமாக ஒரு ஒளி, ஒலிக்காட்சி மூலம் பல பட்டதாரிகளுக்குக் காட்டினேன். வாக்காளர் பலருக்கு நேர்முகக் கடிதம் எழுதினேன், என்னைப் பற்றி அறிந்தபின், நான் தேர்தலில் நிற்கத் தகுதியுள்ளவனா என்ற அவர்களுடைய கருத்தினை அறிய முயன்றேன். பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் என்னைத் தேர்தலில் நிற்குமாறு பணிந்து கடிதம் எழுதினர். அவர்கள் அளித்த ஊக்கத்தினால் இன்று தேர்தலில் நிற்கின்றேன்'', என்று கூறினார்.

''கட்சி அரசியல் மேலவைத் தேர்தலிலும் புகுந்து விட்டது'' என்று பலர் குறை கூறுகிறார்களே என்று கேட்டபோது ''இது துரதிருஷ்டமான உண்மை. அரசியலமைப்பில் எந்த ஒரு காரணத்துக்காக மேலவைத் தேர்தலைக் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு வைக்கப்பட்டுள்ளதோ அந்த அடிப்படை தகர்க்கப்படுகிறது.

''பட்டதாரிகளும், ஆசிரியர்களும் தனிப் பட்ட முறையில் கட்சி லட்சியங்களில் ஈடு

படலாம். அவர்கள் பொதுத் தேர்தலிலும் கட்சி அடிப்படையில் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால், ஆலோசனை கூறும் அளவே அதிகாரம் பெற்ற மேலவைக்கு, தொழில் மற்றும் பொருளாதார வல்லுநர்களைச் செயலாற்றல் உள்ளவர்களை, கலைஞர்களை, இலக்கிய கர்த்தாக்களை, சிந்தனையாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக எப்போதாவது ஏற்படக் கூடிய சட்டப் பேரவையில் அத்து மீறல்களிலிருந்து ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பளிக்க வேண்டாமா? நம் அரசியலமைப்பில் மேலவைகளை வைத்திருப்பதன் நோக்கமே இதுதான்.

''ஆனால் இந்த உண்மைகள் புறக்கணிக்கப்பட்டுக் கற்றுணர்ந்த பட்டதாரிகளாகிய நாமே, அரசியல் கட்சி சாதி, சமயம் வேற்றுமைகளால் நம்மை ஆட்சி செய்ய விட்டு நம்மை ஏமாற்றிக் கொள்கிறோம்.''

ஜேம்ஸ் பிரடரிக்கின் நம்பிக்கை வீண் போகவில்லை என்று தெரிகிறது. மூன்று மாதங்களுக்கு முன் இத்தொகுதியில் அவ்வளவாக அறிமுகமில்லாத இந்த விந்தை மனிதர்பால் பல்லாயிரக்கணக்கான இளம் பட்டதாரிகள் காந்தம்போல் இழுக்கப்பட்டு, சலியாது, அயராது அவரது வெற்றிக்குச் செயல்படுகின்றனர்.


அவருடைய தேர்தல் முறைகள் மேனாடுகளில் நடப்பது போல் புதுமையாக, ஜனநாயக முறையில், அரசியலமைப்பின் இலக்கணமாக நடந்து வருகின்றன. எப்போதும் சிரித்த முகத்துடனும், எல்லோருடனும் இனிமையாகவும், எளிமையாகவும் பழகும் இவ்விளைஞரின் வெற்றி வாய்ப்பு பேரலையாக உருவெடுத்துக் கொண்டிருப்பது தெளிவு.

அரசியல் மூதறிஞர் ராஜாஜி சிறையிலிருந்து 1922—ல் கூறிய வாசகங்களை **ஜேம்ஸ் பிரடரிக்** நினைவு கூர்கிறார்:

''சுதந்திரத்துக்குப் பிறகு, லஞ்சமும், அதிகாரமும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும், அதனால் வரும் தீமைகளும் தேர்தல் முறைகேடுகளும் நாம் பெற்ற சுதந்திரத்தில் முழுபலனை அடையாமல் செய்யப் போகின்றன. நாம் பெறும் ஒரே நன்மை அடிமைத் தளத்திலிருந்து விடுதலை பெற்றோம்; தன்மானத்தைப் பெற்றோம் என்பது தான்.''

இன்னமும் 64 சதவிகிதத்தினர் கல்வியறிவு இல்லாத இந்நாட்டில், உண்மையான விடுதலையின் பயனைப் பெற வேண்டின் கற்றறிந்த படித்தவர்கள் யாவரும் ஒரே கட்சியாக இயங்க வேண்டும். இந்தத் தேர்தல் தென் மாவட்டங்களிலாவது இதை நிரூபிக்குமா?

பொறுத்திருந்து பார்ப்போம்.



விசாரணை தேவையா? தூக்கிலிட வேண்டாமா?

○ டி. ராஜன், ஊசூர் வெளிக் கடை.

? சேலையா, முந்தானையாப் பிரச்னை முன்னுள் இன்னுள் முதலமைச்சர்களுக்கு அவசியம்தானு?

! இல்லை.

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? பால் கமிஷன் அறிக்கை வெளியிட்டதற்காக கலைஞர் மீது வழக்குப் போடுவது பற்றித் தங்கள் அபிப்பிராயம்?

! ஜனநாயகத்தில் மக்களிடமிருந்து எதையும் மறைத்து வைக்க அவசியமில்லை; மிக முக்கியமான பட்ஜெட், பாதுகாப்பு அம்சங்களைத் தவிர வேறு ரகசியம் ஏதும் இருக்கக்கூடாது என்று வாதாடி வெற்றி பெறக் கருணாநிதிக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.



○ தலைபோகிற...

○ பி. ராமகிருஷ்ணன், மேல கிருஷ்ணன்புதூர்.

? கே. பாலாஜியின் படங்களின் வெற்றிக்குக் காரணம்யார்?

! ரிஸ்க் எடுக்காமல் வெற்றிப் படங்களையே தேர்ந்தெடுத்துத் தமிழாக்கம் செய்கிற அவரே தான்.

○ க. ஜமீல், திருமங்கலக்குடி.

? ஐ. ஏ. எஸ். அதிகாரி நாகராஜன் மேல் உள்ள வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளதே தமிழக அரசு?

! வழக்குத் தொடுப்பதும் வாபஸ் பெறுவதும், பதவி நீக்கம் செய்வதும் இரும்பப் பதவி அளிப்பதும், சட்டம் கொணர்வதும் அதை வாபஸ் பெறுவதும், வரிவிதிப்பதும், அதை நீக்குவதும் இன்றைய தமிழக அரசுக்குத் தண்ணீர் பட்ட பாடு. எண்ணித் துணியாமல் துணிந்த பின் எண்ணுவதே காரணம்.

○ ஜி. குமரேசன், பாண்டமங்கலம்.

வீடியோ சினிமா படங்களுக்குத் தனியே தணிக்கையாமே?



○ ஏற்காத சவால்கள்

! மதுவிலக்கை அமல்படுத்த முடியாதென்று ரத்து செய்தவர்களால் நிறைவேற்ற முடியாத எத்தனையோ சட்டங்களுள் ஒன்று. சென்சாரில் நியமனமாகும் சிலருக்கு ஆதாயம்.

○ ஜி. பாரதி, காங்கயம்.

? ஒன்பது பேரைக் கொலை செய்த ஜெயப்பிரகாசனுக்கு நீதி விசாரணை தேவை தானு? உடனே தூக்கிலிட வேண்டாமா?

! கூடாது. அவன் மனநோய் உள்ளவனுகக் கருதப்பட்டுச் சிகிச்சைக்குக் கூட அனுப்பப் படலாம். சட்டம் தன் போக்கில் செயல்பட அனுமதிப்பதே நல்லது.

○ ஆர். நாகராஜன், பள்ளத்தூர்

? இப்போது நடக்கும் ஆட்சிக்கு தி. மு. க. ஆட்சியே தேவலாம் போலிருக்கிறதே?

! அப்போதைய ஆட்சிக்குக் காங்கிரஸ் ஆட்சியே தேவலாம் என்று என் தாயாரும் அதற்கு பிரிட்டிஷ் ஆட்சியே எவ்வளவோ மேல் என்று என் தாத்தாவும் கூறுகிறார்கள்.

○ சுபாஷ்சந்திரன், மதுரை.

? 4.3.84 இதழில் உங்கள் பதிலில் நேதாஜி பற்றிய பிரஸ்தாபம் விரசமாயிருக்கிறதே? தேசிய உள்ளங்களை ஏன் பிராண்டுகிறீர்கள்?

! பிரிட்டிஷார் நேதாஜி பற்றி என்ன நினைத்தார்கள் என்று தான் நான் கூறினேனே தவிர அது தேசிய உள்ளங்களின் கருத்து அல்ல. என் உள்ளத்தை ஏன் பிராண்டுகிறீர்கள்?

○ ஆர். சிவராஜ், வல்குடி.

? தமிழக பட்ஜெட் எப்படி?



○ ...பிரச்னை!

! முகர்ஜி பட்ஜெட்டால் மத்தியதர வகுப்பினர் பெறக் கூடிய ஒரு சிறிது ஆறுதலை நெடுஞ்செழியன் பட்ஜெட் இல்லையென்றாக்கி விட்டது.

○ எம். தாமஸ், நாகர்கோவில்★

? இந்தியாவில் திடீரென்று ஒருநாள் ராணுவ ஆட்சி வந்தால் அரசியல்வாதிகள் என்ன செய்வார்கள்?

! அட்டென்ஷனில் நின்று சல்யூட் அடிப்பார்கள்.

○ ரெ. செ. கமலம், திருச்சி.

? அரசியல்வாதிக்கும் நடிகருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

நீங்கள் கேட்டவை — தராசு

! வேற்றுமை இல்லாததே ஒற்றுமை என்பதாக நிரூபிக்கப்பட்டு வருகிறது.

○ நித்யா, கோவை.
? ஒரே வீட்டில் ஒன்பது பேர் கொலையாமே? நாம் இருப்பது தமிழ்நாடா இல்லை ஏதாவது காட்டுமிராண்டி தேசமா?
! நூறுவது நாள் போன்ற அதை விடவும் மோசமான திரைப்படங்கள், லாட்டரி, மது, தரம் கெட்ட பத்திரிகைகள், கொள்கைப் பிடிப்பற்ற சுயநல அரசியல் போன்ற பல அம்சங்கள் தமிழ்நாட்டைக் காட்டுமிராண்டி தேசமாக உருமாற்றி வருவதென்னவோ உண்மை.

○ ரம்யா, கோவை-16.
? கொடைக்கானல் கோஹினூர் சேக் அப்துல்லா மாளிகை ஆனது பற்றி?...
! வித்திட்டு நீர் வார்த்தவர் கலைஞர், காய் பறித்துச் சமைத்துண்பவர் முதல்வர்.

○ எம். சம்பத், வேலாயுதம் பாளையம்,
? மணிவண்ணனின் நூறாவது நாள் பார்த்தீர்களா?
! பார்த்துவிட்டு வேலாயுதம் பாளையம் வரவா?

○ எஸ். சம்பத்குமார், சென்னை 5.



○ ஆறுதல் இல்லை

? கலவரம் என்றால் எல்லோரும் பல்லவனைப் பதம் பார்த்து விடுகிறார்களே?
! கலவரம் இல்லாத காலங்களில் பல்லவன் நம்மைப் பதம் பார்ப்பது ஒரு காரணமாய் இருக்கலாம்!

○ க. தியாகராசன், நெய்வேலி,
? பொதுத் தேர்வில் வந்தால் வெற்றி பெறப் போவது சிவாஜி ரசிகர்களா? எம்.ஜி.ஆர். ரசிகர்களா?
! இருவரும் சேர்ந்து.

○ ஆர். அப்துல்சலாம், திருச்சி.
? அரசியலைப் பொறுத்தவரை இந்திராவுக்குத் தமிழகம் ஒரு சவால்தானே?
! சந்தித்து வெற்றி பெற முடியாத சவால் அல்ல. எமர்ஜென்ஸிக்குப் பிறகு பதவிக்கு வந்த இந்திரா வெகு மென்மையாகி விட்டார். பிரச்னைகளைச் சந்திக்காமல் ஆறப் போட்டாலே சரியாகி விடும் என்பதுபோல் நடந்து கொள்கிறார்— தேசிய அளவில் மிகப் பெரிய பிரச்னைகளுக்குக் கூட இந்தக் கதிதான்.

○ எஸ். இராமநாதன், அருப்புக் கோட்டை.
? தமிழ்நாட்டு அரசியலைப்பற்றி சொன்னின்இலக்கணம்என்ன?
! ஜனதா ஜே. ஜே! மற்றவர்கள் வெவ்வே!

○ எஸ். வெங்கடேசன், கும்பகோணம்
? ஏழையின் வாழ்வைச் சூறையாடுவதில் அதிகப் பங்கு வகிப்பது சாராயக் கடையா, லாட்டரிச் சீட்டா?
! சாராயம் பணத்துடன் உடல் ஆரோக்கியத்தையும் சூறையாடுகிறது. லாட்டரி பணத்துடன் மன ஆரோக்கியத்தைச் சூறையாடுகிறது. என்றாலும் இரண்டாவது சூறையாடல் அளவில் குறைவுதான்.

○ வி. கே. துரைசாமி அய்யர், திருச்சி

○ தராசுக்குருட்டு



? ராஜீவ் காந்தியை இந்திராவின் வாரிசாக நியமித்து விடுவார்கள் என்று பேசப்படுவது பற்றி...
! அதுமட்டுமா பேசுகிறார்கள்? அடுத்த தமிழக முதல்வர் ஜெயலலிதா தான் என்று கூடப்பேசுகிறார்கள். மக்கள் இதை மெய்யாக்கினால் நீரும் நானும் குறுக்கே நின்று தடுக்கவா முடியும்? அனுபவிக்க வேண்டியது தான்!

○ எஸ். சௌரிராஜன், லெட்சுமாங்குடி.
? கவலை தரும் லேட்டஸ்ட் செய்தி...?
! மறுபடி மதமாற்றும் வேலை பெரிய அளவில் நடக்கிறது என்பது தான். ராமநாதபுரம் மாவட்டத்தில் 10 கிராமங்களைச் சேர்ந்த 3000 பேர் இஸ்லாமைத் தழுவப் போகிறார்கள் என்பது கடைசியாக வந்த செய்தி. மதம் மாறுகிறவர் தன்னிச்சையாகச் செயல்படுவதாகக் கூறி மாஜிஸ்திரேட்டுக்கு விண்ணப்பித்து ஒரு மாதம் கழித்து நேரில் வந்து அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் அவருடைய அங்கீகாரம் பெற வேண்டும் என்று சட்டமியற்றினாலன்றி முறைகேடுகள் நடக்கவே செய்யும்.



○ ஜனதா ஜே.ஜே

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
எம். தாமஸ்,
39, பந்தல்விளை,
நாகர்கோவில் 629 001



வட்டமேஜை

பஸ்ஸிலே குடிமகன்

● நேற்று மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்புகையில் பசியோடு, களைத்துப் போய் 19—ம் பேருந்தில் (திருவான்மியூர் ரூட்) ஏறினேன். வழக்கம் போல், எக்கச்சக்கக் கூட்டம். போதாக் குறைக்குக் கால் வைக்க இடமில்லாமல் தரையில் மீன் கூடைகள். எனக்குப் பின்னால் என் மீது ஆடி விழுந்து கொண்டு சாராய நெடியுடன் 'புஸ்', 'புஸ்' என்று மூச்சு விடும் ஆசாமி. முன்னே செல்ல முடியாமல் வழிநெடுகக் கூடைகள். பயணிகள் 'நமக்கென்ன?' என்று இருந்து விட்டனர். கண்டக்டர் கண்டுகொள்ளவில்லை! இந்த நிலையில் புதுமைப்பெண் கூட ஒன்றும் செய்திருக்க முடியாது.

அநாகரீகமாய் நடந்து கொண்டவரைக் கண்டிக்கவோ, தட்டிக்கேட்கவோ, ஆளில்லை. மாறாக, என்னை ''அடுத்த ஸ்டாப்பில் இறங்கி விடுங்கள்'' என்று ஒரிருவர் உபதேசித்தனர்! கள்ளுக் கடையை மூடத்தான் அரசுக்கு வக்கில்லை என்றால் குடிகாரனை பஸ்ஸில் ஏற்றாதே என்றாவது கட்டளை பிறப்பிக்கலாமே!

சென்னை—41.

ஆர். அலமேலு.

(பரிசுக் கடிதம்)

● சென்ற (4.3.84) இதழ் கல்கியை ஒவ்வொரு வாசகரும் பொக்கிஷம் போல் பாதுகாக்கும்படி தயாரித்துள்ளீர்கள்.

சிதம்பரம். மா. வடிவேல்.

● ''சரித்திரம் உருவாகிறது'' பகுதியில் விண்வெளி வீரர்களுக்குத்தரும் கடுமையான பயிற்சிகளைப் படித்து விட்டு விண்வெளிக்குப் போகவேண்டும் என்ற நப்பாசையை அறவே மறந்து விட்டேன்.

சென்னை—28. தி.க.ஸ்ரீராம்

● கல்கி ஏந்தி வந்த மருத்துவக் கையேடு ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டிய ஒன்று.

விருத்தாசலம்—1.

—நாகை. பொன்னி.

● 'நல்வாழ்வுக்கான பத்து கட்டளைகள்' என்னை மிகவும் கவர்ந்து விட்டது.

சென்னை—1

—நாகை ஜி. அநுமது.





● பஞ்சாப் நிலைமை பற்றிய உண்மைக் கதைகண்டேன். பஞ்சாபின் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தும், பஞ்சாபை இன்னொரு அஸ்ஸாமாக்கி, பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணாமல் மெத்தனம் செய்து வருகிறது நமது மத்திய அரசு.

செங்கவல்லி

—ராணி

● அயல்நாடுகளில் ஆண்டுக் கணக்கில் உழைத்துச் சம்பாதித்துத் தாய்நாடு திரும்புகிறவன் வீட்டிற்கு எடுத்து வரும் பொருளுக்கு ஏகப்பட்ட வரி! ஆனால், அயல்நாட்டைச் சில நாட்கள் ஜாலியாய்ச்சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்புகிற மந்திரிகளுக்கு வரியில்லை — வாழ்க, மக்கள் பிரதிநிதிகள்!

636105

—முருகவேள்.

● சுப்பிரமணிய சிவா அவர்களைப் பற்றிய கடைசி பக்கக் கட்டுரை அவருக்குச் செலுத்தப்பட்டச் சிறந்த அஞ்சலியாகும்.

லால்குடி.

—ஆ. சந்திரசேகரன்.

● தேசப் பற்றை சரித்திர நிகழ்ச்சியுடன் கலந்து எழுதப்பட்ட ''கோவி.மணிசேகரனின் 'பூ' '' கதை அருமை.

ஒசூர் வெளிக்கடை.

டி. ராஜன்.

● ம்ம்ம்மாாாஹ்... படிச்சாலும் படிச்சேன். அம்மம்மா! சதா மாடு.... இல்லே... பசு... அம்மா... நினைப்புத்தான் இருக்கு.

சென்னை—39.

திருமதி. நாராயண ராவ்.

● ஓவியர் உமாபதியின் துணையோடு சிரிப்ஸ் என்ற




தலைப்பில் இடம் பெற்றிருந்த நகைச்சுவைத் துணுக்குகள் பத்தையும் படித்துச் சிரித்தேன்.

சிவகாசி. கே. ராகவன்.

● ''விண்வெளியில் இந்தியன்!'' என்ற பெருமையை நாம் அடைய, உறுதுணையாக உள்ள சோவியத் யூனியனை நாம் பாராட்ட வார்த்தைகளே இல்லை!

திருச்சி—20.

ஆர். அப்துல் சலாம்.



ரயில்வே அமைச்சர் கனிகான் சௌத்ரியின் பட்ஜெட்டைப் பற்றிய விவரங்களைப் படித்துக் கொண்டிருந்த போது என் மனைவி கமலா ''உங்களைத்தானே...'' என்று கூப்பிட்டாள். மார்க்கெட்டுக்குப் போக ஒரு மினி – உத்தரவு போட்டாள்.

பெட்ரோல் பங்கிற்குப் போய் ஸ்கூட்டருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டேன். இரண்டு லிட்டருக்குப் பதின்மூன்று ரூபாய்'' என்றார் பங்க் காரர். ''எப்போ பெட்ரோல் விலை ஏறித்து?'' என்று கேட்டேன்...''மத்தியமானில பட்ஜெட்களில் விலை ஏறலாம். இப்ப ஏறலே. சில்லறை இல்லாததாலே முழு ரூபாயாகச் சார்ஜ் பண்றோம்'' என்றார்.

''அநியாயமாக இருக்கிறதே. ரூபா 6.27 தானே பில்'' என்றேன்.

''ஒரு காரியம் செய்யுங்கள். நூறு லிட்டர் போட்டுக் கொள்ளுங்கள். மொத்தமாக 627 ரூபாய் கொடுத்து விடுங்கள்.''

''செய்யலாம். ஆனால் ஒரு ரூபாய் நோட்டு இல்லை என்பாயே.''

''அப்படிச் சொல்ல மாட்டோம். பாக்கிப் பணம் 73 ரூபாய் என்று ரசீது பின்னால் எழுதிக் கொடுத்து விடுவோம்.''

''பகல் கொள்ளையாக இருக்கிறது நீங்கள் செய்யறது. அரசாங்கம் உங்க மேலே ஆக்ஷன் எடுக்கும்.''

''தமாஷ்தான். மந்திரி கனிகான் சௌத்ரி மேலே கூட எடுக்கணும்னு சொல்லீங்க போல இருக்கே!''

''ஓ! அப்படியா?'' என்று சொல்லி நகர்ந்தேன்.

''கனிகான் வாழ்க!'' என்றான் பங்க் காரர்.

மார்க்கெட்டில் பத்து பைசா கருவேப்பிலை வாங்கிக் கொண்டு ஒரு ரூபாய் கொடுத்தேன்.

''சரியாப் போச்சங்க'' என்றாள் கருவேப்பிலைக்காரி.

''எப்படி?''

''சில்லறை இல்லீங்க... அதனாலே ஒரு ரூபாயாக்கிட்டேன் வெலையை.''

''ஒரு ரூபாய்க்கு என்றால் இதுமாதிரி பத்து மடங்கு கொடு... அது நியாயம்.''

''ஆமாம். என்கிட்டே நியாயத்தைக் கேளு. எட்டணா பிளாட்பாரம் டிக்கெட் ஒருரூபாய் ஆச்சே... ஒன்னே இரண்டு தபா உள்ளே போய் வர்றத்துக்கு உடுவாங்களா... அது மாதிரி தான் கருவேப்பிலையும்... கனிகான் சௌத்ரி வாழ்க'' என்றாள்.

''அப்புறம் எந்த கறிகாயும் வாங்க முடியவில்லை. அதாவது வாங்கத் தைரியம் வரவில்லை. விலைகள் 2 ரூபாய் 25 காசு, 3 ரூபாய் 30 காசு என்று இருக்கிறதேதவிர, முழு ரூபாயாக இல்லாத போது எப்படி வாங்க முடியும்? இந்தக் கனிகான் சௌத்ரியை இத்தனை பேர் வாழ்த்தும்போது





நான் அவர் பேரில் கோபத்தையோ, வருத்தத்தையோ எப்படித் தெரிவிக்க முடியும்?

வீட்டிற்கு வந்து விஷயத்தைக் கமலாவிடம் சொன்னேன். அவள் உடனே ''சரியான அசடுதான் போங்கோ... பெட்ரோல் தான் நூறு லிட்டர் வாங்க முடியாது. சரி... கறிகாய்களை மூழு ரூபாய் வருகிற மாதிரி கணக்குப் போட்டு ஐந்து கிலோவோ ஏழு கிலோவோ வாங்கி வருகிறது'' என்றாள்.

''இருக்கிறது நாம் இரண்டு பேர். ஏழு கிலோ, எட்டு கிலோ வாங்கினால் பாழாய்ப் போகாதா?''

''எப்படிப் போகும்? என் தம்பி தொச்சுவிற்கு, ஜாஸ்தியாக இருப்பதைக் கொடுத்து விட்டால் போகிறது. ஒருத்தருக்கு ஒரு கண்டைக்காய் கொடுக்க மனசு வராதே..'' என்றாள். ''சரி'' என்றேன்.

போன ஜன்மத்தில் கனிகான் சௌந்ரிக்கு தொச்சு பால் அபிஷேகம் முதலியவை செய்திருக்க வேண்டும்! தொச்சு மட்டுமா? இல்லை. இன்னும் பல நூறு ஆயிரம் பேர்;

உங்கள் ஓட்டு யாருக்கு?

பஞ்சாயத்துத் தேர்தலும் கூடவே பொதுத் தேர்தலும் வரப்போகின்றன. 'உங்கள் ஓட்டு யாருக்கு?' என்று கேட்கிறார் வெங்கட்...

தலைவர்: வணக்கம், மிஸ்டர் சந்திரன்!

சந்திரன்: அடேடே, வாங்க. உங்க காலடி பட என் வீடு என்ன பாக்கியம் பண்ணியிருக்கணும்.

தலைவர்: இதையெல்லாம் மேடையில் பேசுங்க. இப்போ நான் எதுக்காக வந்தேன்னு...

சந்திரன்: தெரியும். அகில இந்திய பெரியப்பா முன்னேற்றக் கழகம் இப்போ நல்லா வளர்ந்துகிட்டு இருக்கிற ஒரு கட்சி. காலஞ்சென்ற தமிழ்நாட்டு ஷேக்ஸ்பியர் என்று புகழப்படுகிற தலைவர் பெரியப்பா கண்ட கனவுதான் இந்தக் கட்சி. அதுக்கு நீங்க தலைவர். தொண்டனுகவே இரு; எம். எல். ஏ. ஆக ஆசைப்படாதேன்னு எனக்கு அட்வைஸ் பண்ண வந்திருக்கீங்க. சரிதானே?

தலைவர்: அதுதான் இல்லே. உங்களை வர தேர்தல்லே நிக்க வைக்கறதா நேத்து ராத்திரி நடந்த கட்சி அவசரக் கூட்டத்துல சாவகாசமா முடிவு செஞ்சோம்.

சந்திரன்: எந்தத் தொகுதி? சைதையா? மாம்பலமா? புரசையா? கோவையா? மதுரையா? சட்டுன்னு சொல்லுங்களேன் — சஸ்பென்ஸ் தாங்காது

தலைவர்: தாமரைக் குளம்.

சந்திரன்: தாமரைக்குளமா?

தலைவர்: இத பாருங்க. அந்தத்தொகுதில நம்ம கட்சி பேரைச் சொல்லிஒரு கழுதையை நிக்க வைச்சாக் கூட அது ஜெயிக்கும். அதான் உங்களை அங்கே நிறுத்தறோம்.

சந்திரன்: அந்த உசிலம்பட்டி வேகன்ட் ஆக இருக்குதே?

தலைவர்: அதில உசிலைமணி நிக்கறாரு.

சந்திரன்: வேதநாயக்கன்பட்டி?

தலைவர்: முந்தாநா வரை வேகன்டாயிருந்துது. இப்போ திருத்தணிபாபா நிக்கறாரு.

சந்திரன்: ஏற்காடு என்ன ஆச்சு?

தலைவர்: அங்க நான் நிக்கறேன் — இப்போ சீனைப் பாருங்க!...

பத்திரிகை ரிப்போர்ட்டர் சந்திரன் தாமரைக்குளம் கிராமத்துக்குப் போவானேன்? அங்கே கிராமத்துப் பெண் தங்கத்தைக் கெடுப்பானேன்? அப்புறம் அரசியலில் அவன் நுழைந்ததும், தேர்தலுக்குத் தாமரைக்குளத்திலேயே நிற்கத் தலைவர் ஆணையிடத் தவியாய்த் தவிப்பானேன்! சந்திரன் ஜெயிக்கிறானா? தங்கத்தைச் சேர்த்துக் கொள்கிறானா? நாடக மேடையில் காண்க.

நிற்க. சந்திரனாகக் கண்ணனும், அரசியல் தலைவராக கோபாலும், கர்ணமாக சங்கரும், பெரிய பண்ணை, சின்னப் பண்ணையாகத் தியாகு — பஞ்சுவும் கச்சிதமாகச் செய்திருக்கிறார்கள் என்றால்; மனோரமா — சச்சு வழியைச் சிக்கெனப் பிடித்துக்கொண்ட குட்டி பத்மினி தங்கமாக வந்து கிராமிய வசனங்களைப் பிசிறடிக்காமல் பேசி நடிக்கிறார்.

அநேகமாக, தேர்தல் சமயத்தில் 'உங்கள் ஓட்டு யாருக்கு?' திரைப்படமாக வெளிவரும் போலிருக்கிறது. நாடகம் பார்த்த அன்று, படத்துக்குப் பூஜை போடப் போகிற தேதியை அறிவித்துவிட்டார்கள். தலைவராக யார் தெரியுமோ? வேறு யார்? 'சோ'தான்!

-சாருகேசி



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

என்னோட பல் டாக்டரிடம் கேட்டேன்— போர்ஹென்ஸ் எனக்கு நல்லதுன்னு நீங்க நினைக்க காரணம் என்ன டாக்டர்?

“உங்கள் ஈறுகள் உறுதியோடிருக்கும்போது, உங்கள் பற்கள் நீடித்த ஆயுளைப் பெறுகின்றன...”

ஈறுகளை பலப்படுத்துவதற்கான விசேட அஸ்ட்ரிஞ்ஜெண்ட் அடங்கியிருப்பது போர்ஹென்ஸ் ஒன்றில்தான்.



போர்ஹென்ஸில் உள்ள விசேட அஸ்ட் ரிஞ்ஜெண்ட் என்னும் உட்பொருள், சிறந்த அமெரிக்கப் பல் டாக்டர் ஆர். ஜே. போர்ஹென் அவர்களால், அதில் சேர்க்கப்பட்டுள்ளதாகும் என அவர் கூறினர். அது ஈறுகளில் நேரடியாக செயல்பட்டு உண்மை யிலேயே அவற்றை பலப்படுத்து கிறது. அது ஈறுகளை உறுதிப் படுத்துவதால், பற்கள் சிறந்த பிடிமானத்தைப் பெறுகின்றன. ஆகவே பற்களுக்கு நீடித்த ஆயுள் கிடைக்கிறது.

இப்போதிலிருந்து, எப்போதுமே நான் போர்ஹென்ஸ் தவிர வேறு எந்த டூத்பேஸ்ட்டையுமே உபயோகிக்க மாட்டேன்.



338F 203 TAM

போர்ஹென்ஸ் —பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

